DCS
www.statistics.gov.lk

தேசிய கொள்கைகள் மற்றும்
பொருளாதார அலுவல்கள்
அமைச்சு

# சிறுவர் இல்லக் குழந்தைகள் பற்றிய தொகைமதிப்பு 2019

## கிழக்கு மாகாணம்

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்
மற்றும்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்

# சிறுவர் இல்லக் குழந்தைகள் பற்றிய தொகைமதிப்பு 2019
# கிழக்கு மாகாணம்

2021 டிசெம்பர் 31

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்

**ISBN 978-624-5919-52-9**

## முகவுரை

பிள்ளையின் உடல், மன மற்றும் கல்வி போன்ற வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் நடைபெறும் வளர்ச்சி "பிள்ளை விருத்தி" எனப்படும். இதன் போது சத்தான உணவு மற்றும் பெற்றோர் மற்றும் பெரியவர்களின் அன்பு, பெற்றோரிடமிருந்து மன வளர்ச்சிக்கான அரவணைப்பு, இரக்கம் மற்றும் தொடர்பு ஆகியவை அவசியமாகும். மேலும் பிள்ளையின் முதன்மை சமூகமயமாக்கலுக்கு வயது வந்தோரின் அனுபவம் மிகவும் முக்கியமானதாகும்

ஆனால் ஒரு குடும்பத்தில் பாதுகாப்புக் கிடைக்கப் பெறாத சிறுவர்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டாலும் கூட பெரியவர்களிடமிருந்து, பெற்றோரிடமிருந்து கிடைக்கப்பெறும் அதே அன்பையும் அரவணைப்பையும் சிறுவர்களுக்கு நிறுவனமயப்படுத்தப்பட்ட பராமரிப்பின் கீழ் வழங்குதல் கடினமான பணியாகும். மேலும் சிறுவர் உரிமைகள் தொடர்பான மாநாட்டின் 9 மற்றும் 10 பிரிவுகளில் கவனம் செலுத்தும் போது பிள்ளையின் அதிகபட்ச நன்மைக்காக ஒரு குடும்பத்தில் வாழ்வது இன்றியமையாத காரணியாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இலங்கையில் சிறுவர்களுக்கு மாற்றுப் பராமரிப்பை வழங்குவதற்கான விதிகள் இருந்தாலும், அனைத்து மாகாணங்களிலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிகாட்டுதல் இல்லை. இந்த சூழ்நிலையிலும் கவனம் செலுத்தி 06.03.2019 அன்று செயல்படுத்தப்படும் "தேசிய மாற்று பாதுகாப்புக் கொள்கை" உருவாக்கப்பட்டு அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது.

அந்தக் கொள்கையின்படி, அனாதை இல்லங்களில் உள்ள சிறுவர்களை விட அதிகமான சேவைகள் மற்றும் நலன்புரி கொடுக்கல் வாங்கல் திறன்களை ஆராய்ந்து அவர்களை சமூகமயமாக்கும் நோக்கத்துடன் அந்தச் சிறுவர்களைப் பற்றி முறையான தரவு சேகரிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் அவதானிப்பாகும். அதன்படி, தீவில் உள்ள சிறுவர் இல்லங்களில் உள்ள அனைத்து சிறுவர்களின் விவரங்கள்/ தரவுகள் முறையான முறையில் சேகரிக்கப் பெற்று சிறுவர் இல்லத்தில் உள்ள சிறுவர்களின் நலனுக்காகப் பணியாற்றுவதற்கு நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் மற்றும் தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்துடன் இணைந்து சிறுவர் இல்ல சிறுவர்கள் பற்றிய தொகைமதிப்பு நடவடிக்கையை மேற்கொண்டது. நாட்டிலுள்ள அனைத்து சிறுவர் இல்லங்களிலும் உள்ள சிறுவர்களின் தரவுகள் சேகரிக்கப்பட்டு தேசிய அளவிலான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது அந்த அறிக்கையின் மூலம், ஒட்டு மொத்த சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்களின் நிலைமை பற்றிய தெளிவான விளக்கமொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அந்த தரவு/ தகவல்களின் அடிப்படையில் தேசிய செயல் திட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்பதுடன் அந்த வேலைத்திட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது

ஒட்டுமொத்த கணக்கெடுப்பு அறிக்கையின்படி, மாவட்ட அளவிலும், மாகாண அளவிலும், சிறுவர் இல்லங்களில் சிறுவர்கள் உள்ளனர் என்பதுடன் அவர்களின் எண்ணிக்கை மற்றும் கவனத்தில் கொள்ளப்பட்ட ஏனைய விடயங்கள் தொடர்பில் பல முரண்பாடுகள் உள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் ஒரு கீழ் நோக்கிய ஆளணிப் பரவலாக்கத்தைக் கொண்ட ஒரு திணைக்களமாக இருப்பதால் மாகாண மட்டத்தில் உள்ள சிறுவர் இல்லங்கள் பற்றிய தரவுகளின் அடிப்படையில் ஒன்பது மாகாணங்களுக்கான மாகாண மட்டத்திலான தொகைமதிப்பு அறிக்கைகள் தயாரிக்கும் பணி தொடங்கியது.

இந்த அறிக்கையை தயாரிப்பதில் தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கும் ஆராய்ச்சி மற்றும் சிறப்பு ஆய்வுகள் பிரிவின் பணிப்பாளர் மற்றும் அதன் பணியாளர்கள், யுனிசெஃப் நிறுவனத்தின் சிறுவர் பராமரிப்பு தலைவர், மிராண்டா ஈ. ஆம்ஸ்ட்ராங் அம்மையாருக்கும் மற்றும் சிறுவர்கள் பாதுகாப்பு அதிகாரி மிஹிலார் மொஹமட் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்கள் சார்பாக மாகாண மட்டத்தில் கொள்கை முடிவுகளை எடுக்க, சிறுவர் இல்லத்தில் உள்ள சிறுவர்களின் நலனுக்காக அந்த சிறுவர்கள் குடும்பப் பின்னணியில் கூடிய விரைவில் வாழ்வதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதில் இந்த மாகாண அறிக்கைகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்

சுதீர நிலங்க விதான
பிரதி ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு
சேவைகள் திணைக்களம்

## முன்னுரை

கொள்கைகளை வகுப்பதில், அது உண்மையில் சமூக யதார்த்தத்தை, அதாவது உண்மையை பிரதிபலிக்கிறது. உண்மையில், சமூகத்தில் கிடைக்கும் தரவுகளின் அடிப்படையில், அந்தக் கொள்கைகள் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுவதற்கு பெரும் உதவியாக அமைகின்றது. சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்களுக்கும் மிகவும் சரியானதும் நியாயமானதுமான கொள்கைகளை உருவாக்குவது நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் முக்கிய பொறுப்பாக இருக்கிறது. இந்த நோக்கத்தை மனதில் கொண்டு மார்ச் 2019 இல் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய செயல் திட்டத்தின் மூலம் மாற்று பராமரிப்பு கொள்கையை செயல்படுத்துவது பற்றிய தரவுத் தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் ஒத்தழைப்பினை வேண்டி நின்றது.

இலங்கையின் தேசிய புள்ளியியல் நிறுவனமான தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்திடம் அரசின் கொள்கை உருவாக்கம், திட்டமிடல் மற்றும் செயல்படுத்தல் மற்றும் செயற்றிட்டங்களின் முன்னேற்றத்தை அளவிடுவதற்குத் தேவையான உத்தயோகபூர்வ புள்ளிவிவரங்களைத் தொகுக்கும் பணி வழங்கப்பட்டுள்ளது. தொகைமதிப்பு மற்றும் அளவீடுகளை நடத்துவதன் மூலம் தரவுகளை சேகரிக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ள தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கையில் முதன்முறையாக சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்கள் பற்றிய தொகைமதிப்பினை மேற்கொண்டு தரவுகளை சேகரிக்கும் சவாலை ஏற்றுக்கொண்டது

1978 இலங்கை அரசியலமைப்பின் 1987 இல் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பின் 13வது திருத்தம் திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு அதிகாரப் பகிர்வுடன் வழங்கப்பட்டதுடன் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு விடயங்கள் தொடர்பான அதிகாரம் மாகாண சபைகளுக்கு பரவலாக்கப்பட்டது. ஆகையால் இந்த பணியில் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் மத்திய அரசின் கீழ் உள்ள நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்துடனும் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களங்களுடனும் ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொண்டு கணக்கெடுப்புடன் தொடர்புடைய அனைத்து சிறுவர் பராமரிப்பு மையங்களும் தொகைமதிப்பில் உள்வாங்கப்பட்டுள்ளமையினை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்தத் தொகைமதிப்பானது தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் ஆராய்ச்சி மற்றும் சிறப்பு ஆய்வுகள் பிரிவினால் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்படுவதுடன் தரவுசேகரிப்பு மாவட்டப் புள்ளிவிபரப் பிரிவிற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள பணிக்குழுவினரால் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள அதிகாரிகளின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டமை முக்கியமானதாகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் தொடர்பான குழுவினால் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்ட மிக சமீபத்திய அறிக்கைகளில் உள்ள அவதானிப்புகளால் ஆபத்தில் உள்ள சிறுவர்கள் மற்றும் ஆபத்தில் உள்ளவர்கள் பற்றிய தற்காலப்படுத்தப்பட்ட தரவுத் தொகுப்பை உறுதிப்படுத்த மீண்டும் மீண்டும் பரிந்துரைக்கப்படுகிறது. இந்தத் தொகைமதிப்பின் பெறுபேறுகள் சிறுவர் உரிமைகள் பற்றிய உடன்படிக்கையை செயல்படுத்துவது தொடர்பான கொள்கைகள் மற்றும் திட்டங்களை வடிவமைப்பதில் உதவுவதுடன் மட்டுமின்றி இதன் உப பெறுபேறாக மேற்கூறப்பட்ட குழுவின் முக்கிய பரிந்துரைகளில் ஒன்றான சிறுவர் பராமரிப்பு மையங்களில் உள்ள சிறுவர்களின் தரவுத் தளத்தை தயாரிக்கும் பணியை நிறைவேற்ற உதவியாக அமைகின்றது.

உரிமைகள் தொடர்பான சமவாயத்தின் பிரிவு 20 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சிறுவர்கள், அனாதைகள், கைவிடப்பட்டவர்கள், ஆதரவற்றவர்கள் அல்லது சந்தேக நபர்கள் அல்லது குற்றவாளிகள் என்றவாறு சிறுவர் பராமரிப்பு மையங்களில் உள்ள சிறுவர்களின் அபிவிருத்திக்கு இந்த் தொகைமதிப்பின் தரவு மிகவும் பயனுடையதாக அமையும் என்பது தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் ஏகத்துவ எதிர்பார்ப்பாகும்.

பி.எம்.பி அனுரகுமார

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம்.

*நன்றியுரை*

இலங்கையில் நடத்தப்பட்ட முதலாவது சிறுவர் இல்லச் சிறுவர்கள் பற்றிய தொகைமதிப்பினை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு பல்வேறு அமைப்புகள் மூலம் மற்றும் பல்வேறு தனிநபர்களால் பல வழிகளில் ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. இந்தத் தொகைமதிப்பு என்பது ஒரு கூட்டு செயல்முறையின் பெறுபேறாக இருந்தாலும், இந்த செயல்முறையை வெற்றியடையச் செய்தமைக்கு கீழ் குறிப்பிடப்படும் சிறப்புப் பங்களிப்புக்களை வழங்கியவர்களுக்கு எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

- இந்தத் தொகைமதிப்பு செயல்முறையின் வெற்றியில் பங்கு வகித்ததற்காக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பி.எம்.பி அனுரகுமார மற்றும் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. ஐ.ஆர். பண்டார அம்மையாருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.
- இந்தத் தொகைமதிப்பு செயல்முறையினை வெற்றிகரமான திட்டமிடல் மற்றும் தொகைமதிப்பு தரவுகைளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அளப்பரிய பங்களிப்பனை நல்கிய நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளர் திருமதி. சந்திம சிகேரா மற்றும் இந்த பணியை வெற்றியடையச் செய்ததற்காக அளப்பரிய பங்களிப்பனை நல்கிய பங்களித்த தற்போதைய பதில் ஆணையாளர் திரு. சுதீர நிலங்க விதான அவர்களை நன்றியுடன் நினைவு கூறுகிறேன்.
- இந்த முயற்சிக்கு எமக்கு எப்போதும் ஊக்கமும் ஆதரவும் அளித்துவரும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் பணிப்பாளர் நாயகங்கள் திருமதி டி.டி.ஜி.ஏ. செனவிரத்ன மற்றும் திருமதி கே.எம்.டி.எஸ்.டி கருணாரத்ன, களப்பணிகளுக்காக பணியாளர்களை விடுவித்தல் உத்துழைப்பு வழங்கிய தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தின் பிரிவுகளுக்குப் பொறுப்பான பணிப்பாளர்கள்/ பிரதிப் பணிப்பாளர்கள்/ பிரிவுத் தலைவர்களை நான் நன்றியுடன் நினைவுகூருகிறேன்.
- நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தில் இப்பணிப்பாக இப்பணியில் உதவிய உதவி ஆணையாளர்களான சந்தரேகா லியனகே மற்றும் ஹர்ஷிகா எதிரிவீர; குறிப்பாக இந்த வேலையின் ஆரம்பம் முதல் இறுதி வரை அனைத்து ஒருங்கிணைப்பு வேலைகளுக்கும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கிய சிரேஷ்ட நன்னடத்தை அதிகாரி திருமதி. நிர்மலி பெரேரா இப்பணி வெற்றிபெற பெரிதும் உதவிய சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் புள்ளிவிபர அதிகாரி திருமதி. அருணி சிறிசேன ஆகியோரையும் நான் நன்றியுடன் நினைவு கூறுகிறேன்.
- இந்த பணியினை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்காக அளப்பரிய ஒத்துழைப்பினை வழங்கிய கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவை ஆணையாளருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.
- இந்த தொகைமதிப்புச் செயல்பாடுகளைத் திட்டமிடுவதற்கும் தரவு மொத்தம் நடவடிக்கைகளுக்கும் பல்வேறு கட்டங்களின்போது ஆதரவு நல்கிய கிழக்கு மாகாணத்தின் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் அனைத்து சிரேஸ்ட நன்னடத்தை அதிகாரிகள், நன்னடத்தை அலுவலர்கள் மற்றும் ஏனைய அனைத்து ஊழியர்களுக்கும் விசேட நன்றிகள் உரித்தாகட்டும்.
- இந்த தொகைமதிப்பில் தரவு மொத்தம் நடவடிக்கைகளை மேற்கொண்ட தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தின் மாவட்டப் புள்ளிவிபரப் பிரிவுகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள அனைத்து அலுவலர்களுக்கும், அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரிகளுக்கும், தரவு சேகரிப்பை மேற்பார்வை செய்வதில் உதவிய மாவட்ட புள்ளிவிபரப் பிரிவின் பிரிவுகளின் பிரதிப் பணிப்பாளர்கள்/ சிரேஸ்ட புள்ளிவிபரவியலாளர்கள்/ புள்ளிவிபரவியலாளர்கள் அனைவருக்கும் விசேட நன்றிகள் உரித்தாகட்டும்.
- தொகைமதிப்பில் தரவு மொத்தம் நடவடிக்கைகளை வெற்றிகரமாகச் செய்வதில் பல்வேறு வகையிலும் உதவிய சிறுவர் பராமரிப்பு மையத்தின் தலைவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.
- இந்த அறிக்கையை தயாரித்தல் மற்றும் பக்க வடிவமைப்பினை மேற்கொண்ட தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தின் புள்ளிவிபர உத்யோகத்தர் திரு.ஜே.ஜி.ஆர்.கே.டபிள்யூ. ஜெயவீர, அறிக்கையை மொழிபெயர்ப்பு செய்தல் மற்றும் செவ்வை பார்த்தல் நடவடிக்கையை மேற்கொண்ட புத்தளம் மாவட்டப் புள்ளிவிபரப் பிரிவுத் தலைவர் சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர் திரு.எஸ்.தனபாலசிங்கம் அவர்களுக்கும், பக்க வடிவமைப்பு செய்த தமிழ்மொழிமூல குறியீட்டு எழுதுனர் திருமதி. வே.தயாளினி, மேலும் இந்தப் பணியை மேற்பார்வை செய்து தேவையான வழிகாட்டுதலை வழங்கிய ஆராய்ச்சி மற்றும் விஷேட ஆய்வுகள் பிரிவின் பணிப்பாளர் திருமதி யூ.வி. ஜெயக்கொடி அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
- இப்பணி வெற்றிபெற பல்வேறு வழிகளில் உதவிய ஏனைய அனைத்து தரப்பினருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்

# பொருளடக்கம்


பொருளடக்கம் ..... iii

முகவுரை ..... v

முன்னுரை ..... vii

நன்றியுரை ..... ix

அட்டவணைப்பட்டியல் ..... x

உருக்களின் பட்டியல் ..... xiii

**அத்தியாயம் 1**

**இலங்கையில் சிறுவர்களை நிறுவனமயமாக்கல்** ..... 1

1.1 அறிமுகம் ..... 1

1.2 சிறுவர்களின் நிறுவனமயமாக்கல் ..... 1

1.3 இலங்கையில் உள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் வகைகள் ..... 3

**அத்தியாயம் 2**

தொகைமதிப்பின் பின்னணி மற்றும் தொகைமதிப்பின் முறைமைகள் ..... 5

2.1 தொகைமதிப்பின் பின்னணி ..... 5

2.2 தொகைமதிப்பினை வடிவமைத்தல் ..... 5

2.3 தொகைமதிப்புக் கூறுகளை நிரற்படுத்தல் ..... 6

2.4 ஆவணங்களைத் தயாரித்தல் ..... 6

2.5 கள நடவடிக்கைகளைத் திட்டமிடல் ..... 7

2.6 தரவு சேகரித்தல் ..... 7

2.7 தரவு வகைப்படுத்தல் ..... 7

2.8 தொகைமதிப்பின் வரையறைகள் ..... 7

**அத்தியாயம் 3**

சிறுவர் பராமரிப்பு மையங்கள் பற்றிய தகவல்கள் ..... 8

3.1 நிறுவனத்தின் வகை, செயல்பாட்டின் தன்மை மற்றும் நிதியுதவி ..... 8

3.2 சிறுவர்களுக்கு வழங்கப்படும் வசதிகள் மற்றும் சேவைகள் ..... 10

3.3 நிறுவனத்தின் சொத்துக்கள் ..... 15

3.4 நிறுவனத்தின் குழுக் கூட்டங்கள் ..... 16

**அத்தியாயம் 4**

சிறுவர் பராமரிப்பு மையங்களில் உள்ள குழந்தைகள் பற்றிய தகவல்கள் ..... 17

4.1 சிறுவர்கள் பற்றிய அடிப்படை தகவல்கள் ..... 17

4.2 சிறுவர்களை நிறுவனமயமாக்கல் பற்றிய தகவல்கள் ..... 21

4.3 கல்வி/ தொழில் தகைமைகள் பற்றிய தகவல்கள் ..... 34

4.4 சிறுவர்களின் நடத்தைப் போக்கு, நோய் மற்றும் இயலாமை பற்றிய தகவல்கள் ..... 37

4.5 சிறுவர்களின் பெற்றோர்/ பாதுகாவலர்கள் பற்றிய தகவல்கள் ..... 39

4.6 சிறுவர்களின் உடன் பிறப்புகள் பற்றிய தகவல்கள் ..... 48

4.7 சிறுவர்களைச் சமூகமயமாக்கல் பற்றிய தகவல்கள் ..... 49

**அத்தியாயம் 5**

பணியாளர்கள் தகவல்கள் ..... 52

5.1 அடிப்படை தகவல்கள் ..... 52

5.2 வேலைவாய்ப்பு பற்றிய தகவல்கள் ..... 53

5.3 கல்வி/ தொழில் தகைமைத் தகவல்கள் ..... 56

**அத்தியாயம் 6**

கொள்கைமதிப்பீடு ..... 58

# அட்டவணைப் பட்டியல்


அத்தியாயம் 3

அத்தியாயம் 3.1 மாவட்டம் மற்றும் நிறுவனவகை அடிப்படையில் குழந்தை பராமரிப்பு மையங்களின் எண்ணிக்கை 8

அத்தியாயம் 3.2 நிறுவனம் மற்றும் மாவட்டத்திற்கமைய குழந்தை பராமரிப்பு மையங்களின் எண்ணிக்கை 9

அத்தியாயம் 3.3 அமைப்பின் வகை மற்றும் நிறுவனத்திற்கான முக்கிய நிதி மூலாதாரத்திற்கமைய சிறுவர் பராமரிப்பு மையங்களின் எண்ணிக்கை 9

அத்தியாயம் 3.4 குழந்தைகளுக்கு கல்வி தொடர்பான சேவைகளை வழங்கும் சிறுவர் பராமரிப்பு மையங்கள் 10

அத்தியாயம் 3.5 நிறுவனத்தின் வகை மற்றும் குழந்தைகளின் பயன்பாட்டிற்காக செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகைகளை கொள்வனவு செய்வதன் அடிப்படையிலான சிறுவர் பராமரிப்பு மையங்களின் எண்ணிக்கை 11

அத்தியாயம் 3.6 நிறுவன வகை மற்றும் குழந்தைகளுக்காக நிறுவனத்தில் வழங்கப்பட்டுள்ள நூலக வசதிகளின் படி சிறுவர் பராமரிப்பு மையங்களின் எண்ணிக்கை 12

அத்தியாயம் 3.7 குழந்தைகளுக்கான சுகாதார வசதிகளை வழங்கும் வகையில் சிறுவர் பராமரிப்பு மையங்கள் 12

அத்தியாயம் 3.8 குழந்தைகளின் பயன்பாடு/ நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட சிறப்புப் பகுதிகளுடன் கூடிய சிறுவர் பராமரிப்பு மையங்கள் 13

அத்தியாயம் 3.9 குழந்தைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள கட்டில்களின் போதுமான தன்மைக்கமைவாக சிறுவர் பராமரிப்பு மையங்கள் 13

அத்தியாயம் 3.10நிறுவன வகைகளுக்கமைய எண்ணிக்கையிலான குழந்தைகளை வைத்திருக்கும் சிறுவர் பராமரிப்பு மையங்கள் 14

அத்தியாயம் 3.11குழந்தைகளுக்காக ஒதுக்கப்பட்ட கழிவறைகளின் போதுமான தன்மைக்கமைவாக சிறுவர் பராமரிப்பு மையங்கள் 14

அத்தியாயம் 3.12குடிநீரைப் பெற்றுக் கொள்ளும் பிரதான மூலத்திற்கமைவாக சிறுவர் பராமரிப்பு மையங்கள் 14

அத்தியாயம் 3.13மோட்டார் வாகன உரிமையினைக் கொண்டுள்ள தன்மைக்கமைய சிறுவர் பராமரிப்பு மையங்கள் 15

அத்தியாயம் 3.14நிறுவனத்திற்குச் சொந்தமான மொத்தப் நிலப்பரப்பிற்கமைவாக சிறுவர் பராமரிப்பு மையங்கள் 16

அத்தியாயம் 3.15நிறுவன வகை மற்றும் நிறுவனக் குழு/ உரிமக் குழு/ விடயக் குழு கூட்டங்களின் எண்ணிக்கைக்கமைவாக சிறுவர் பராமரிப்பு மையங்கள் 16

அத்தியாயம் 3.162019 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஸ்தாபனக் குழுக்கள்/ உரிமக் குழுக்கள்/ விடயக் குழு கூட்டங்களின் எண்ணிக்கைக்கமைவாக சிறுவர் பராமரிப்பு மையங்கள் 16

அத்தியாயம் 4

அத்தியாயம் 4.1 மாவட்டம், நிறுவன வகை மற்றும் பால்நிலை ஆகியவற்றின் அடிப்படையில் நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 17

அத்தியாயம் 4.2 மாவட்டம், வயது மற்றும் பால்நிலை அடிப்படையில் நிறுவன மயமாக்கப்பட்ட குழந்தைகள் 18

அத்தியாயம் 4.3 இனம் மற்றும் பால்நிலை அடிப்படையில் நிறுவன மயமாக்கப்பட்ட குழந்தைகள் 19

அத்தியாயம் 4.4 சமயம் மற்றும் பால்நிலை அடிப்படையில் நிறுவன மயமாக்கப்பட்ட குழந்தைகள் 19

அத்தியாயம் 4.5 மாவட்டம் மற்றும் மற்றும் குழந்தை பிறக்கும் போது தாய் இளம் பராயத்தினரா என்பதன் அடிப்படையில் நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 20

அத்தியாயம் 4.6 நிறுவன வகை மற்றும் பிறப்புப் பதிவின் தன்மையின் அடிப்படையில் நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 20

அத்தியாயம் 4.7 நிறுவன வகை மற்றும் பிறப்பைப் பதிவு செய்யும் ஆவணத்தின்படி பதிவு செய்யப்பட்ட நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 20

அத்தியாயம் 4.8 தற்போதைய நிறுவனத்தில் அனுமதிக்கப்படும் போது குழந்தையின் வயது மற்றும் பாலினத்திற்கமைய நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 21

அத்தியாயம் 4.9 முதலில் நிறுவனமயமாக்கப்பட்டபோது குழந்தையின் வயது மற்றும் பாலினத்திற்கமைய நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 21

அத்தியாயம் 4.10நிறுவனமயமாக்கப்பட்ட ஆண்டின்படி நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 21

அத்தியாயம் 4.11நிறுவனமயமாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் குழந்தை வசிக்கும் இடம் மற்றும் பாலினத்திற்கமைய நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 22

அத்தியாயம் 4.12நிறுவனமயமாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் குழந்தை யாருடன் வாழ்ந்தது மற்றும் குழந்தையின் பாலினத்திற்கமைய நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 22

அத்தியாயம் 4.13நிறுவனமயமாக்கப்பட்ட முறை மற்றும் பாலினத்தின் படி நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 23

அத்தியாயம் 4.14மாவட்டம், நிறுவமையமாக்கப்பட்டதற்கான காரணம் மற்றும் பாலினத்திற்கமைய நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 23

அத்தியாயம் 4.15மாவட்டம், நிறுவமையமாக்கப்பட்டதற்கான காரணம் மற்றும் வயதுப் பிரிவின் அடிப்படையில் நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 25

அட்டவணை 4.16 எப்போதாவது அநாதரவாக்கப்பட்டு நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் மாவட்டம், குழந்தைகள், அநாதரவாக்கப்பட்டமைக்கான காரணம்/ காரணங்கள், குழந்தையின் பாலினத்தின் அடிப்படையில் 27

அட்டவணை 4.17 எப்போதாவது அநாதரவாக்கப்பட்ட நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் அநாதரவாக்கப்பட்டமைக்கான காரணம்/ காரணங்கள், வயதுப் பிரிவின் அடிப்படையில் 29

அட்டவணை 4.18 எப்போதாவது பாதிக்கப்பட்டு நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறுவர்கள் மாவட்டம், பாதிக்கப்பட்டமைக்கான காரணம்/ காரணங்கள் மற்றும் பால் நிலைக்கமைய 30

அட்டவணை 4.19 எப்போதாவது பாதிக்கப்பட்டு நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் பாதிக்கப்பட்டதற்கான காரணம்/ காரணங்கள் மற்றும் வயதுப் பிரிவின் அடிப்படையில் 32

அட்டவணை 4.20 சந்தேகத்திற்குரிய/ தண்டனை பெற்ற நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் மாவட்டம், சந்தேகநபர்/ குற்றவாளியாக இருப்பதற்கான காரணம்/ காரணங்கள் பாலினத்தின் அடிப்படையில் 33

அட்டவணை 4.21 சந்தேகத்திற்குரிய/ தண்டனை பெற்ற நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள், சந்தேகநபர்/ குற்றவாளியாக இருப்பதற்கான காரணம்/ காரணங்கள் வயதுப் பிரிவின் அடிப்படையில் 33

அட்டவணை 4.22 மாவட்டம், நிறுவனம் மற்றும் கல்வி நடவடிக்கையின் வகையைப் பொறுத்து, 3 வயது அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 34

அட்டவணை 4.23 பாலினம், வயதுப் பிரிவு, கல்வி நடவடிக்கையின் வகையைப் பொறுத்து, 3 வயது அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 35

அட்டவணை 4.24 தற்போது ஈடுபட்டுள்ள கல்வி நடவடிக்கை மற்றும் பாலின அடிப்படையில், 3 வயது அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 35

அட்டவணை 4.25 தற்போது கல்வி கற்காத 3 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் அதற்கான காரணங்கள் பாலின அடிப்படையில் 36

அட்டவணை 4.26 பெற்றுள்ள உயர் கல்வித் தகுதி மற்றும் பாலின அடிப்படையில் 6 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 36

அட்டவணை 4.27 பாலினம், வயதுப் பிரிவு மற்றும் கல்வியறிவு அடிப்படையில் 6 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 37

அட்டவணை 4.28 அங்கீகரிக்கப்பட்ட தொழில் தகமையைக் பெற்றுள்ள 16 வயது மற்றும் அதற்கு நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் பாலின அடிப்படையில் 37

அட்டவணை 4.29 பொது அவதானிப்பிற்கமைய குழந்தையின் நடத்தை மற்றும் பாலினத்திற்கமைய நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 38

அட்டவணை 4.30 நாட்பட்ட நோய்/ இயலாமை கொண்ட நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் வயதுப் பிரிவு மற்றும் பாலின அடிப்படையில் 38

அட்டவணை 4.31 நாட்பட்ட நோய்/ இயலாமை கொண்ட நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் நோய்/ இயலாமை மற்றும் பாலின அடிப்படையில் 38

அட்டவணை 4.32 நாட்பட்ட நோய்/ இயலாமையைக் கொண்ட நிறுவன மயமாக்கப்பட்ட குழந்தைகள் நோய்/ இயலாமை மற்றும் வயதுப் பிரிவு அடிப்படையில் 39

அட்டவணை 4.33 நாட்பட்ட நோய்/ இயலாமையால் அவதிப்படல் மற்றும் அதற்கான சிகிச்சையைப் பெறும் நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் பாலினம் மற்றும் வயதுப் பிரிவு அடிப்படையில் 39

அட்டவணை 4.34 மாவட்டம் மற்றும் நிறுவனமயமாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பாதுகாவலரின் தன்மைக்கமைய நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 40

அட்டவணை 4.35 மாவட்டம், நிறுவனமயமாக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது பெற்றோர் உயிருடன் இருந்தார்களா மற்றும் பாலின அடிப்படையில் நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 41

அட்டவணை 4.36 நிறுவனமயமாக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது தந்தையின் தகவல்களின் அடிப்படையில் நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 42

அட்டவணை 4.37 நிறுவனமயமாக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது தாயின் தகவல்களின் அடிப்படையில் நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 42

அட்டவணை 4.38 நிறுவனமயமாக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது பாதுகாவலரின் கீழுள்ள பிள்ளைகள், பாதுகாவலருடனான உறவு முறை மற்றும் பாதுகாவலருக்கு அந்தச் சந்தர்ப்பத்தில் வசிப்பதற்குப் பொருத்தமான வசிப்பிடம் காணப்பட்டதா என்பதற்மைய 43

அட்டவணை 4.39 நிறுவனமயமாக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது பாதுகாவலரின் கீழுள்ள பிள்ளைகள் பாதுகாவலரின் தகவல்களுக்கமைய 44

அட்டவணை 4.40 தற்போதைய பாதுகாவலரின் தன்மைக்கு ஏற்ப நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 45

அட்டவணை 4.41 தந்தையின் தற்போதைய தகவல்களுக்கமைய நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 45

அட்டவணை 4.42 தாயின் தற்போதைய தகவல்களுக்கமைய நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 46

அட்டவணை 4.43 தற்போது பெற்றோரைத் தவிர வேறு பாதுகாவலர்களின் கீழுள்ள நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் பாதுகாவலர்களின் தகவலின்படி 47

அட்டவணை 4.44 பிள்ளையின் சகோதர/ சகோதரிகளின் எண்ணிக்கை அடிப்படையில் நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் 48

அட்டவணை 4.45 சகோதர/ சகோதரிகள் காணப்படும் நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள், அந்தச் சகோதர/ சகோதரிகள் தற்போது வசிக்கும் இடத்திற்கமைவாக 48

அட்டவணை 4.46 பாலினம், வயது மற்றும் குழந்தையின் சமூகமயமாக்கலுக்காக எப்போதாவது ஏதாவது முயற்சி எடுக்கப்பட்டதா என்பதற்மைவாக நிறுவன மயமாக்கப்பட்ட குழந்தைகள் 49

அட்டவணை 4.47 சமூகமயமாக்கலுக்காக முயற்சி எடுக்கப்பட்ட நிறுவன மயமாக்கப்பட்ட குழந்தைகள், இதுவரை மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மற்றும் பாலின அடிப்படையில் 49

அட்டவணை 4.48 சமூகமயமாக்கலுக்காக முயற்சி எடுக்கப்படாத நிறுவன மயமாக்கப்பட்ட குழந்தைகள், அதற்கான காரணம்/காரணங்கள் மற்றும் பாலின அடிப்படையில் 50

அட்டவணை 4.50 சமூகமயமாக்க முயற்சித்து, ஆனால் தத்தெடுப்பு செயல்முறையில் உள்ளடக்கப்படாத நிறுவன மயமாக்கப்பட்ட குழந்தைகள் அதற்பான காரணங்களுக்கமைவாக 51


அத்தியாயம் 5


அட்டவணை 5.1 நிறுவன வகை மற்றும் மாவட்டத்தின் அடிப்படையில் சிறுவர் பராமரிப்பு மைய பணியாளர்கள் 52

அட்டவணை 5.2 வயதுப் பிரவு மற்றும் பாலின அடிப்படையில் சிறுவர் பராமரிப்பு மைய பணியாளர்கள் 52

அட்டவணை 5.3 தொழில் மற்றும் பாலினத்தின் அடிப்படையில் சிறுவர் பராமரிப்பு மைய பணியாளர்கள் 53

அட்டவணை 5.4 சேவை காலம் மற்றும் பாலினத்தின் அடிப்படையில் சிறுவர் பராமரிப்பு மைய பணியாளர்கள் 54

அட்டவணை 5.5 தொழிலின் தன்மை மற்றும் பாலினத்தின் அடிப்படையில் சிறுவர் பராமரிப்பு மைய பணியாளர்கள் 55

அட்டவணை 5.6 தொழிலில் ஈடுபடும் தன்மை மற்றும் பாலினத்தின் அடிப்படையில் சிறுவர் பராமரிப்பு மைய பணியாளர்கள் 55

அட்டவணை 5.7 உயர் கல்வித் தகுதி மற்றும் பாலினத்தின் அடிப்படையில் சிறுவர் பராமரிப்பு மைய பணியாளர்கள் 56

அட்டவணை 5.8 தற்போதைய தொழிலுடன் தொடர்புடைய தொழிற்பயிற்சியை பெற்றுள்ளமைக்கமைவாக சிறுவர் பராமரிப்பு மைய பணியாளர்கள் 57

# உருக்களின் பட்டியல்


அத்தியாயம் 3

| | | |
|---|---|---|
| உரு 3.1 | மாவட்ட மட்டத்தில் சிறுவர் பராமரிப்பு இல்லங்களின் எண்ணிக்கை | 8 |
| உரு 3.2 | நிறுவனத்தை நடாத்திச் செல்வதற்கு நிதி கிடைக்கும் பிரதான மூலத்திற்கமைவாக சிறுவர் பராமரிப்பு இல்லங்களின் எண்ணிக்கை | 9 |
| உரு 3.3 | பிள்ளைகளின் பயன்பாட்டிற்காக சிறுவர் சஞ்சிகைகள் செய்தித்தாள்களின் கொள்வனவிற்கமைய சிறுவர் பராமரிப்பு இல்லங்களின் எண்ணிக்கை | 11 |
| உரு 3.4 | குடிநீரைப் பெற்றுக்கொள்ளும் பிரதான மார்க்கத்திற்கமைய சிறுவர் பராமரிப்பு இல்லங்களின் எண்ணிக்கை | 15 |
| உரு 3.5 | மோட்டார் வாகன உரிமத்துவத்திற்கமைய சிறுவர் பராமரிப்பு இல்லங்களின் எண்ணிக்கை | 15 |
| உரு 3.6 | நிறுவனத்திற்குரிய நிலப்பரப்பிற்கு அமைய சிறுவர் பராமரிப்பு இல்லங்களின் எண்ணிக்கை | 16 |

அத்தியாயம் 4

| | | |
|---|---|---|
| உரு 4.1 | மாவட்டம் மற்றும் பால்நிலைக்கமைய நிறுவனமயப்படுத்தப்பட்ட பிள்ளைகள் | 18 |
| உரு 4.2 | வயது மற்றும் பால்நிலைக்கமைய நிறுவனமயப்படுத்தப்பட்ட பிள்ளைகள் | 19 |
| உரு 4.3 | இன அடிப்படையில் நிறுவனமயப்படுத்தப்பட்ட பிள்ளைகள் | 19 |
| உரு 4.4 | நிறுவன மயப்படுத்தப்பட்ட வருடத்தின் அடிப்படையில் நிறுவன மயப்படுத்தப்பட்ட பிள்ளைகள் | 21 |
| உரு 4.5 | நிறுவனமயப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் பிள்ளை யாருடன் வசித்தது என்பதற்கமைய நிறுவன மயப்படுத்தப்பட்ட பிள்ளைகள் | 23 |
| உரு 4.6 | நிறுவனமயப்படுத்தப்பட்ட முறைமைக்கமைய நிறுவன மயப்படுத்தப்பட்ட பிள்ளைகள் | 23 |
| உரு 4.7 | நிறுவனமயப்படுத்தப்பட்ட காரணங்களுக்கமைய நிறுவன மயப்படுத்தப்பட்ட பிள்ளைகள் | 24 |
| உரு 4.8 | நிறுவன வகை மற்றும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடல் என்பதற்கமைவாக நிறுவன மயப்படுத்தப்பட்ட பிள்ளைகள் | 35 |
| உரு 4.9 | நிறுவனமயப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் பிள்ளையில் பாதுகாவலரின் தன்மைக்கமைய நிறுவன மயப்படுத்தப்பட்ட பிள்ளைகள் | 40 |
| உரு 4.10 | நிறுவனமயப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் பெற்றோர் உயிருடன் வசித்தனரா என்பதற்கமைய நிறுவன மயப்படுத்தப்பட்ட பிள்ளைகள் | 42 |
| உரு 4.11 | நிறுவனமயப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் பாதுகாவலரின் கீழ் வசித்த பிள்ளைகள் பாதுகாவலருடனான உறவு முறைக்கமைய | 44 |
| உரு 4.12 | தற்போதைய பாதுகாவலரின் தன்மைக்கமைய நிறுவன மயப்படுத்தப்பட்ட பிள்ளைகள் | 45 |
| உரு 4.13 | பிள்ளையின் சகோதர/ சகோதரிகளின் எண்ணிக்கைக்கமைய நிறுவன மயப்படுத்தப்பட்ட பிள்ளைகள் | 48 |

அத்தியாயம் 5

| | | |
|---|---|---|
| உரு 5.1 | வயதுப் பிரிவு மற்றும் பால்நிலைக்கமைய சிறுவர் பராமரிப்பு மைய பணியாளர்கள் | 53 |
| உரு 5.2 | தொழிலின் தன்மைக்கமைய சிறுவர் பராமரிப்பு மைய பணியாளர்கள் | 55 |
| உரு 5.3 | உயர் கல்வித் தகமைக்கமைய சிறுவர் பராமரிப்பு மைய பணியாளர்கள் | 56 |

# அத்தியாயம் 1
# இலங்கையில் சிறுவர்களை நிறுவனமயமாக்கல்

## 1.1 அறிமுகம்

தமது தனிக் குடும்பத்தில் அல்லது கூட்டுக் குடும்பத்தில் பராமரிப்பை இழக்கும் சிறுவர்களுக்கான ஒரு மாற்று பாதுகாப்பு அமைப்பாக நிறுவன பராமரிப்புக்கான பரிந்துரை தற்போது இலங்கையில் நடைமுறையில் உள்ள செயன் முறையாகும். இந்த அமைப்பு முறை இலங்கையில் காலனித்துவ ஆட்சிக் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டுவிட்டதுடன் 1930 மற்றும் 1940 ஆம் தசாப்தங்களில் சிறுவர்கள் தொடர்பான சட்டங்கள் வலுவடைந்ததுடன் பிள்ளைகளின் நிறுவன பராமரிப்பு என்பது ஒரு முறையான அமைப்பாக மாற்றப்பட்டது. அன்று தொடக்கம் சிறுவர் சந்தேக நபர்கள், சிறுவர் குற்றவாளிகள், அனாதைகள் மற்றும் கைவிடப்பட்டவர்கள் சிறுவர்கனளப் போன்று கவனிப்பும் பாதுகாப்பும் தேவைப்பட்ட சிறுவர்களுக்கும் மாற்று பாதுபாப்பினை வழங்குவதற்காக நீதித்துறை செயல்முறை மூலம் சிறுவர் பராமரிப்பு மையங்களுக்கு அனுமதிக்கும் நடைமுறை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இன்றைய சமுதாயத்தில் சிறுவர்களுக்கான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பை வழங்குவது மிகவும் சிக்கலான தன்மையைப் பிரதிபலித்தாலும் இலங்கையின் கடந்தகால பாரம்பரிய சமூகத்தில் சிறுவர்களுக்கு தேவையான கவனிப்பு மற்றும் பாதுகாப்பை வழங்குவது ஒட்டுமொத்த சமூகத்தின் பொறுப்பாக இருந்தது. அதாவது அவர்களின் கருக் குடும்பம், கூட்டுக் குடும்பம், அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள் என பிரதேசம் முழு வாழும் சமூகத்தினர் பிள்ளையின் பாதுகாப்பு கவனிப்பு அவர்களது பொறுப்பு எனத் தானாக முன்வந்து மேற்கொண்டனர். ஆனால் படிப்படியாக காலப்போக்கில் சமூகத்தில் ஏற்பட்ட பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார மாற்றங்கள் காரணமாக குடும்பம் சமூகத்தில் தனிமைப்படுத்தப்பட்ட அலகானது. அத்துடன் பொருளாதார சவால்களுக்கு முகம்கொடுப்பதற்காக அப்பாவைத் தவிர அம்மாவும் பொருளாதாரச் செயற்பாட்டில் ஈடுபடுவதால் சிறுவர்களும் குடும்பத்தில் இருந்து தனிமைப்படத் தொடங்கினர். அதே நேரத்தில் அவர் இதுவரை வாழ்ந்த சமூகம் மற்றும் குடும்பம் மூலம் சிறுவர் பெற்ற பாதுகாப்பு படிப்படியாக குறைவடையத் தொடங்கியது. அத்துடன் பெற்றோர்கள் விவாகரத்து செய்தல், பிரிந்து வாழ்வது, கடுமையான பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தல் மற்றும் நீண்ட கால நோய் மற்றும் இயலாமை நிலைமைகளால் பாதிக்கப்படுதல் போன்ற காரணங்களினால் சிறுவர்களை பெற்றோர்களால் கவனிக்க இயலாமையினால் சிறுவர்கள் ஆதரவற்றவர்களாக மாறினர். அத்தகைய காரணங்களின் தாக்கத்தினால் கடந்த சில தசாப்பதங்களாக அனாதைகள் மற்றும் கைவிடப்பட்ட பிரிவுகளுடன் ஒப்பிடும்போது ஆதரவற்ற சிறுவர்களை நிறுவனமயமாக்குவதில் வெட்டிக்காட்டும் வளர்ச்சி அவதானிக்கப்பட்டது.

பொருளாதார மற்றும் சமூக காரணிகளுக்கு மேலதிகமாக உலகளாவிய தொற்று நோய்கள் மற்றும் இயற்கையாகவும் மனிதர்களால் சிறுவர்களுக்கு ஏற்படும் பேரழிவுகளும் கூட பிள்ளைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளது. உதாரணமாக, இந்த நேரத்தில் நிறுவனத்தின் பராமரிப்பில் உள்ள சிறுவர்களில் கணிசமானவர்கள் தங்கள் குடும்பத்தை விட்டுப் பிரிந்து செல்ல வேண்டியமைக்கான காரணம் பல்வேறு பேரிடர்களால் பெற்றோர்/ பாதுகாவலர்களின் இழப்பு, பெற்றோர்/ பாதுகாவலர்கள் ஊனமுற்றவர்களாக இருத்தல் அல்லது அவர்கள் வசிக்கும் இடத்தை இழந்திருப்பதாகும்.

எவ்வாறாயினும் பெற்றோரின் கவனிப்பை இழந்த ஒரு சிறுவர் நிறுவன பராமரிப்புக்கு அனுப்பப்பட வேண்டியது வேறு ஏதேனும் மாற்று பராமரிப்பு முறைமைகள் இல்லாத சந்தர்ப்பத்தில் கடைசி முயற்சியாக மட்டுமே காணப்பட வேண்டும் எனப் பிள்ளைகளின் மாற்றுக் பராமரிப்பிற்கான ஐ.நா வழிகாட்டுதல்கள் மூலம் காட்டப்பட்டுள்ளதுடன் சிறுவர் அவனுடைய/ அவளுடைய இயற்கைக் குடும்பத்திலிருந்து பிரிந்தால் அந்தச் சிறுவருக்கு மாற்று பராமரிப்பைப் பெற்றுக் கொடுக்கும்போது அரசு கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை இதன் மூலம் காட்டப்படுகின்றது.

நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர் சமூகத்தில் மீண்டும் இணைக்கப்பட்ட பிறகு சமுதாயத்தில் அந்தச் சிறுவர் அவமரியாதைக்கு ஆளாகின்றனர். இது பொதுவாக அவதானிக்கப்படும் விடயமாகும். ஆகையால் இப்போது சில அமைப்புகள் நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பதுடன், பிறப்புச் சான்றிதழ் இல்லாமை, சமுதாயத்தில் சம வாய்ப்புகள் இழக்கப்படல், மாற்றுப் பராமரிப்பு பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் இழக்கப்படல் போன்ற காரணங்களால் இது போன்ற பிள்ளைகள் தொடர்ந்து எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பில் இந்த அமைப்புகளும் கவனம் செலுத்தி வருகின்றன.

இயற்கை குடும்பத்தில் பாதுகாப்பற்ற அல்லது துஷ்பிரயோகத்திற்கு ஆளான பிள்ளையொன்று இயற்கையான குடும்பத்தில் இருந்து தற்காலிகமாக அப்புறப்படுத்த வேண்டியிருந்தாலும், நீண்ட காலமாக நிறுவனமயமாக்கப்படுவதன் விளைவாக அவர்களுக்கு மனநல பிரச்சினைகளும் உருவாகலாம். உதாரணமாக, இளம்பராய தாய்மார்களின் நிலைமையை சுட்டிக் காட்டலாம். சில நேரங்களில் சிறுவர் பாதுகாப்பு கட்டமைப்பினுள் பிள்ளை இரண்டாம் தடவையாக துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக நேரிடலாம்.

## 1.2 சிறுவர்களின் நிறுவனமயமாக்கல்

இலங்கையில் சிறுவர்களுக்கு நிறுவன பராமரிப்பு வழங்குதல் செயலில் உள்ள பல கட்டளைகள் சட்ட விதிகள் மூலம் வழங்கப்பட்டது. அந்த விதிகள் வருமாறு,

1. 1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கத்தைக் கொண்ட சிறுவர் மற்றும் இளம் பருவத்தினர் தொடர்பான கட்டளைச் சட்டம் - (1956 திருத்தம்)
2. 1941 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கத்தைக் கொண்ட அனாதை இல்ல கட்டளைச் சட்டம் - (1956 திருத்தம்)/ சிறுவர் மேம்பாட்டு மைய சாசனம்
3. 1907 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க நிவர்த்தன இல்ல கட்டளைச் சட்டம்
4. 1841 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வழிதவறல் கட்டளைச் சட்டம்

இலங்கையில் சிறுவர்களை நிறுவனமயமாக்குவதில் முக்கியமான இரண்டு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. 16 வயதிலும் குறைவான பாதிக்கப்பட்ட பிள்ளைகள், சிறுவர் சந்தேக நபர்கள் மற்றும் சிறுவர் குற்றவாளிகள் நீதிமன்ற உத்தரவின் பேரில் நிறுவனமயமாக்கல் இந்த முறைகளில் முதலாவது முறை என்பதுடன் சிறுவாகள் மற்றும் இளைஞர்களுக்கான கட்டளைச் சட்டத்தின் மூலம் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட சிறுவர் என ஒரு சிறுவனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதன் மூலம் சம்பந்தப்பட்ட அனைத்து பங்குதாரர்களுக்கும் பிறகு அது தொடர்பாக எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதைக் சுகாதார அமைச்சின் விடய முகாமைத்துவ வழிகாட்டுதல்கள் (Case Management Guidelines) குறிக்கிறன. இரண்டாவது முறை அனாதை, கைவிடப்பட்ட மற்றும் உதவியற்ற பிரிவில் கணக்கில் எடுக்கப்படும் பிள்ளைகள் குறித்து பெற்றோர்/ பாதுகாவலர்கள் அல்லது பிற தொடர்புடையவர்களின் வேண்டுகோளின் பேரில் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளரின் ஒப்புதலுடன் அந்தக் சிறுவர்களை நிறுவனமயமாக்குவதாகும். இதற்கு பிள்ளை விருத்தி மைய சாசனத்தால் ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இருப்பினும், மேற்கண்ட கட்டளைகளின் சட்டபூர்வ விதிகளை உரிய வகையில் முறையாக செயல்படுத்தாததால் மற்றும் நிறுவனமயமாக்கல் அல்லது மறுவாழ்வுக்காக கிடைக்கக்கூடிய பிற மாற்று முறைகளின் பயன்பாடு குறைந்த மட்டத்தில் இருப்பதன் காரணத்தினால் இன்று சிறுவர்களுக்கு நிறுவன பராமரிப்பை வழங்குவது இலகுவான விடயம் எனக் கருதி நடவடிக்கை மேற்கொள்வதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

அனாதைகள், கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற சிறுவர்களுக்கு தன்னார்வ தொண்டு சிறுவர் இல்லங்களில் தற்காலிக தங்குமிடம், பராமரிப்பை வழங்குதல் சிறுவர் மேம்பாட்டு மையங்களுக்கான சாசனம் மற்றும் அனாதை இல்ல கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்படும். இந்த நிறுவனங்களுள் மிகக் குறுகிய காலத்திற்காக பிள்ளைகளை தடுத்து வைக்க முடியுமென்பதுடன் இந்தக் சிறுவர்களை இயன்றளவு விரைவாக குடும்பத்தில் இணைத்து விடுவதற்கான விசேட வேலைத் திட்டங்களை அறிமுகம் செய்தல் மற்றும் செயல்படுத்தல் மிகவும் முக்கியமானது என்பது இங்கு வலியுறுத்தப்படுகிறது. அத்தகைய விசேட வேலைத் திட்டங்களுக்கு உதாரணமாக குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்குதல், வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை சேவைகள் வழங்குதல் மற்றும் வளர்ப்பு பெற்றோர் முறை (Foster Parent System) அமைப்பை உருவாக்குதல் என்பவற்றைச் சுட்டிக் காட்டலாம்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படும் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், சிறுவர்கள் மற்றும் இளைஞர் கட்டளைச் சட்டத்தின் கீழ் சான்றளிக்கப்பட்ட பாடசாலைகளில் சேர்க்கப்படுவதுடன் இதற்கு மேலதிகமாக அந்தச் சட்டத்தின் பிரிவு 35 இன் அடிப்படையில் இந்த சிறுவர்கள் தகுதியான நபர் (Fit Person) பராமரிப்பில் கீழ் நியமிக்கலாம். இது வளர்ப்புப் பெற்றோர் அமைப்பினை மிகவும் ஒத்திருப்பதுடன் பிள்ளைக்கு உறவினர் அல்லது உறவினர் அல்லாத பொருத்தமான நபரின் பாதுகாவலின் கீழ் ஒப்படைப்பதற்கு இங்கு சட்ட விதிகள் உள்ளன. இருப்பினும் உறவினர் அல்லாத பெற்றோர்களை அடையாளம் கண்டு அந்த பெற்றோரிடம் சிறுவர்களை ஒப்படைக்கும் முறைமையினை நடைமுறையில் நாட்டில் காணக் கிடைக்கவில்லை

பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் சிறுவர் சந்தேக நபர்கள் நிறுவனமயமாக்கப்பட்டு நிறுவன சீர்திருத்தங்களுக்கு (Institutional Corrections) உட்படுத்துவதுடன் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான கட்டளைச் சட்டத்தின் மூலம் தண்டனை வழங்கப்படுகிறது. இங்கே அவ்வாறான தண்டனை விதிகளை முறையாக அமுல்படுத்த வேண்டுமென்பதுடன் சமூக மறுவாழ்வுக்கு உட்படுத்த முடியாத போது மட்டுமே நிறுவனமயமாக்கப்பட்டு திருத்தும் நடவடிக்கைக்கு பரிந்துரைக்கப்பட வேண்டும். இதற்கு மேலதிகமாக சிறுவர் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுத்துவதற்குப் பதிலாக மத்தியஸ்த சபைகளைப் பயன்படுத்தி தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளும் இயலுமையும் காணப்படுகின்றது.

சிறுவனது நிறுவனமயமாக்கலை பாதித்த காரணிகளைக் கவனத்தில் கொள்ளாது நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களை மீண்டும் சமூகமயமாக்குவதற்கு நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் மூலம் உள்ளக விவகாரங்களுக்கான செயற்பாட்டு நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் இங்கே தன்னார்வத் தொண்டு இல்லங்கள் மற்றும் சான்றளிக்கப்பட்ட பாடசாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிறுவர்களை சமூகமயமாக்குவதற்கான உரிய தீர்மானங்கள் நிறவனக் குழுக்கள் மற்றும் உரிமக் குழுக்களால் எடுக்கப்படுகின்றன.

நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களை மீண்டும் சமூகமயமாக்குவதற்கு திட்டமிடலுக்கான வேலைத்திட்டத்தைத் தயாரிப்பதைத் திட்டமிட வேண்டியது ஒரு தனிநபர் பராமரிப்பு திட்டம் (Individual Care Plan) மூலம் அந்த சிறுவர் நிறுவனமயமாக்கப்பட்ட நாளிலிருந்து என்றாலும் இன்றுவரை கூட இது சரியாக செயல்படுவதாக தெரியவில்லை. ஒவ்வொரு சிறுவர்க்கும் தனித்தனியாக நெருக்கமாக மேற்பார்வையை மேற்கொள்ளல் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர்கள் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகளின் பொறுப்பு ஆகும். இந்த தொடர் கண்காணிப்பு முறையாக நடக்காத காரணத்தால் பல சிறுவர்களுக்கு நிறுவனத்தில் நீண்ட காலம் தங்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன.

சிறுவர்கள் பராமரிப்பு மையங்களில் உள்ள சிறுவர்கள் பற்றி விரிவாக் கற்றாய்ந்த பின்னர் தயாரிக்கப்பட்ட தேசிய மாற்று பராமரிப்புக் கொள்கைக்கு 2019.03.06 திகதி அமைச்சரவை அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதுடன் இந்த தேசிய மாற்று பராமரிப்புக் கொள்கைக்காக அடிப்படையில் நாட்டில் வலுவான மாற்று பராமரிப்பு அமைப்பை நிறுவவும் ஐந்தாண்டு செயல் திட்டத்தை உருவாக்கவும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் தற்போது செயல்பட்டு வருகிறது. அதன்படி, இந்த தேசிய அமுலாக்கல் செயல் திட்டத்தை தயாரிக்கத் தேவையான தரவைப் பெறுவதற்காக இந்த தொகைமதிப்புக் கணக்கெடுப்பு தீவு முழுவதும் அனைத்து சிறுவர் பராமரிப்பு மையங்களை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்டது.

### 1.3 இலங்கையில் உள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் வகைகள்

அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற துறைகளால் நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் 379 சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நன்னடத்தை விடயப் பரப்பானது மாகாண சபைகளுக்கு பரவலாக்கப்பட்ட விடயமாக இருப்பதால் 1987 ஆம் ஆண்டு முதல் இந்த சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் நிர்வாகம் மற்றும் மேற்பார்வை மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

| நிறுவன வகை | விளக்கம் |
|---|---|
| தடுப்பு இல்லங்கள் | சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் மீதான கட்டளைச் சட்டத்தின் 3வது பிரிவின் விதிகளுக்கமைய தடுப்பு இல்லங்கள் நிறுவப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டவர்கள், சிறுவர்கள் மற்றும் சிறுவர் சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவு பெற்றுக் கொள்ளப்படும் வரை தற்காலிகமாக தடுத்து வைத்துக் கொள்வது தடுப்பு இல்லங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.<br>தடுப்பு இல்லங்கள் பொதுத்துறை (மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்) மூலம் நடாத்தப்படுவதுடன் சகல மாகாணங்களிலும் உள்ள பெண் பிள்ளைகள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கு தனித்தனியாக இரண்டு நிறுவனங்கள் பராமரிக்கப்பட வேண்டும். |
| பாதுகாப்புச் சிறுவர் இல்லங்கள் | சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் மீதான கட்டளைச் சட்டத்தின் 3வது பிரிவின் விதிகளுக்கமையவே பாதுகாப்புச் சிறுவர் இல்லங்களும் நிறுவப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டவர்கள் சிறுவர் மற்றும் சிறுவர் சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவு பெற்றுக் கொள்ளப்படும் வரை தற்காலிகமாக தடுத்து வைத்துக் கொள்வது பாதுகாப்புச் சிறுவர் இல்லங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது பாதுகாப்புச் சிறுவர் இல்லங்களும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் மூலம் நடாத்தப்படுவதுடன் சில மாகாணங்களில் தடுப்பு இல்லங்களுக்குப் பதிலாக அமைக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு ஒரு பாதுகாப்புச் சிறுவர் இல்லம் வீதம் கிழக்கு மாகாணத்தில் 3 பாதுகாப்புச் சிறுவர் இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன |
| சான்றளிக்கப்பட்ட பாடசாலை | சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் மீதான கட்டளைச் சட்டத்தின் 3 ஆவது சரத்தின் கீழ் தண்டனை பெற்ற சிறுவர்கள் நிறுவன சீர்திருத்தங்களுக்காக (Institutional Corrections) 3 ஆண்டுகளுக்கு இந்த நிறுவனங்களில் தடுத்து வைக்கப்படுவார்கள். மேலும் நம்பிக்கை மற்றும் பாதுகாப்பு தேவையான சிறுவர்களும் 3 வருட காலத்திற்கு இந்த நிறுவனங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.<br>சான்றளிக்கப்பட்ட பாடசாலை மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தால் பராமரிக்கப்படும் அரச நிறுவனம் என்பதுடன் சகல மாகாணங்களிலும் உள்ள பெண் பிள்ளைகள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கு தனித்தனியாக இரண்டு நிறுவனங்கள் பராமரிக்கப்பட வேண்டுமெனினும் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் மட்டுமே ஆண்கள் மற்றும் பெண்களுக்கான சான்றளிக்கப்பட்ட பாடசாலை அமைக்கப்பட்டுள்ளது. |
| அரச பொறுப்பிலுள்ள சிறுவர் இல்லங்கள் | அனாதை இல்ல கட்டளைச் சட்டத்தின்/ சிறுவர்கள் மேம்பாட்டு மையச்சட்ட விதிகளின்படி இந்த நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளன. 0-5 வயதுக்கிடைப்பட்ட அனாதைகள், கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற சிறுவர்களுக்கு பாதுகாப்பு அளித்தல் இந்த நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. நாட்டிலுள்ள ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒரு நிறுவனம் என்றவாறு 9 நிறுவனங்கள் காணப்படுவதுடன் இந்த நிறுவனங்கள் அரச துறையால் நடத்தப்படுகின்றன. இந்த நிறுவனங்களில் உள்ள அனாதைகள் மற்றும் கைவிடப்பட்ட சிறுவர்களைத் தத்துக் கொடுத்தல் அல்லது வேறு மாற்று பராமரிப்பு முறைகளுக்கு திசைமுகப்படுத்தப்படுவார்கள். அவ்வாறு நடைபெற்றாலும் கூட பாதிக்கப்படக்கூடிய சிறுவர்களுக்கு வேறு மாற்று பராமரிப்பு முறைகளைப் வழங்க முடியாத சந்தர்ப்பங்களில் அந்த சிறுவர்களுக்கு கல்வி வழங்க தன்னார்வத் தொண்டு சிறுவர் இல்லங்களுக்கு அனுப்பப்படுவார்கள். கிழக்கு மாகாணத்திற்கான அரச பொறுப்பிலுள்ள சிறுவர் இல்லங்கள் திருகோணமலை மாவட்டத்தின் துளசிபுரம் பகுதியில் நிறுவப்பட்டது. |

| | |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை | இந்த நிறுவனம் சான்றளிக்கப்பட்ட பாடசாலையைப் போன்றதாகும். இந்த நிறுவனமும் சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் மீதான கட்டளைச் சட்டத்தின் தண்டனை பெற்ற குற்றவாளிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக நிறுவப்பட்டுள்ளது.<br><br>இலங்கையில் ஒரேயொரு அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை உள்ளதுடன் அது களுத்துறை மாவட்டத்தில் மக்கோனா என்ற இடத்தில் நிறுவப்பட்டுள்ளது. |
| நிவர்த்தன (மேலான்மை) சிறுவர் இல்லம் | வழிதவறிச் செல்லும் சிறுவர்கள் மற்றும் வீதிச் சிறுவர்களுக்கான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பை வழங்குதற்காக இந்த நிறுவனம் நிவர்த்தன இல்ல கட்டளைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டள்ளது.<br>இலங்கையில் ஒரே ஒரு நிவர்த்தன (மேலான்மை) சிறுவர் இல்லம் உள்ளதுடன் அது காலி மாவட்டத்தில் ஹல்பாதொட்ட என்ற இடத்தில் நிறுவப்பட்டுள்ளது. |
| பயிற்சி மற்றும் ஆலோசனை மையம் | துஷ்பிரயோகத்திற்குட்பட்ட சிறுவர்களுக்கான உளவளச் சிகிச்சை மற்றும் தொழில் பயிற்சி வழங்குவதற்காக நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும்.<br>கிழுக்கு மாகாணத்திற்தில் அரசினால் நடாத்திச் செல்லப்படும் பயிற்சி மற்றும் ஆலோசனை மையம் திருகோணமலை மாவட்டத்தில் வரோதயநகர் என்னும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. |
| தன்னார்வத் தொண்டு சிறுவர்கள் இல்லம் | அனாதை, கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற சிறுவர்களுக்கு பராமரிப்பு மற்றும் பாதுகாப்பை வழங்குதற்காக அனாதை இல்ல கட்டளைச் சட்டத்தின் கீழ்/ சிறுவர்கள் மேம்பாட்டு மையச் சட்டவிதிகளின்படி இந்த நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்கள் தன்னார்வ தொண்டு நிறுவனங்களினால் நடாத்தப்படுவதாக இருந்தாலும் கூட சிறுவர்களை சேர்ப்பதில் இருந்து சமூகமயமாக்கல் வரை அனைத்து நடவடிக்கைகளும் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் இந்த நிறுவனங்கள் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் ஆணையாளரின் நேரடி கண்காணிப்பின் கீழ் நடாத்தப்படுகின்றன. இந்த நிறுவனங்களில் 0-18 வயதுடைய சிறுவர்களுக்கான பராமரிப்பு வழங்கப்படுகிறது. பொதுவாக இந்த நிறுவனங்களுக்கு சிறுவர்கள் 3 வருட காலத்திற்கு சேர்க்கப்படுவதுடன் இந்த 3 வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன், நிறுவல் (நிறுவனக்) குழுவின் தீர்மானத்திற்கமைய சிறுவர்களை மீண்டும் சமூகமயமாக்க வேண்டும்.<br>கிழக்கு மாகாணத்தில் 54 தன்னார்வ தொண்டு சிறுவர் இல்லங்கள் உள்ளன. |

## அத்தியாயம் 2

# தொகைமதிப்பின் பின்னணி மற்றும் தொகைமதிப்புகணக்கெடுப்பு முறைமை

### 2.1 தொகைமதிப்பின் பின்னணி

தேசிய புள்ளிவிபர நிறுவனம் என்ற வகையில் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் நாடு முழுவதும் உள்ளடங்கும் வகையில் தொகைமதிப்பு மற்றும் மாதிரி அளவீடுகளை நடாத்துவது தொடர்பில் ஏழு தசாப்தங்களுக்கும் அதிக வரலாற்றைக் கொண்டுள்ளது. பத்து வருடங்களுக்கு ஒருமுறை நடாத்தப்படும் குடிசன மற்றும் வீட்டுவசதி, விவசாயம் மற்றும் விவசாயம் அல்லாத பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பான தொகைமதிப்பு திணைக்களத்தினால் ஆரம்பத்திலிருந்து இன்று வரை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு மேலதிகமாக நாட்டில் கொள்கை உருவாக்கம் மற்றும் திட்டமிடலுக்குத் தேவையான தரவை வழங்கும் நோக்கில் வேறு தொகைமதிப்பு மற்றும் மாதிரி அளவீடுகளும் திணைக்களத்தினால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. தேசிய புள்ளியியல் நிறுவனமாக திணைக்களத்திற்கு முழுமையாக ஒப்படைக்கப்படும் தேசிய தொகைமதிப்பு மற்றும் மாதிரி அளவீடுகளை நடத்துவதுவதற்கு மேலதிகமாக ஏனைய மற்ற அரச நிறுவனங்கள் தங்களது கொள்கை உருவாக்கம் மற்றும் திட்டமிடல்களைத் தயாரிக்கும் நடவடிக்கைகளுக்காக உத்தியோகபூர்வ புள்ளிவிவரக் கோரிக்கைகளை முன்வைக்கும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் எமது திணைக்களத்தினால் அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட மாற்றுப் பராமரிப்புக் கொள்கை, தேசிய அமுலாக்கல் செயல்திட்டத்தின் மூலம் செயல்படுத்த திட்டமிடும் போது அதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் நம்பகமான மூலத்திலிருந்து பெறப்பட்ட தரவுகளுக்கான தேவை எழுந்துள்ளது. அதன்படி நாடளாவிய ரீதியில் தொகைமதிப்பொன்றை நடத்தி சிறுவர் இல்லத்திலுள்ள சிறுவர்கள் பற்றிய புள்ளிவிபரத் தகவல்களை நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் திணைக்களத்திற்கு வழங்குதல் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் திணைக்களத்தின் மூலம் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பேரில் இலங்கையிலுள்ள சிறுவர் பராமரிப்பு மையங்கள், சிறுவர் பராமரிப்பு மையங்களிலுள்ள சிறுவர்கள் மற்றும் அந்த நிறுவனங்களின் ஊழியர்கள் பற்றிய தரவுகளைச் சேகரிப்பதற்காக சிறுவர் பராமரிப்பு மையங்களில் நடத்தப்பட்ட முதல் தொகைமதிப்பு இதுவாகும்.

### 2.2 தொகைமதிப்பைத் திட்டமிடல்

திணைக்களத்தின் மூலம் தொகைமதிப்பொன்றை நடத்தும் போது பின்பற்ற வேண்டிய பொதுவான நடைமுறைகளைப் பின்பற்றி நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களுக்கான மாற்று பராமரிப்பு கொள்கையை செயல்படுத்தத் தேவையான தரவைப் பெற்றுக் கொள்வதற்காக தொகைமதிப்பொன்றை திட்டமிடல் திணைக்களத்திற்கு பெரும் சவாலாக இருந்தது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் பொதுவாக தொகைமதிப்பொன்றை குடித்தனம்/ நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்வதுடன் இங்கே குடித்தனத்திற்காக குடித்தனத் தலைவரிடம் அல்லது குடித்தனம் தொடர்பில் பொறுப்பு வேறு உறுப்பினரிடமும் நிறுவனங்களுக்காக நிறுவனத்தின் பொறுப்பான அதிகாரிகள் பதிலளிப்பவராக தேர்வு செய்யப்படுவார்கள்.

இது தொகைமதிப்பின் ஆரம்ப தொகைமதிப்பு அலகாக சிறுவர் பராமரிப்பு மையங்கள் காணப்படுவதுடன் தொகைமதிப்பின் போது இந்த நிறுவனங்களில் உள்ள சிறுவர்கள் பற்றி விரிவான தகவல்கள் சேகரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. சிறுவர்களின் நல்வாழ்வுக்கு பொறுப்புக் கூற வேண்டிய பெற்றோர்/ பாதுகாவலர்கள் இல்லாத சிறுவர்கள் இந்த நிறுவனங்களில் தனியாக வாழ்வதால் இந்த தகவல்ளைப் பெற்றுக்கொள்வது, நிறுவனத்தின் நிர்வாகம்/ ஊழியர்கள் மற்றும் நிறுவனம் தொடர்பில் பொறுப்பு வகிக்கும் நன்னடத்தை அதிகாரியால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. இங்கே தகவல்களை சேகரிப்பதற்காக சிறுவர்கள் பற்றிய அவர்களின் அறிவு, மற்றும் சிறுவர்களுக்காக நிறுவனத்தால் பேணப்படும் கோவைகள் அடிப்படையாகப் பயன் படுத்தப்படுகின்றன. மேலும் சிறுவர்களுக்குச் சிறுவர் மற்றும் நிறுவனத்திற்கு நிறுவனம் பெற்றுக்கொள்ளப்படும் தகவல்கள் மாறுபடும் என்பதுடன் நிறுவன வகை, சிறுவர்களை நிறுவனமயமாக்குவதற்கான காரணம், சிறுவர்களின் சமூக-பொருளாதாரப் பின்னணி, மாகாணத்தில் உள்ள நன்னடத்தை பொறிமுறையின் செயல்பாடு போன்ற வெளிப்புறக் காரணிகளைப் பொறுத்து மாறுபடுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன. அத்தகைய சூழ்நிலைகள் காணப்பட்டாலும் கூட இந்த தொகைமதிப்பை அறிவியல் பூர்வமாக மேற்கொண்டு சிறுவர் இல்லத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்காக மாற்று பராமரிப்பு கொள்கையை செயல்படுத்துவதற்குத் தேவையான தரவை வழங்கும் பொறுப்பு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் தொகைமதிப்பு பற்றிய முக்கிய முடிவுகளை எடுப்பதற்காக தொகைமதிப்பு வழிகாட்டுதல் குழு நியமிக்கப்பட்டது. இந்த தொகைமதிப்பு நடவடிக்கைகளின் வழிகாட்டல் குழுவிற்காக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் மற்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். இதற்கு மேலதிகமாக அனைத்து மாகாண சபைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளர் ஒருவரும் இந்தக் குழுவிலும் நியமிக்கப்பட்டார்.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் தரவுத் தேவையை அடையாளம் காண்பதற்காக இலங்கையின் சிறுவர் பராமரிப்பு மையங்களின் கட்டமைப்பு மற்றும் நன்னடத்தை பொறிமுறை எவ்வாறு செயல்படுகிறது என்பது பற்றி ஆழமாக ஆராயப்பட்டது. இதற்கு மேலதிகமாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள அதிகாரிகள் அத்துடன் மாகாண நன்னடத்தை ஆணையாளர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைத் திணைக்களத்தின் தேவை பற்றி மேலும் தெளிவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டது. தீவு முழுவதும் அமைந்துள்ள பல்வேறு வகையான சிறுவர் பராமரிப்பு மையங்களும் உள்ளடங்கும் வகையில் அடிப்படை கள ஆய்வுகள் நடத்தப்பட்டதன் பின்னர் பல்வேறு நிறுவனங்களிடம் காணப்பட்ட தரவு, நிறுவனங்களின் பொது நிர்வாக நடைமுறை மற்றும் இந்த நிறுவனங்களை மேற்பார்வை மற்றும் மதிப்பீடு செய்யும் முறை தொடர்பிலும் மேலும் தெளிவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டது. இவ்வாறு தொகைமதிப்பு விடயப்பரப்பு தொடர்பான அடிப்படை தெளிவை பெற்றுக் கொண்டதன் பின்னர் தொகைமதிப்பு முறைமை தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி ஒட்டுமொத்த தொகைமதிப்பு செயன் முறையில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. தொகைமதிப்பு கூறுகளை நிரற்படுத்தல்
2. படிவங்களைத் தயாரித்தல்
3. படிவங்களைத் முற்சோதனை செய்தல்
4. களப்பணிகளைத் திட்டமிடல்
5. பயிற்சியளித்தல் வேலைத்திட்டங்களை நடத்துதல்
6. தொகைமதிப்பின் கணக்கெடுப்பு
7. தரவு செயலாக்கம் மற்றும் தரவு பகுப்பாய்வு
8. தரவுகளை வெளிப்படுத்துதல்

## 2.3 தொகைமதிப்பு கூறுகளை நிரற்படுத்தல்

இந்த தொகைமதிப்பின் முதல் கட்டமாக நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள நன்னடத்தை தொடர்பான பல்வேறு கட்டளைச் சட்டங்கள் மற்றும் சட்ட விதியின்படி செயல்படும் சகல சிறுவர் பராமரிப்பு மையங்களினதும் தகவல்கள் உள்ளடங்கும் வகையில் முன் நிரற்படுத்தப்பட்டது. அனைத்து சிறுவர் பராமரிப்பு மையங்கள் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களங்களின் மேற்பார்வையின் கீழ் பதிவு செய்து பராமரிக்கப்படுவதால் மாவட்ட மட்டத்தில் தொகைமதிப்பு கூறுகளை நிரற்படுத்தல் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவை திணைக்களங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிரற்படுத்தல் படிவத்திற்கு அடிப்படை மாறிகள் தவிர, பின்வரும் மாறிகளும், சேர்க்கப்பட்டுள்ளன.

1. நிறுவனத்தின் வகை
2. பாலினம் மற்றும் வயதுப் பிரிவிற்கேற்ப ஏற்ப சிறுவர்களின் எண்ணிக்கை
3. பாலினத்தின் படி பணியாளர்களின் எண்ணிக்கை
4. நிறுவனத்தின் தலைவர்/ பொறுப்பாளர் பற்றிய தகவல்
5. நிறுவனம்/ நிர்வாகத்தை தொடர்பு கொள்ளக் கூடிய தொலைபேசி எண்கள்

இந்த நிரற்படுத்தலுக்கமைய கிழக்குக் மாகாணத்தில் இயங்கும் 61 சிறுவர் பராமரிப்பு மையங்கள் அடையாளம் காணப்பட்டதுடன் அந்த நிறுவனங்களின் பராமரிப்பில் உள்ள சிறுவர்களின் எண்ணிக்கை 1344 ஆகவும், 382 பணியாளர்கள் சேவையில் இருப்பதாகவும் பதிவாகியுள்ளது. பின்னர் தொகைமதிப்பின் முன் நிரற்படுத்தல் நடவடிக்கைகளுக்கு இந்த அடிப்படைத் தகவல்கள் பயன்படுத்தப்பட்டன.

## 2.4 படிவங்களைத் தயாரித்தல்

தொகைமதிப்பு படிவங்களைத் தயார் செய்வதற்காக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள அதிகாரிகளைக் உள்ளடக்கிய ஒரு குழுவை நியமித்ததுடன் அந்தக் குழு அடிக்கடி கலந்துரையாடி படிவங்களைத் தயாரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களுக்கான மாற்று பராமரிப்பு திட்டத்தை உருவாக்கத் தேவையான தரவைப் பெற்றுக்கொள்ளல் இந்த தொகைமதிப்பின் முதன்மையான நோக்கம் என்பதால் ஒரு படிவத்தின் மூலம் அனைத்து தகவல்களையும் பெற்றுக்கொள்வது மிகவும் கடினமான பணியாக இருந்தது. ஆகையால் அதற்கான கீழே குறிப்பிட்டுள்ளபடி 4 படிவங்களைப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது.

1. CC1: நிறுவனம் தொடர்பான படிவம்

நிறுவனத்தின் மூலம் சிறுவர்களுக்கு போதுமானளவு வசதிகளை வழங்கித் தரமான சேவையைப் பெற்றுக் கொடுக்கப்படுகின்றதா என்பது பற்றி மதிப்பிடுவதற்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக இந்தப் படிவம் தயாரிக்கப்பட்டது.

2. CC2: **சிறுவர்களுக்கான படிவம்**

இந்த தொகைமதிப்பின் பிரதான படிவம் CC2 ஆகும். நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறுவர்களின் சமூகப் பொருளாதாரப் பின்னணி பற்றிய தெளிவைப் பெற்றுக்கொள்ளத் தேவையான தரவுகளைப் போன்று சிறுவர்களைப் சமூகமயமாக்க முயற்சிக்கும் போது அதற்கு அடிப்படையாகத் தேவையான தகவல்களைப் பெறுவதற்காக இந்தப் படிவம் வடிவமைக்கப்பட்டது. பல்வேறு வகையான நிறுவனங்களுக்குள் பல்வேறு சமூக அந்தஸ்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஒன்றிற்கொன்று வேறுபட்ட பல்வேறு காரணங்களின் தாக்கத்தால் நிறுவனமயமாக்கப்பட்டுள்ள வெவ்வேறு வயது குழுக்களில் அடங்கும் சிறுவர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு பொதுவான படிவத்தைத் தயாரித்தல் எளிதான பணியாக இருக்கவில்லை. எனினும் 4 பகுதிகளைக் கொண்ட இந்தப் படிவத்தில் சிறுவர்கள், பெற்றோர்கள் பற்றிய தகவல்கள்/ பாதுகாவலர்கள் பற்றிய தகவல்கள், சகோதர சகோதரிகள் பற்றிய தகவல்கள் மற்றும் சமூகமயமாக்கல் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்குரிய வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

3. CC3: **பணியாளர் பற்றிய படிவம்.**

சிறுவர் பராமரிப்பு மையங்களில் பல்வேறு பதவிகளை வகித்து பணியாற்றும் ஊழியர்கள் எண்ணிக்கை அந்த நிறுவனத்தை ஒரு உயர்ந்த நிலையில் பராமரிக்க போதுமானதா என்பதை வினவியறிதல் மற்றும் சிறுவர்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அந்த ஊழியர்களின் கல்வி மற்றும் தொழில் தகைமைகள் போதுமானதா என்பது பற்றியும் விரிவான ஆய்வினை மேற்கொள்வதற்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் இந்த படிவத்தைத் தயாரிப்பதன் நோக்கமாகும்.

4. CC4: **சிறுவர் கருத்துக்களை வினவும் படிவம்**

சிறுவர்கள் சார்பாக கொள்கைத் தீர்மானங்களை எடுப்பதில், அதற்காக சிறுவர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதென்பதால் அவர்களது நிறுவன வாழ்க்கையைப் பற்றிய அவர்களின் யோசனைகள் மற்றும் எண்ணங்களைக் கோரும் நோக்கத்திற்காக சிறிய வினாக்கொத்தைப் பயன்படுத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுவர் மாதிரியிலிருந்து தகவல்களைச் சேகரிப்பதாக இந்தப் படிவம் அறிமுகப்படுத்தப்பட்டது. அனைத்து வயதுப் பிரிவினரும் மற்றும் ஆண்/ பெண் இரு சாராரும் உள்ளடங்கும் வகையில் 6 வயது அல்லது அதற்கு மேற்பட்ட சிறுவர்களின் மாதிரியிலிருந்து தகவல்களைப் பெறுவதன் மூலம் இந்தப் படிவம் பூரணப்படுத்தப்பட்டது. எனினும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரியானது மாகாண மட்டத்தில் தகவல்களை வெளியிடப் போதுமானதாக இல்லை என்பதால் மாகாண மட்டத்திலான வெளியீடுகளில் இந்த படிவம் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்களை வெளிப்படுத்துவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டது.

அனைத்து வகையான நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சில மாகாணங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களில் இந்த படிவத்தை முற்சோதனை செய்தல் 2 கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டது. முற்சோதனையின் அனுபவத்தின் அடிப்படையில் நடைமுறை சூழ்நிலைக்கு மிகவும் ஏற்றவாறு படிவத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்டன

## 2.5 களப் பணியினைத் திட்டமிடல்

தொகைமதிப்பின் களப்பணியை ஒரு கூட்டுப் பணியாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர்கள் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் அதிகாரிகளும் ஒன்றாக இணைந்து மேற்கொள்ள முடிவு செய்தனர். மாவட்ட புள்ளிவிபரப் பிரிவிற்கு இணைக்கப்பட்டுள்ள புள்ளிவிவர உத்தியோகத்தர்கள் மற்றும் பல்வேறு கடமைகள் காரணமாக அப்போது காணப்பட்ட மாவட்ட தலைமை அலுவலகத்தின் அதிகாரிகளும் கணக்கெடுப்பு உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டார்கள். தரவு சேகரிப்பானது முக்கியமாக சிறுவர்களுக்கான நிறுவனத்தால் பராமரிக்கப்படுகின்ற சுயவிபரக் கோப்புகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுவதனால் நிறுவனங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட நன்னடத்தை அதிகாரிகள்/ நன்னடத்தை அதிகாரிகளால் தரவு சேகரிப்பின் போது புள்ளிவிபர உத்தியோகத்தர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. மாவட்ட புள்ளிவிபரத் தலைவர்கள் தம்க்குரிய மாவட்டங்களின் தொகைமதிப்பு மேற்பார்வை அதிகாரிகளாக செயல்பட்டனர்.

இந்த அதிகாரிகள் அனைவருக்கும் தொகைமதிப்புத் தொடர்பான தத்துவார்த்த விடயங்கள், தரவு சேகரிக்கப்படும் முறை, படிவங்கள் மற்றும் பிற ஆவணங்களை பூரணப்படுத்துவது குறித்த பயிற்சி வழங்கப்பட்டது

## 2.6 தரவு சேகரித்தல்

தொகைமதிப்பின் தரவு சேகரிக்கும் நடவடிக்கைகள் 2019 நவம்பர்/ டிசம்பர் மாதங்களில் தீவு முழுவதும் உள்ளடங்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது நிறுவனத் தலைவர்கள் அல்லது பொருத்தமான அதிகாரியை தொடர்பு கொண்டு நிறுவனம் தொடர்பான படிவம் (CC1) பூரணப்படுத்தப்பட்டது. சிறுவர்களுக்காக நிறுவனத்தினால் பராமரிக்கப்படுகின்ற சுய விபரக் கோப்புக்கள் மற்றும் மருத்துவ அறிக்கைகளை கற்றாய்வதன் மூலம், நிறுவனத்தின் தலைவர் அல்லது பொருத்தமான அதிகாரியை நேர்காணல் செய்யவதனூடாகவும் மற்றும் தொடர்புடைய நன்னடத்தை அதிகாரியுடன் கலந்துரையாடுவதன் மூலமும் சிறுவர்கள் தொடர்பான படிவம் (CC2) பூரணப்படுத்தப்பட்டது.

பணிக்குழு உறுப்பினர்களை நேரடியாக நேர்காணல் செய்வதன் மூலம் பணியாளர்கள் தொடர்பான படிவம் (CC3) பூரணப்படுத்தப்பட்டது. சிறுவர் கருத்துக்களை வினவும் படிவம் (CC4) 6 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட சிறுவர்களின் மாதிரியை நேர்காணல் செய்வதன் மூலம் பூரணப்படுத்தப்பட்டது. இந்த மாதிரித் தெரிவானது தொகைமதிப்பு பயிற்சி திட்டத்தின் போது வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி தொடர்புடைய கணக்கெடுப்பு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்டது

## 2.7 தரவு செயலாக்க நடவடிக்கைகள்

தொகைமதிப்பு முடிந்தவுடன் தொகைமதிப்பில் பூரணப்படுத்திய அனைத்து படிவங்களும் தலைமை அலுவலகத்திற்கு கொண்டு வந்த பின்னர் அந்த படிவங்கள் ஆரம்ப பரீட்சிப்புக்கு உட்பட்டது. அதாவது இங்கே சகல சிறுவர் பராமரிப்பு மையங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதெனவும் மற்றும் நிறுவனம், நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்கள், ஊழியர்கள் மற்றும் மாதிரிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுவர்களுக்கும் உரியவாறு படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்திய பின்னர் தரவுச் செயலாக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

ஒரு நிறுவனத்திற்காகப் பூரணப்படுத்தப்பட்ட CC1, CC2 மற்றும் CC3 படிவங்களுக்கு இடையில் காணப்படும் பொருந்தாத் தன்மையை கண்டறிந்து அதன் உள்ளடக்கத்தைத் திருத்துதல் மற்றும் தொடர்புடைய குறியீடு செய்தல் இதன் கீழ் செய்யப்பட்டது. இந்தப் படிவத்தில் திறந்த பதில்களைக் கொண்ட பல கேள்விகள் இருந்ததால் அதற்கு குறியீடு செய்தல் மிகவும் சிக்கலானது. எனவே குறியீடு பட்டியலைத் தொடர்ந்து தற்காலப்படுத்தி குறியீடு செய்யப்பட்டது.

**படிவங்களை கணினிப் பதிவு செய்தல்**

கணினிமயமாக்கப்பட்ட தரவு கோப்புகளின் துல்லியத்தை அதிகரிப்பதற்காக பயன்படுத்தக் கூடிய ஒரு முக்கியமான உபாயமாக தரவு இரட்டை கணினிமயமாக்கல் முறையில் (Double Blind Data Entry ) செய்யப்பட்டது. பொதுவாக திணைக்களம் தொகைமதிப்பு மற்றும் அளவீடுகளுக்கான படிவங்கள் கணினி மயமாக்கப்படும் போது முடிந்ததும் உரை புலங்களாக எழுதப்பட்ட பதில்கள் (Text Fields) கணினிமயமாக்கப்படவில்லை. ஆனால் இந்த தொகைமதிப்பில் ஒவ்வொரு சிறுவர் பற்றியும் தனித்தனியாக முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்பதால் உரை புலங்களாக எழுதப்பட்ட அனைத்து பதில்களும் கணினிப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதற்கமைய சிறுவர் இல்லத்திலுள்ள ஒவ்வொரு சிறுவருக்காகவும் தனியாள் அடையாளப் பராமரிப்பு திட்டத்தை உருவாக்குவதற்கு இந்த இறுதி தரவு கோப்புகள் உதவியாக அமையலாம்.

## 2.8 தொகைமதிப்பின் வரையறைகள்

1. பொதுவாக தொகைமதிப்பு மற்றும் அளவீடுகளில் உரிய பதிலளிப்பவர் அல்லது பதிலளிப்பவர் பற்றிய அனைத்து துல்லியமான தகவல்களை வழங்கக்கூடிய குடும்ப ஒரு உறுப்பினரை நேர்காணல் செய்வதால் தொகைமதிப்பில் படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டாலும் இந்த தொகைமதிப்பில் நிறுவனத்தில் சிறுவருக்காக பேணப்படும் கோப்புகளில் உள்ள தகவலின் அடிப்படையில் படிவங்கள் பூரணப்படுத்தப்பட வேண்டியிருந்தது.

2.சிறுவர்களுக்காக நிறுவனங்களால் பராமரிக்கப்படும் தனிப்பட்ட தரவு கோப்புகள் மற்றும் மருத்துவ அறிக்கை கோவைகளின் பூரணத்துவம் தொடர்பில் சிக்கல்கள் இருந்ததால் சில வினாக்களுக்கு உரிய பொருத்தமான விடைகளைப் பெற முடியவில்லை.

3. தொகைமதிப்பு தரவு கோப்புகளில் சில மாறிகளுக்காக விடுபட்ட பதிவுகளின் (Missing records) எண்ணிக்கை அதிகமாகக் காணப்பட்டது

## அத்தியாயம் 3

# சிறுவர் பராமரிப்பு மையங்கள் பற்றிய தகவல்

சிறுவர் பராமரிப்பு மையங்களில் பராமரிக்கப்படும் சிறுவர்களுக்கான மாற்று பராமரிப்பு கொள்கையை அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான தரவுகளைப் பெறுவதில் சிறுவர் பராமரிப்பு மையங்களைப் பற்றிய அடிப்படைத் தகவல்கள், ஒவ்வொரு நிறுவனத்தாலும் சிறுவர்களுக்கு வழங்கப்படும் வசதிகள் மற்றும் சேவைகள், சிறுவர்களின் நலனுக்கான நிறுவனத்திடம் காணப்படும் சொத்துக்கள், வளங்கள் மற்றும் நிறுவனத்தின் நிர்வாக செயல்பாடுகளை கற்றாய்வதை மிகவும் முக்கியமான விடயமாக கருத முடியும். சிறுவர் பராமரிப்பு மையத்தில் சிறுவர்களுக்கு வழங்க வேண்டிய வசதிகள் மற்றும் பேணப்பட வேண்டிய பராமரிப்பு சேவைகள் மற்றும் அவை கொண்டிருக்க வேண்டிய தரநிலைகள் தொடர்பில் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டியில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய, இந்த அத்தியாயம் மூலம் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள சிறுவர் பராமரிப்பு மையங்கள் தொடர்பான போதுமானதும் மற்றும் தரமானதுமான தகவல் பகுப்பாய்வு முன்வைக்கப்பட்டுள்ளது.

உரு 3.1
**மாவட்ட அடிப்படையில் சிறுவர் பராமரிப்பு மையங்களின் எண்ணிக்கை**




*மூலாதாரம்*
தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கை

### 3.1 அமைப்பின் வகை, செயல்பாடுகளின் தன்மை மற்றும் நிதித் திட்டமிடல்

கிழக்கு மாகாணத்தில் இயங்கும் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் தொடர்பில் அடிப்படைப் புள்ளிவிபர பகுப்பாய்வினைப் போன்று நிறுவனத்தின் பதிவு மற்றும் நிதியுதவி பற்றிய தகவல்களும் இதன் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.1 மாவட்டம் மற்றும் நிறுவனத்தின் வகைக்கமைய சிறுவர் பராமரிப்பு மையங்களின் எண்ணிக்கை**

| நிறுவன வகை | மொத்தம் | மட்டக்களப்பு | அம்பாறை | திருகோணமலை |
|---|---|---|---|---|
| பாதுகாப்பான சிறுவர்கள் இல்லம் | 3 | 1 | 1 | 1 |
| சான்றளிக்கப்பட்ட பாடசாலை | 2 | - | 2 | - |
| அரசு பராமரிப்பு சிறுவர்கள் இல்லம் | 1 | - | - | 1 |
| பயிற்சி மற்றும் ஆலோசனை மையம் | 1 | - | - | 1 |
| தன்னார்வ தொண்டு சிறுவர்கள் இல்லம் | 54 | 31 | 9 | 14 |
| **மொத்தம்** | **61** | **32** | **12** | **17** |

கிழக்குமாகாணத்தில் 61 சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் அமைந்துள்ளதுடன் இவற்றுள் அதிக எண்ணிக்கையிலான சிறுவர் பராமரிப்பு மையங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தை மையப்படுத்தி அமைந்துள்ளன. நிறுவனத்தின் வகைக்கமைய கவனத்தில் கொண்டால் கிழக்கு மாகாணத்தில் இயங்கும் 61 சிறுவர் பராமரிப்பு மையங்களில் 54 (88.5%) தன்னார்வத் தொண்டு சிறுவர் இல்லங்கள் என்பதுடன் அந்தச் சகல சிறுவர் பராமரிப்பு மையங்களும் தனியார் துறையின் கீழ் இயங்கி வருகின்றன.பல்வேறு வகுதிக்குள் உள்ளடங்கும் சிறுவர்களிக்காக வெவ்வேறாக பராமரிப்பினை வழங்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாகாண அரச துறையின் கீழ் இயங்கும் பாதுகாப்புச் சிறுவர் இல்லங்கள், சான்றளிக்கப்பட்ட பாடசாலை,அரச பொறுப்பிலுள்ள சிறுவர் இல்லங்கள் மற்றும் பயிற்சி மற்றும் ஆலோசனை மையங்கள் போன்ற வகைகளுக்குரிய சிறுவர் பராமரிப்பு மையங்களும் கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ளமை அட்டவணை 3.1 இன் மூலம் தெளிவாகின்றது.

### அட்டவணை 3.2 நிறுவனத்தின் தன்மை மற்றும் மாவட்டத்தின் அடிப்படையில் சிறுவர் பராமரிப்பு மையங்களின் எண்ணிக்கை

| நிறுவன வகை | மொத்தம் | மட்டக் களப்பு | அம்பா றை | திருகோண மலை |
|---|---|---|---|---|
| அனாதை இல்ல கட்டளைச் சட்டம் மூலம் செயல்படும் அரசு நிறுவனம் | 1 | - | - | 1 |
| சிறுவர்கள் மற்றும் இளைஞர் கட்டளைச் சட்டம் மூலம் செயல்படும் அரசு நிறுவனம் | 6 | 1 | 3 | 2 |
| பிள்ளை விருத்தி சாசனம் மூலம் பதிவு செய்யப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும் நிறுவனம் | 54 | 31 | 9 | 14 |
| மொத்தம் | **61** | **32** | **12** | **17** |

இலங்கையில் இயங்கும் அனைத்து சிறுவர் பராமரிப்பு மையங்களும் அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் பல்வேறு கட்டளைச் சட்டங்களில் சட்ட ஏற்பாடுகளுக்கமைய இயங்குகின்றன. கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்களுள் 88%மானவை அனாதை இல்லக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நிருவகிக்கப்படும் நிறுவனங்களாகும். இதற்கு மேலதிகமாக சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான கட்டளைச் சட்டத்தின் கீழ் நிருவகிக்கப்படும் 6 அரச நிறுவனங்களும் அனாதை இல்ல கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு அரச நிறுவனமும் கிழக்கு மாகாணத்தில் இயங்கி வருகின்றன.

தனியார் துறையால் நடத்தப்படும் தன்னார்வ தொண்டு சிறுவர் இல்லங்களை இயங்கு நிலையில் நடாத்திச் செல்வதற்காக நியம விதிகள் அரசாங்கத்தின் நேரடி மேற்பார்வையில் மேற்கொள்ளப்படுவதுடன் இதுபோன்ற அனைத்து சிறுவர் பராமரிப்பு மையங்களும் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட வேண்டியது கட்டாயமானதாகும்.

### அட்டவணை 3.3 நிறுவனத்தின் வகை மற்றும் நிறுவனத்தை நடத்துவதற்கான பிரதான நிதி மூலாதாரத்திற்கமைய சிறுவர்கள் பராமரிப்பு மையங்களின் எண்ணிக்கை

| நிறுவனத்தின் வகை | மொத்தம் | அரச நிதி | அரச அல்லாத உள்ளூர் நிதி | அரசு அல்லாத வெளிநாட்டு நிதி |
|---|---|---|---|---|
| பாதுகாப்பான சிறுவர் இல்லம் | 3 | 3 | - | - |
| சான்றளிக்கப்பட்ட பாடசாலை | 2 | 2 | - | - |
| அரசு பராமரிப்பு சிறுவர் இல்லம் | 1 | 1 | - | - |
| பயிற்சி மற்றும் ஆலோசணை மையம் | 1 | 1 | - | - |
| தன்னார்வ தொண்டு சிறுவர்கள் இல்லம் | 54 | - | 32 | 17 |
| **மொத்தம்** | **61** | **7** | **32** | **17** |

உரு: 3.2
நிறுவனத்தை நடத்துவதற்கான நிதி கிடைக்கும் பிரதான மூலத்திற்கமைய சிறுவர்கள் பராமரிப்பு மையங்களின் எண்ணிக்கை




மூலாதாரம்:
தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கை

கிழக்கு மாகாணத்தில் உள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்களை பராமரிக்க நிதி கிடைக்கப் பெறும் பிரதான மூலத்தைக் கருத்தில் கொள்ளும்போது அரச துறையால் செயல்படுத்தப்படும் தடுப்பு இல்லங்கள்,பாதுகாப்பான சிறுவர்கள் இல்லம், சான்றளிக்கப்பட்ட பாடசாலை மற்றும் அரசு பராமரிப்பு சிறுவர் இல்லம் அரச நிதியால் பராமரிக்கப்படுவதுடன் தனியார் துறை/ தன்னார்வ அமைப்புக்களால் செயற்படுத்தப்படும் சிறுவர்கள் இல்லங்கள் முக்கியமாக அரசு சார்பற்ற உள்ளூர்/ வெளிநாட்டு நிதி மூலம் பராமரிக்கப்படுகிறது. தன்னார்வ தொண்டு சிறுவர்கள் இல்லங்களில் சுமார் 59% இற்கு பிரதானமாக அரசு சார்பற்ற உள்ளூர் மூலங்களிலிருந்து நிதி கிடைக்கின்றது

### 3.2 சிறுவர்களுக்கு வழங்கப்படும் வசதிகள் மற்றும் சேவைகள்

நிறுவன சிறுவர்களுக்காக நிறுவனத்தின் மூலம் அவர்களின் கல்வி உரிமை உறுதி செய்யப்பட வேண்டுமெனவும், சுகாதார சேவையை வழங்க வேண்டுமெனவும், நிறுவனங்கள் வளாகத்தில் சிறுவர்களுக்கான படுக்கையறைகள், கழிப்பறைகள் மற்றும் குளியலறைகள், வசிக்கும் அறை, கல்வி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட பகுதி, திறந்த விளையாட்டு மைதானம், வீட்டுத் தோட்டம், சாப்பாட்டு அறை, சமையலறை போன்ற வசதிகள் சிறுவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு போதுமான அளவு வழங்கப்பட வேண்டுமென சிறுவர் பராமரிப்பு நிறுவனங்களுக்கான தரநிலைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய, நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களுக்காக நிறுவனத்தின் மூலம் வழங்கப்படும் கல்வி, சுகாதாரம் மற்றும் பிற சேவைகள் பற்றிய தகவல்களின் சுருக்கத்தை முன்வைத்தல் மற்றும் சிறுவர்களுக்கு தங்களது அன்றாட நடவடிக்கைகளை சிரமமின்றி மேற்கொள்வதற்கு தேவையான வசதிகள் நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் முறை பற்றிய தகவல்களை முன்வைப்பதும் இந்தப் பகுதியின் கீழ் மேற்கொள்ளப்படும்.

**அட்டவணை 3.4 சிறுவர்களுக்கு கல்வி தொடர்பான சேவைகளை வழங்குவதற்கமைய சிறுவர் பராமரிப்பு மையங்களின் எண்ணிக்கை**

| வசதிகள்/ சேவைகள் | நிறுவனங்களின் எண்ணிக்கை | % |
|---|---|---|
| **பாடசாலை செல்லும் வயதையுடைய ஆனால் பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களுக்கு முறைசாரா கல்வி வசதிகளை வழங்குதல்** | | |
| நிறுவனத்திற்குள்ளும், நிறுவனத்திற்கு வெளியே உள்ள இடங்களிலும் வசதிகளை வழங்குகிறது | - | - |
| நிறுவனத்திற்குள் மட்டும் வசதிகளை வழங்குகிறது | - | - |
| நிறுவனத்திற்கு வெளியே உள்ள இடங்களை மட்டும் வசதிகளை வழங்குகிறது | 1 | 1.6 |
| வசதிகளை வழங்குவதில்லை | 9 | 14.8 |
| அத்தகைய சிறுவர்கள் இல்லை | 51 | 83.6 |
| **பாடசாலை செல்லும் சிறுவர்கள் பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக பாடசாலை பாடத்திட்டத்திற்கு ஏற்ப மேலதிக வகுப்புக்களில் பங்குபற்றல்** | | |
| நிறுவனத்திற்குள்ளும், நிறுவனத்திற்கு வெளியே உள்ள இடங்களிலும் பங்குபற்றல் | 35 | 57.4 |
| நிறுவனத்தில் மட்டுமே பங்குபற்றல் | 10 | 16.4 |
| நிறுவனத்திற்கு வெளியே உள்ள இடங்களில் மட்டுமே பங்குபற்றல் | 8 | 13.1 |
| பங்குபற்றவில்லை | 2 | 3.3 |
| நிறுவனத்தில் பாடசாலை செல்லும் சிறுவர்கள் இல்லை | 6 | 9.8 |
| **தொழில் பயிற்சி வகுப்புகளில் சிறுவர்களின் பங்குபற்றல்** | | |
| நிறுவனத்திற்கு வெளியே உள்ள இடங்களில் மட்டுமே பங்குபற்றல் | 1 | 1.6 |
| நிறுவனத்தில் மட்டுமே பங்குபற்றல் | 7 | 11.5 |
| நிறுவனத்திற்கு வெளியே உள்ள இடங்களில் மட்டும் பங்குபற்றல் | 1 | 1.6 |
| பங்குபற்றவில்லை | 47 | 77.0 |
| நிறுவனத்தில் தொழில் பயிற்சி வழங்குவதற்கு ஏற்ற வயதுடைய சிறுவர்கள் இல்லை | 5 | 8.2 |
| மொத்தம் | **61** | **100** |

சிறுவன் ஒருவன் நிறுவனமயமாக்கப்பட்டால், அது சிறுவனின் கல்வி பணியைத் தொடர்வதற்கு இடையூறாக இருக்கக் கூடாது. ஏதோ ஒரு வகையில் நிறுவனமயமாக்கல் சிறுவனின் கல்வி நடவடிக்கை தொடர்பில் பாதிப்பை ஏற்படுத்துமாயின் அதன் மூலம் பிள்ளையின் கல்வி உரிமை மீறப்படுவது மட்டுமன்றி சமூகத்தில் மிகவும் பாதகமான விளைவுகளும் ஏற்படலாம். ஆகையால், நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களுக்கு முறையான பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து வழங்குதல், பாடசாலை செல்லாத சிறுவர்களுக்கு முறைசாரா கல்வி வாய்ப்புகள் மற்றும் தொழில் கல்வி வாய்ப்புகளை தொடர்ந்து வழங்குவதும் முக்கியமானதாகும்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள 51 சிறுவர் பாராமரிப்பு இல்லங்களிலும் பாடசாலை செல்லும் வயதையுடைய ஆனால் பாடசாலை செல்லாத சிறுவர்கள் பதிவாகவில்லை. பாடசாலை செல்லும் வயதையுடைய ஆனால் பாடசாலை செல்லாத சிறுவர்கள் பதிவாகியுள்ள 10 சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் காணப்படுகின்றன. அந்த நிறுவனங்களுள் 9 நிறுவனங்கள் சிறுவர்களுக்காக நிறுவனத்தினுள் அல்லது நிறுவனத்திற்கு வெளியே உள்ள இடத்தில் முறைசாரா கல்வி வசதிகளை வழங்குவதில்லை என்பதுடன் 1 நிறுவனத்திலுள்ள சிறுவர்களுக்கு மட்டுமே நிறுவனத்திற்கு வெளியே உள்ள இடத்தில் முறைசாரா கல்வி வசதிகள் வழங்கப்படுவதாகப் பதிவாகியுள்ளது.

பாடசாலை செல்லும் சிறுவர்களுக்கு பாடசாலைக் கல்விக்குச் சமாந்திரமாக மேலதிக வகுப்புகளில் கலந்துகொள்வதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவர்களின் விடய அறிவை வளர்த்துக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தில் உள்ள நிறுவனங்களில் 53 நிறுவனங்களில் இருக்கும் சிறுவர்கள் நிறுவனத்தினுள் மற்றும்/ நிறுவனத்திற்கு வெளியே உள்ள இடங்களில் பாடசாலை கலைத்திட்டத்திற்குச் சமாந்திரமாக நடாத்தப்படும் மேலதிக வகுப்புக்களில் பங்கேற்றுள்ளனர். நிறுவனமயமாக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு கல்வி வழங்குவதைப் பற்றி கவனத்தில் கொண்டால் இது மிகவும் சாதகமான சூழ்நிலையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலதிகக் கல்வி வசதிகளை வழங்காத 2 நிறுவனம் பதிவாகியுள்ளதுடன் அந்த நிறுவனத்தில் உள்ள சிறுவர்களுக்கு இதற்கான ஒரு பொருத்தமான முறையின் அறிமுகப்படுத்துவது காலத்தின் தேவையாகும்

நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களுக்கான ஏதாவவொரு தொழிலில் ஈடுபடுவதற்குத் தேவையான அடிப்படைப் பயிற்சிகளை வழங்கியிருப்பது மிகவும் முக்கியமானது. கிழக்கு மாகாணத்தில் 16 வயது அல்லது அதற்கு மேற்பட்ட சிறுவர்களைக் கொண்ட 56 நிறுவனங்கள் பதிவாகியுள்ளதுடன் அவற்றுள் 9 நிறுவனங்களில் உள்ள சிறுவர்களுக்கு மட்டும் தொழிற்கல்வி வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் இயங்கும் 2 சான்றளிக்கப்பட்ட பாடசாலைகளிலும் தொகைமதிப்புச் சந்தர்ப்பத்தின் போது எந்தவொரு பிள்ளையும் காணப்படவில்லை. அதற்கமைய அந்த இரு நிறுவனங்களும் நீக்கப்பட்டு 45 நிறுவனங்கள் அதாவது, தொழிற்பயிற்சியை வழங்குவதற்குப் பொருத்தமான வயதினைக் கொண்டிருக்கும் சிறுவர்கள் காணப்படும் நிறுவனங்களில் 83% மானவை அங்குள்ள சிறுவர்களுக்கு தொழிற்கல்வியைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பாக அவதானம் செலுத்துவதைக் காணமுடியாதுள்ளது இந்தப் பிள்ளைகளுக்காக பாடசாலைக் கல்வியை வழங்குவது தொடர்பில் அதிக கவனம் செலுத்துகின்றமை தொழில் கல்வியைப் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவதற்குக் காரணமாக அமையலாம்.

முறையான/ முறைசாரா கல்வி மற்றும் தொழில் பயிற்சி மூலம் ஒரு பிள்ளையிடம் கல்வி மற்றும் தொழில் திறன்களை விருத்தி செய்வதும் புத்தகங்கள் மற்றும் குறிப்புக்களை வாசிப்பதற்கான வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் சிந்தனை சக்தியை விருத்தி செய்யவும் முடியும். குறிப்பாக நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களுக்கான புத்தகங்கள்/ செய்தித் தாள்களை வழங்குவதன் மூலம் சிறுவர்களுக்கு அவர்களின் ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் அவர்களின் அறிவை மேம்படுத்துவதற்காக பயன்படுத்திக்கொள்ள முடியும். எனவே சிறுவர்களுக்கான செய்தித்தாள்கள்/ பத்திரிகை கொள்வனவு செய்தல் மற்றும் நூலக வசதிகளை வழங்குதல் சிறுவர் பராமரிப்பு மையங்கள் மூலம் செய்யவேண்டிய செயல்பாடுகளாகச் சுட்டிக்காட்ட முடியும்.

**அட்டவணை 3.5 நிறுவன வகை மற்றும் சிறுவர்களின் பயன்பாட்டிற்காக செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகைகளை கொள்வனவு செய்வதற்கமைய சிறுவர் பராமரிப்பு மையங்களின் எண்ணிக்கை**

| நிறுவன வகை | மொத்தம் | தினசரி கொள்வனவு | வாரத்திற் கொரு முறை மட்டும் கொள்வனவு | எப்போதாவது கொள்வனவு | கொள்வனவு செய்யவில்லை |
|---|---|---|---|---|---|
| பாதுகாப்பான சிறுவர்கள் இல்லம் | 3 | - | 1 | - | 2 |
| சான்றளிக்கப்பட்ட பாடசாலை | 2 | - | - | - | 2 |
| அரசு பராமரிப்பு சிறுவர்கள் இல்லம் | 1 | - | - | - | 1 |
| பயிற்சி மற்றும் ஆலோசணை மையம் | 1 | - | - | - | 1 |
| தன்னார்வத் தொண்டு சிறுவர்கள் இல்லம் | 54 | 39 | 4 | 1 | 10 |
| **மொத்தம்** | **61** | **39** | **5** | **1** | **16** |

உரு 3.3
சிறுவர்களின் பயன்பாட்டிற்காக செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகைகளை கொள்வனவு செய்வதற்கமைய சிறுவர் பராமரிப்பு மையங்களின் எண்ணிக்கை




மூலாதாரம்:
தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை

கிழக்கு மாகாணத்தில் உள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் சிறுவர்களின் பயன்பாட்டிற்கான செய்தித்தாள்கள்/ சஞ்சிகைகள் கொள்வனவு பற்றி தேடியறியும் போது மொத்த நிறுவனங்களில் 2/3 இலும் அதிகமான நிறுவனங்கள் குறைந்த பட்சம் வாரம் ஒரு முறையாவது செய்தித்தாள்கள்/ பத்திரிக்கைகளை கொள்வனவு செய்வதாகப் பதிவாகியுள்ளது. ஒரு நிறுவனம் எப்போதாவது செய்தித்தாள்கள்/பத்திரிக்கைகளை அரிதாக கொள்வனவு செய்வதுடன் 16 நிறுவனங்கள் செய்தித்தாள்கள்/ சஞ்சிகைகளை ஒருபோதும் கொள்வனவு செய்தில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த 16 நிறுவனங்களுள் 10 நிறுவனங்கள் தன்னார்வத் தொண்டு சிறுவர் இல்லம் என்பதுடன் ஏனைய அனைத்தும் அரச நிறுவனங்களாகும். சிறுவர்களின் வயது நிலைக்கு ஏற்றவாறு உலகின் போக்கினை அறிந்து கொள்வதற்காகவும், கல்வி நடவடிக்கைகளுக்கு கைகொடுத்து உதவுவதற்காகவும் சகல சிறுவர் பராமரிப்பு மையங்களிலும் சிறுவர்களுக்கான செய்தித்தாள்கள்/ சஞ்சிகைகளை வாங்குதல் முக்கியமானதாகும்.

**அட்டவணை 3.6 நிறுவன வகை மற்றும் சிறுவர்களுக்கான நிறுவனத்தில் வழங்கப்பட்டுள்ள நூலக வசதிகளின் படி சிறுவர் பராமரிப்பு மையங்களின் எண்ணிக்கை**

| நிறுவனத்தின் வகை | மொத்தம் | நிறுவனத்தில் உள்ளே நூலக வசதிகள் வழங்கப்பட்டுள்ளன | நிறுவனத்தில் உள்ளே நூலக வசதிகள் வழங்கப்படவில்லை |
|---|---|---|---|
| பாதுகாப்பான சிறுவர்கள் இல்லம் | 3 | 3 | - |
| சான்றளிக்கப்பட்ட பாடசாலை | 2 | - | 2 |
| அரசு பராமரிப்பு சிறுவர்கள் இல்லம் | 1 | - | 1 |
| பயிற்சி மற்றும் ஆலாசணை மையம் | 1 | - | 1 |
| தன்னார்வத் தொண்டு சிறுவர்கள் இல்லம் | 54 | 48 | 6 |
| **மொத்தம்** | **61** | **51** | **10** |

நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களுக்கான நிறுவனத்தில் நூலக வசதிகளை வழங்குவதைக் (முறையான புத்தகங்களின் சேகரிப்பைப் பராமரித்தல்) கருத்தில் கொள்ளுமிடத்து கிழக்கு மாகாணத்தில் உள்ள நிறுவனங்களில் 51 நிறுவனங்களில் பிள்ளைகளுக்காக இந்த வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளமை தெரிய வருகின்றது.

மாகாணத்தினுள் 5 வயது அல்லது அதிலும் குறைவான சிறுவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனம் பதிவாகியுள்ளதுடன் அந்த நிறுவனத்திற்காக முறையான நூலக வசதிகளுடனான புத்தகங்களின் திரட்டல் ஒன்று அவசியமில்லை எனக் கருதுமிடத்து ஏனைய நிறுவனங்களுள் 9 நிறுவனங்களில் இந்த வசதிகள் இல்லையென்பதை காணக்கூடியதாகவுள்ளது. இந்த நிறுவனங்களுக்கு நூலக வசதிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

சிறுவர் பராமரிப்பு மையங்களில் உள்ள சிறுவர்கள் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வது மிக்க கவனத்துடன் செய்ய வேண்டிய மற்றொரு முக்கியமான சேவையாகும். குறிப்பாக பெரும்பாலும் அவர்களின் நெருங்கிய சமூகத்திலிருந்து பிரிக்கப்பட்டு பொதுவான சட்ட திட்ட விதிகளின் அமைப்பால் உள்ளடக்கப்பட்ட கூட்டு வசிப்பிடத்தில் வசிக்கும் இளைஞர்களுக்கு உடல் ஆரோக்கியம் மற்றும் உள ஆரோக்கியம் இரு பகுதிகளையும் உள்ளடக்கிய வகையிலான சுகாதாரம் வசதிகளை வழங்க வேண்டும். இலங்கையில் உள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கு தர நிலையில் கூறப்பட்டுள்ளபடி சிறுவர்களின் மருத்துவ தேவைகளை நிறுவனத்திற்கு வந்து பரீட்சிப்பதற்கும் மற்றும் சிறுவர்களை மருத்துவ மையத்திற்கு அழைத்துச் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கும் ஏற்ற வகையில் நிறுவனத்தின் நிர்வாகத்தால் சுகாதாரம் திணைக்களத்துடன் அல்லது தனியார் மருத்துவர் ஒருவருடன் கலந்துரையாடி தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியுள்ளது.

**அட்டவணை 3.7 சிறுவர்களுக்கான சுகாதார வசதிகளை வழங்குவதற்கமைய சிறுவர் பராமரிப்பு மையங்கள்**

| வசதிகள்/ சேவைகள் | நிறுவனங்களின் எண்ணிக்கை | % |
|---|---|---|
| சிறுவர்களுக்கு சுகாதார வசதிகளை வழங்குதல் | | |
| நிறுவனத்திற்குள்ளும், நிறுவனத்திற்கு வெளியே உள்ள இடங்களிலும் தகுதி பெற்ற ஒரு மருத்துவர்/ மருத்துவர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டது | 36 | 59.0 |
| நிறுவனத்திற்கு வெளியே உள்ள இடங்களில் மட்டுமே தகுதி பெற்ற ஒரு மருத்துவர்/ மருத்துவர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டது | 25 | 41.0 |
| ஆலோசனை (Counselling) திட்டங்களில் சிறுவர்களை ஈடுபடுத்துதல் | | |
| நிறுவனத்திற்குள்ளும், நிறுவனத்திற்கு வெளியேயும் பங்குபற்றச் செய்தல் | 20 | 32.8 |
| நிறுவனத்திற்குள் மட்டும் பங்குபற்றச் செய்தல் | 30 | 49.2 |
| நிறுவனத்திற்கு வெளியே உள்ள இடங்களில் மட்டும் பங்குபற்றச் செய்தல் | 3 | 4.9 |
| பங்கேற்கவில்லை | 8 | 13.1 |
| மொத்தம் | **61** | **100** |

நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களுக்கு வழங்கப்படும் சுகாதார பராமரிப்பு வசதிகள் குறித்து கிடைத்த தகவலின் படி கிழக்கு மாகாணத்தில் உள்ள 100% நிறுவனங்களும் ஏதாவதொரு வழிமுறை மூலம் அந்த வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன என்பது தெளிவாகிறது. அதாவது, நிறுவனத்திற்கு வெளியே மட்டும் மருத்துவ வசதிகளை வழங்க 25 நிறுவனங்கள் ஏற்பாடு செய்துள்ளதுடன் நிறுவனத்திற்குள் மற்றும் நிறுவனத்திற்கு வெளியில் தேவைக்கேற்ப மருத்துவ வசதிகளை 36 நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. சிறுவர்களின் மன ஆரோக்கியத்திற்கு முக்கியமான ஆலோசனை வேலைத் திட்டங்களுக்கு சிறுவர்களை ஈடுபடுத்துவதைக் கவனத்தில் கொண்டால் நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கையில் 87% மானவை சிறுவர்களுக்காக நிறுவனத்திற்குள்ளும், நிறுவனத்திற்கு வெளியேயும் அல்லது இந்த இரண்டு முறைகளிலும் சிறுவர்களை ஆலோசனைச் சேவையில் ஈடுபடுத்துகின்றார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு காணப்பட்டாலும் 8 நிறுவனங்களின் சிறுவர்கள் ஆலோசனை வேலைத் திட்டங்களில் ஈடுபடுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 5 வயதிற்கு குறைந்த சிறுவர்கள் மட்டும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசு பராமரிப்புச் சிறுவர் இல்லம் தவிர மற்றைய நிறுவனங்களில் வாழும் சிறுவர்களுக்கான நேரசூசியில் உள்ளடக்கப்பட்ட ஆலோசனை திட்டமிடல் வேலை திட்டத்தை நடாத்திச் செல்லல் அத்தியாவசியமானது என்பது தெளிவாகின்றது.
கிழக்கு மாகாணத்தில் உள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் உள்ள சிறுவர்களின் பொது நடவடிக்கைகளுக்கான இட வசதிகள் எவ்வாறு ஒதுக்கப்படுகின்றன என்பது பற்றிய தகவல் அட்டவணை 3.8 இல் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.8 சிறுவர்களின் பயன்பாடு/ செயல்பாடுகளுக்கு விசேட இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ள சிறுவர் பராமரிப்பு மையங்கள்**

| இடம் | நிறுவனங்களின் எண்ணிக்கை | % |
|---|---|---|
| சிறுவர்களின் கல்விக்காக (விரிவுரை அரங்குகள், வகுப்பறைகள், நூலகங்கள் போன்ற) அறைகள் ஒதுக்கப்பட்டுள்ள | 56 | 91.8 |
| உடல் ஆரோக்கியம்/ உடற்பயிற்சிக்காக அறைகள் ஒதுக்கப்பட்ட | 16 | 26.2 |
| சிறுவர்களுக்காக உள்ளக விளையாட்டு வசதிகள் வழங்கப்பட்ட | 22 | 36.1 |
| சிறுவர்களுக்காக திறந்த விளையாட்டு மைதானம் வழங்கப்பட்ட | 23 | 37.7 |
| சிறுவர்களின் பொழுதுபோக்கு/ செயற்பாடுகளுக்காக விளையாட்டு வசதிகளைக் கொண்ட திறந்த பூங்கா/ பூங்காக்கள் உள்ள | 19 | 31.1 |
| **நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை** | **136** | **-** |

குறிப்பு: ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஒவ்வொரு வசதியும் வெவ்வேறாகக் கவனத்தில் கொள்ளப்படுவதால் ஒதுக்கப்பட்டுள்ளது நிறுவனங்களின் எண்ணிக்கையின் கூட்டுத்தொகையானது மொத்த நிறுவனங்களின் எண்ணிக்கைக்கு சமமாகமாட்டாது

அட்டவணை 3.8 இன் படி, மொத்த நிறுவனங்களில் 92% மானவை கல்வி நடவடிக்கைகளுக்காக வேறான ஒரு இடத்தை/ இடங்களை ஒதுக்கியுள்ளதாக பதிவாகியுள்ளமையை மிகவும் ஆரோக்கியமான சூழ்நிலை என்று குறிப்பிட முடியும். இது சகல பராமரிப்பு மையங்களிலும் காணப்பட வேண்டிய வசதிகளாகும். விளையாட்டு, உடல் ஆரோக்கியம் மற்றும் உடற்பயிற்சிக்காக வழங்கப்படும் வசதிகள் பற்றி வினவியறிந்த போது அந்த நிலைமை திருப்திகரமாக இல்லை என்பது கிடைக்கப் பெற்றுள்ள தரவுகளுக்கமைய தெளிவாகின்றது. நிறுவனங்களில் ஏறக்குறைய 62% இற்கு சிறுவர்களின் விளையாட்டு நடவடிக்கைகள்/ செயற்பாடுகளுக்காக திறந்த விளையாட்டு மைதானம் இல்லை என்பது பதிவாகியுள்ளது. நிறுவன வளாகத்தினுள் விளையாட்டு மைதானமொன்று இல்லாத சந்தர்ப்பத்தில் வெளியேயுள்ள பொது அல்லது பாடசாலை மைதானத்தைப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள் வழங்கப்படுவது இங்கே முக்கியமானதாகும். சிறுவர்களின் உடல் மற்றும் உளச் செயல்பாடுகளை சிறந்த நிலையில் பராமரிப்பதற்கு போதுமானளவு தூக்கம் கிடைப்பது அத்தியாவசிய காரணியாகும். அதற்காக சிறுவர் பராமரிப்பு மையத்தில் உள்ள ஒவ்வொரு சிறுவருக்கும் அந்தச் சிறுவரின் வயதிற்கேற்ப ஒரு படுக்கைக்கு அல்லது தொட்டில் மற்றும் நுளம்புவலை வழங்கவேண்டும் என சிறுவர் பராமரிப்பு மையங்களுக்கு இருக்க வேண்டிய இது தர நிர்ணயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

**அட்டவணை 3.9 சிறுவர்களுக்காக ஒதுக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கையின் போதுமான தன்மைக்கு ஏற்ப சிறுவர் பராமரிப்பு மையங்கள்**

| படுக்கைகளின் எண்ணிக்கையின் போதுமான தன்மை | ஒதுக்கப்பட்ட படுக்கைகள் | |
|---|---|---|
| | எண்ணிக்கை | % |
| ஒவ்வொரு சிறுவர்க்கும் ஒரு படுக்கை ஒதுக்கப்பட்டுள்ளது | 56 | 91.8 |
| சிறுவர்களுக்கு போதுமான படுக்கைகள் இல்லை | 4 | 6.6 |
| படுக்கைகளின் எண்ணிக்கை குறிப்பிடப்படவில்லை | 1 | 1.6 |
| **மொத்தம்** | **61** | **100** |

அட்டவணை 3.9 இன் படி கிழக்குக்கு மாகாணத்தில் உள்ள 61 சிறுவர் காப்பகங்களில் 56 இல் ஒவ்வொரு சிறுவர்க்கும் ஒரு படுக்கை வீதம் ஒதுக்கப்பட்டுள்ளதாக பதிவாகியுள்ளமை சிறந்த நிலைமை என்பதுடன் 4 நிறுவனங்களில் சிறுவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு படுக்கைகள் எண்ணிக்கை போதுமானதாக இல்லை எனப் பதிவாகியிருப்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டிய நிலமையாகும்.

அனாதை, கைவிடப்பட்ட ஆதரவற்ற சிறுவராக இருப்பதால் அல்லது ஒரு ஒரு பாதிக்கப்பட்ட சிறுவர், சந்தேக நபர், குற்றவாளி அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காக நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களின் நலனுக்காக நடவடிக்கை மேற்கொண்டு அவர்களை சமூகமயமாக்கும் பொறுப்பை அந்த நிறுவனங்கள் ஏற்றுக்கொள்வதுடன்

தடுத்துவைக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு சாதகமான சூழலை நிறுவனத்தினுள் ஏற்படுத்துதல் அதற்கான அத்தியாவசிய விடயமாகும். அதற்கமைய, ஏதாவது காரணத்தினால் ஒரு நிறுவனத்தில் உள்ள வசதிகளைத் தாண்டி மேலதிகமான சிறுவர்கள் நிறுவனத்தில் தங்கவைப்பதற்கான நிலமை ஏற்படின், அது அவர்களின் அடிப்படை நலன் தேவைகள் தொடர்பான பிரச்சினையாகும். ஆகையால், இந்தத் தொகைமதிப்பில் மேலதிகமாக சிறுவர்களைத் தங்கவைத்துள்ள நிறுவனங்களை அடையாளம் காண்பதற்குத் தேவையான தகவல்கள் சேகரிக்கப்பட்டதுடன் அட்டவணை 3.10 இன் மூலம் அந்தத் தகவல் முன்வைக்கப்படுகிறது

#### அட்டவணை 3.10 மேலதிகமாக சிறுவர்களை தங்க வைத்திருக்கும் சிறுவர் பராமரிப்பு மையங்கள், நிறுவனங்களின் வகைக்கமைய

| நிறுவன வகை | மொத்த நிறுவனத்தின் எண்ணிக்கை | மேலதிக சிறுவர்கள் உள்ள நிறுவனங்கள் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % |
| தடுப்பு இல்லம் | 3 | - | - |
| சான்றளிக்கப்பட்ட பாடசாலை | 2 | - | - |
| அரச பராமரிப்புச் சிறுவர் இல்லம் | 1 | - | - |
| பயிற்சி மற்றும் ஆலாசணை மையம் | 1 | - | - |
| தன்னார்வ தொண்டு சிறுவர்கள் இல்லம் | 54 | 1 | 1.9 |
| **மொத்தம்** | **61** | **1** | **1.6** |

மேலே உள்ள அட்டவணைக்கமைய இந்த மாகாணத்தில் உள்ள 61 சிறுவர் காப்பகங்களில் ஒரு தன்னார்வ தொண்டு சிறுவர் இல்லத்தில் மட்டுமே தொகைமதிப்பு நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததாகப் பதிவாகியுள்ளமை தெரிய வந்துள்ளது. எனவே, இது தொடர்பில் கவனம் செலுத்தி அதற்கான மாற்று வழிகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களுக்கான கழிப்பறை வசதிகள் வழங்குவது தொடர்பில் அதிகபட்சமாக 8 சிறுவர்களுக்கு குறைந்தபட்சம் ஒரு கழிப்பறை என்ற வகையில் நிறுவனத்தில் கழிப்பறை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களுக்கான கழிப்பறை வசதிகள் வழங்கப்பட்டுள்ள முறை அட்டவணை 3.11 மூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களுக்கான கழிப்பறை வசதி வழங்குதல் குறித்து கவனம் செலுத்தினால் ஒட்டுமொத்தத்தில் கிழக்கு மாகாண நிறுவனங்களில் கழிப்பறை வசதிகளை வழங்குதல் உயர்ந்த மட்டத்தில் நிருவகிக்கப்பட்டாலும் இரண்டு (2) நிறுவனங்களில் மட்டும் போதுமான கழிப்பறை வசதிகள் வழங்கல் நடைபெறவில்லை என்பதை அறிய முடிகின்றது. குறிப்பாக இந்த 2 நிறுவனங்களில் 11 இற்கும் 20 இற்கும் இடைப்பட்ட சிறுவர்களின் பயன்பாட்டிற்காக ஒரு மலசலகூடத்தைப் பயன்படுத்துவதாகப் பதிவாகியுள்ளமை அவதானம் செலுத்தவேண்டிய விடயமாகும்.

#### அட்டவணை 3.11 சிறுவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது கழிவறைகளின் எண்ணிக்கையின் போதுமான தன்மைக்கமைய சிறுவர் பராமரிப்பு மையங்கள்

| கழிவறைகளின் போதுமான தன்மை | நிறுவன எண்ணிக்கை | % |
|---|---|---|
| ஒரு பிள்ளைக்கு ஒரு கழிப்பறை வீதமுள்ளது | 4 | 6.6 |
| இரண்டு பிள்ளைகளுக்கு ஒரு கழிப்பறை வீதமுள்ளது | 16 | 26.2 |
| 3-4 பிள்ளைகளுக்கு ஒரு கழிப்பறை வீதமுள்ளது | 23 | 37.7 |
| 5-6 பிள்ளைகளுக்கு ஒரு கழிப்பறை வீதமுள்ளது | 13 | 21.3 |
| 7-8 பிள்ளைகளுக்கு ஒரு கழிப்பறை வீதமுள்ளது | 1 | 1.6 |
| 9-10 பிள்ளைகளுக்கு ஒரு கழிப்பறை வீதமுள்ளது | - | - |
| 11-20 பிள்ளைகளுக்கு ஒரு கழிப்பறை வீதமுள்ளது | 2 | 3.3 |
| 20 இற்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு ஒரு கழிப்பறை வீதமுள்ளது | 2 | 3.3 |
| **சிறுவர்கள்/ கழிப்பறைகளின் எண்ணிக்கை குறிப்பிடப்படவில்லை** | **61** | **100** |
| சிறுவர்கள் தங்கவில்லை | | |
| மொத்தம் | | |

சிறுவர்களின் ஆரோக்கியமான வாழ்வுக்காக நீர் வசதிகளை வழங்குவதில் எவ்வாறு கவனம் செலுத்தப்படுகிறது என்பது பற்றிய தோராயமான விளக்கமொன்றைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான தகவல் தொகைமதிப்பு மூலம் சேகரிக்கப்பட்டது.

#### அட்டவணை 3.12 குடிநீரைப் பெற்றுக்கொள்ளும் பிரதான மார்க்கத்திற்கமைய சிறுவர் பராமரிப்பு மையங்களின்

| குடிநீரைப் பெற்றுக்கொள்ளும் பிரதான மார்க்கம் | நிறுவனங்கள் எண்ணிக்கை | % |
|---|---|---|
| பிரதான குழாய் நீர் | 46 | 75.4 |
| பாதுகாப்பான கிணறு | 11 | 18.0 |
| பாதுகாப்பற்ற கிணறு | 1 | 1.6 |
| குழாய் கிணறு | 2 | 3.3 |
| தண்ணீர் பவுசர் | 1 | 1.6 |
| **மொத்தம்** | **61** | **100** |

உரு 3.4
**குடிநீரைப் பெற்றுக்கொள்ளும் பிரதான மார்க்கத்திற்கமைய சிறுவர் பராமரிப்பு மையங்களின்**




மூலாதாரம்:
தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை

மாகாணத்தில் உள்ள சிறுவர் பராமரிப்பு மையங்களில் 93% இலும் அதிகமானவை பிரதான குழாய் நீர் அல்லது பாதுகாப்பான கிணற்றின் மூலம் குடிநீரைப் பெற்றுக்கொள்வது சிறப்பான தன்மையானகும்.

## 3.3 நிறுவனத்தின் சொத்துக்கள்

முக்கியமாக சிறுவர்களின் நலனுக்காகப் பயன்படும் நிறுவனத்திற்கு சொந்தமான மோட்டார் வாகனங்களின் உரிமை மற்றும் நில உரிமை பற்றிய தகவல்கள் நிறுவன சொத்துக்களின் கீழ் சேகரிக்கப்பட்டன.

சிறுவர் பராமரிப்பு மையங்களுக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களின் உரிமை என்பது சிறுவர்களின் நலன் தொடர்பில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அவ்வாறே நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களுக்கான பாதுகாப்பான போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கான வாய்ப்புக் கிடைக்கப் பெற்றதன் மூலம் நிறுவனத்திற்கு வெளியிலும் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான சிறப்பான வாய்ப்பாகவும் அமையும். அட்டவணை 3.13 மூலம் கிழக்கு மாகாணத்தில் உள்ள நிறுவனங்களின் மோட்டார் வாகன உரிமைத்துவம் பற்றிய தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் உள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் சுமார் 47% (29) நிறுவனங்களுக்கு எந்தவொரு மோட்டார் வாகன உரிமைத்துவமும் இல்லையெனப் பதிவாகியுள்ளமை கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும். மீதமுள்ள 32 நிறுவனங்களிடம் குறைந்தபட்சம் ஒரு வாகனமாவது காணப்படுகின்றது

**அட்டவணை 3.13 மோட்டார் வாகன உரிமைத்துவ அடிப்படையில் சிறுவர் பராமரிப்பு மையங்கள்**

| மோட்டார் வாகன வகை | நிறுவன எண்ணிக்கை | % |
|---|---|---|
| பேருந்துகள் | 8 | 13.1 |
| வான்கள் | 9 | 14.8 |
| மோட்டார் கார் | 3 | 4.9 |
| மூன்று சக்கர வண்டிகள் | 20 | 32.8 |
| 4 சில்லு/ 2 சில்லு உழவு இயந்திரம் | 1 | 1.6 |
| மோட்டார் சைக்கிள் | 6 | 9.8 |
| லொறி | 1 | 1.6 |
| கெப் வண் | 1 | 1.6 |
| ஜீப் | 1 | 1.6 |
| மோட்டார் வாகனங்கள் இல்லை | 29 | 47.5 |
| **மொத்தம்** | **61** | - |

குறிப்பு: சில நிறுவனங்கள் பல வகையான வாகனங்களைக் கொண்டிருப்பதால் நிறுவனங்களின் எண்ணிக்கையின் கூட்டுத்தொகை நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கைக்கு சமமாக அமையமாட்டாது

உரு 3.5
**மோட்டார் வாகன உரிமைத்துவ அடிப்படையில் சிறுவர் பராமரிப்பு மையங்கள்**




மூலாதாரம்:
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை

சிறுவர்கள் பராமரிப்பு நிலையங்களுக்கு சொந்தமான நிலத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்பதை அறிந்துகொள்வதற்கு தேவையான தகவல்களும் இந்தக் கணக்கெடுப்பில் சேகரிக்கப்பட்டது.

### அட்டவணை 3.14 நிறுவனத்தின் மொத்த நிலப்பரப்பின் படி சிறுவர் பராமரிப்பு மையங்கள்

| நில விஸ்தீரணம் | எண்ணிக்கை | % |
|---|---|---|
| 20 பேர்ச்சஸ் க்குக் குறைய | 1 | 1.6 |
| 20 - 39 பேர்ச்சஸ் | 2 | 3.3 |
| 40 - 79 பேர்ச்சஸ் | 8 | 13.1 |
| 80 - 119 பேர்ச்சஸ் | 9 | 14.8 |
| 120 -159 பேர்ச்சஸ் | 2 | 3.3 |
| ஏக்கர் 1 இலிருந்து ஏக்கர் 2 க்கு குறைய | 17 | 27.9 |
| ஏக்கர் 2 இலிருந்து ஏக்கர் 3 க்கு குறைய | 4 | 6.6 |
| ஏக்கர் 3 இலிருந்து ஏக்கர் 5 க்கு குறைய | 8 | 13.1 |
| ஏக்கர் 5 இலிருந்து ஏக்கர் 10 க்கு குறைய | 1 | 1.6 |
| ஏக்கர் 10 இற்குக் கூட | 4 | 6.6 |
| குறிப்பிடப்படவில்லை | 5 | 8.2 |
| **மொத்தம்** | **61** | **100** |

உரு3.6

**நிறுவனத்தின் மொத்த நிலப்பரப்பின் படி சிறுவர் பராமரிப்பு மையங்கள்**




மூலாதாரம்:
தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை

DCS

கிழக்கு மாகாணத்தில் உள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்களை கவனத்தில் கொண்டால் மொத்த நிறுவனங்களில் அரைவாசியிலும் அதிகமானவை 1 ஏக்கர் அல்லது அதற்கு மேற்பட்ட நிலத்தை வைத்திருப்பதாகத் பதிவாகியுள்ளமை சாதகமான நிலைமை எனக் குறிப்பிட முடியும்.

### 3.4 நிறுவனக் குழுக் கூட்டங்கள்

நிறுவனமயப்பட்ட சிறுவர்கள் தொடர்பில் மதிப்பாய்வு செய்தல் அந்தந்த நிறுவனங்களில் அமைக்கப்பட்டுள்ள குழுக்கள் மூலம் மேற்கொள்ளப்படும். ஸ்தானக் குழுக்கள் (Placement Committees), அனுமதிப் பத்திரக் குழுக்கள், (Warrant Committees) வழக்கு குழுக்கள் (Case Committees) என்றவாறு ஒவ்வொரு வகை நிறுவனத்திற்கும் பொருத்தமான குழுக் கூட்டங்களை உரிய காலங்களில் நடத்துவது சிறுவர் பற்றியது தேவையான முடிவுகளை எடுப்பதற்கு மிகவும் முக்கியமானதாகும். ஆகையால், ஒவ்வொரு வகை நிறுவனத்தின் மூலமும் உரிய குழுக் கூட்டங்களை நடாத்தும் முறை தொடர்பிலும் இந்த தொகைமதிப்பின் மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

### அட்டவணை 3.15 நிறுவன வகை மற்றும் ஸ்தாபனக் குழு/ உரிமக் குழு/ விடயக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்கமைய சிறுவர் பராமரிப்பு மையங்களின் எண்ணிக்கை

| நிறுவன வகை | மொத்த நிறுவனங்களின் எண்ணிக்கை | குழு கூட்டங்கள் நடத்தப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % |
| பாதுகாப்பான சிறுவர் இல்லம் | 3 | 1 | 33.3 |
| சான்றளிக்கப்பட்ட பாடசாலை | 2 | - | - |
| அரச பராமரிப்பு சிறுவர்கள் இல்லம் | 1 | - | - |
| பயிற்சி மற்றும் ஆலோசனை மையம்* | 1 | - | - |
| தன்னார்வத் தொண்டு சிறுவர்கள் இல்லம் | 54 | 43 | 79.6 |
| **மொத்தம்** | **61** | **44** | **72.1** |

*குழு கூட்டங்களை நடாத்தத் தேவையில்லை

### அட்டவணை 3.16 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஸ்தாபனக் குழு/ உரிமக் குழு/ விடயக் குழுக் கூட்டங்களின் எண்ணக்கைக்கமைய சிறுவர் பராமரிப்பு மையங்களின்

| நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | நிறுவனங்களின் எண்ணிக்கை | % |
|---|---|---|
| கூட்டம் 1 | 12 | 27.3 |
| 2 கூட்டங்கள் | 8 | 18.2 |
| 3 கூட்டங்கள் | 4 | 9.1 |
| 4 கூட்டங்கள் | 2 | 4.5 |
| 5 கூட்டங்கள் அல்லது அதற்கு மேல் | 18 | 40.9 |
| **கூட்டங்கள் நடாத்தப்படவில்லை** | **44** | **100** |

மொத்தம்

குழு கூட்டங்களை நடத்துவது பற்றி சேகரிக்கப்பட்ட தகவலின் படி குழு கூட்டங்களை நடாத்தத் தேவையற்ற பாதுகாப்பான சிறுவர் இல்லங்கள் 3, ஒரு பயிற்சி மற்றும் ஆலோசனை மையத்தைத் (தேவையில்லை என்றாலும் ஒரு பாதுகாப்பான சிறுவர் இல்லத்தில் ஒரு குழுக் கூட்டம் நடாத்தப்பட்டுள்ளதாகப் பதிவாகியுள்ளது.) தவிர மீதமுள்ள 57 நிறுவனங்களில் 43 நிறுவனங்கள் குழுக் கூட்டங்களை நடத்துவதாகத் தெரிவித்துள்ளமை அட்டவணை 3.15 மூலம் தெளிவாகின்றது. தன்னார்வத் தொண்டு சிறுவர்கள் இல்லங்கள் 11 இல் குழுக் கூட்டம் நடத்தப்படுவதில்லை எனப் பதிவாகியுள்ளமை ஒரு சிக்கலான நிலமையாகும். அவ்வாறே குழு கூட்டங்களை சகல நிறுவனங்களிலும் ஒரு குறைந்தபட்சம் ஒரு குழு கூட்டமாவது 2019 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டுள்ளமை அட்டவணை 3.16 இன் படி தெளிவாகின்றது. நிறுவனப்படுத்தப்பட்ட சிறுவர்களின் எதிர்கால வாழ்க்கை மற்றும் அன்றாட நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் எடுத்தல் இந்தக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்படுவதால் முறையாக இந்த நடவடிக்கை இடம்பெறுகின்றதா என்பதை மேற்பார்வை செய்தல் அத்தியாவசியமான விடயமாகும்.

## அத்தியாயம் 4

## சிறுவர் பராமரிப்பு மையங்களில் உள்ள சிறுவர்கள் பற்றிய தகவல்கள்

கிழக்கு மாகாணத்தில் நிறுவப்பட்டுள்ள சிறுவர் பராமரிப்பு மையங்களில் பராமரிக்கப்படும் சிறுவர்கள் பற்றிய விரிவான தகவல்களை இந்த அத்தியாயத்தில் புள்ளிவிபர ரீதியில் முன்வைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்போது பிள்ளை பற்றிய அடிப்படை தகவல்கள், பிள்ளை நிறுவனமயமாக்கப்பட்டமை பற்றிய தகவல்கள், கல்வி மற்றும் சுகாதாரம் பற்றிய தகவல், பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் பற்றிய தகவல்கள், உடன் பிறந்தவர்கள் பற்றிய தகவல்கள் மற்றும் சமூகமயமாக்கல் தொடர்பான தகவல்கள் ஆராயப்படும்.

### 4.1 சிறுவர்கள் பற்றிய அடிப்படை தகவல்கள்

சிறுவர் பராமரிப்பு மையங்களில் பராமரிக்கப்படும் சிறுவர்களுக்கான மாற்று பராமரிப்பு முறைகளை கண்டறியும் நோக்கத்துடன் தரவுகளை சேகரித்த போது பிள்ளையின் அடிப்படை மக்களியல் தகவல்களுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டது

**அட்டவணை 4.1 மாவட்டம், நிறுவன வகை மற்றும் பாலின அடிப்படையில் நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறுவர்கள்**

| மாவட்டம் மற்றும் நிறுவன வகை | மொத்தம் | | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| **கிழக்கு மாகாணம்** | **1,344** | **100** | **524** | **100** | **820** | **100** |
| பாதுகாப்பான சிறுவர்கள் இல்லம் | 11 | 0.8 | 4 | 0.8 | 7 | 0.9 |
| அரசு பராமரிப்பு சிறுவர்கள் இல்லம் | 4 | 0.3 | 3 | 0.6 | 1 | 0.1 |
| பயிற்சி மற்றும் ஆலோசனை மையம் | 5 | 0.4 | - | - | 5 | 0.6 |
| தன்னார்வத் தொண்டு சிறுவர்கள் இல்லம் | 1,324 | 98.5 | 517 | 98.7 | 807 | 98.4 |
| **மட்டக்களப்பு** | **869** | **100** | **369** | **100** | **500** | **100** |
| பாதுகாப்பான சிறுவர்கள் இல்லம் | 5 | 0.6 | 1 | 0.3 | 4 | 0.8 |
| தன்னார்வத் தொண்டு சிறுவர்கள் இல்லம் | 864 | 99.4 | 368 | 99.7 | 496 | 99.2 |
| **அம்பாறை** | **195** | **100** | **44** | **100** | **151** | **100** |
| பாதுகாப்பான சிறுவர்கள் இல்லம் | 3 | 1.5 | 1 | 2.3 | 2 | 1.3 |
| தன்னார்வத் தொண்டு சிறுவர்கள் இல்லம் | 192 | 98.5 | 43 | 97.7 | 149 | 98.7 |
| **திருகோணமலை** | **280** | **100** | **111** | **100** | **169** | **100** |
| பாதுகாப்பான சிறுவர்கள் இல்லம் | 3 | 1.1 | 2 | 1.8 | 1 | 0.6 |
| அரசு பராமரிப்பு சிறுவர்கள் இல்லம் | 4 | 1.4 | 3 | 2.7 | 1 | 0.6 |
| பயிற்சி மற்றும் ஆலோசனை மையம் | 5 | 1.8 | - | - | 5 | 3.0 |
| தன்னார்வத் தொண்டு சிறுவர்கள் இல்லம் | 268 | 95.7 | 106 | 95.5 | 162 | 95.9 |

தீவு முழுவதும் நிறுவனமயமாக்கப்பட்டுள்ள சிறுவர்களுள் சுமார் 13% கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள சிறுவர் பராமரிப்பு மையங்களில் பதிவாகியுள்ளதுடன் அந்த எண்ணிக்கை 1,344 ஆகும். கிழக்கு மாகாணத்தில் மாவட்டங்களுக்கு இடையே நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களின் பரம்பலை கருத்தில் கொள்ளும்போது அதிக எண்ணிக்கையிலான சிறுவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர். இது கிழக்கு மாகாணத்தில் நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களில் சுமார் 65% ஆக உள்ளது அவ்வாறே திருகோணமலை மாவட்டத்தில் 21%, அம்பாறை மாவட்டத்தில் 14%, என்றவாறும் கிழக்கு மாகாணத்தில் நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்கள் பரம்பி உள்ளனர். அம்பாறை மாவட்டத்தில் 2 சான்றளிக்கப்பட்ட பாடசாலைகள் அமையப்பெற்றிருந்தாலும் தொகைமதிப்பு சந்தர்ப்பத்தின் போது அந்தப் பாடசாலைகளில் எந்தவொரு பிள்ளையும் பதிவாகவில்லை.

நிறுவனத்தின் வகைக்கமைய சிறுவர்களின் பரம்பல் குறித்து அவதானம் செலுத்துவோமாயின் அதிக எண்ணிக்கையிலான நிறுவனங்கள் பதிவாகியுள்ள தன்னார்வ தொண்டு சிறுவர் இல்லங்களுள் சுமார் 99% (1,324) அளவிலான சிறுவர்கள் பதிவாகியுள்ளதுடன் ஏனைய பிரிவுகளைச் சேர்ந்த வெவ்வேறு நிறுவனங்களில் இருந்து 1% (20) சதவீதச் சிறுவர்களும் பதிவாகியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறுவர்களின் பரம்பலை பாலின அடிப்படையில் கவனத்தில் கொண்டால் 39% ஆண்களும். 61% பெண்களும் பரம்பியுள்ளதாக தரவுகள் மூலம் தெளிவாகின்றது. மாவட்ட அடிப்படையில் கவனத்தில்கொள்ளுமிடத்து சகல மாவட்டங்களிலும் பெண் பிள்ளைகளின் சதவீதம் அதிகமாகக் காணப்படுகின்றமை தெரியவந்துள்ளதுடன் அம்பாறை மாவட்டத்தில் நிறுவனமயப்படுத்தப்பட்ட பிள்ளைகளில் 77% பெண் பிள்ளைகள் ஆவர்.

உரு 4.1
**மாவட்டம் மற்றும் பாலின அடிப்படையில் நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்கள்**




**மூலாதாரம்**
தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம். இலங்கை

## அட்டவணை 4.2 மாவட்டம், வயது மற்றும் பாலின அடிப்படையில் நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்கள்

| மாவட்டம் மற்றும் வயது | மொத்தம் | | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| **கிழக்கு மாகாணம்** | **1,344** | **100** | **524** | **100** | **820** | **100** |
| <1 | 4 | 0.3 | 3 | 0.6 | 1 | 0.1 |
| 1 | - | - | - | - | - | - |
| 2 | - | - | - | - | - | - |
| 3 | - | - | - | - | - | - |
| 4 | - | - | - | - | - | - |
| 5 | 6 | 0.4 | 5 | 1.0 | 1 | 0.1 |
| 6 | 6 | 0.4 | 3 | 0.6 | 3 | 0.4 |
| 7 | 12 | 0.9 | 4 | 0.8 | 8 | 1.0 |
| 8 | 16 | 1.2 | 6 | 1.1 | 10 | 1.2 |
| 9 | 40 | 3.0 | 19 | 3.6 | 21 | 2.6 |
| 10-14 | 688 | 51.2 | 296 | 56.5 | 392 | 47.8 |
| 15-17 | 450 | 33.5 | 152 | 29.0 | 298 | 36.3 |
| 18+ | 122 | 9.1 | 36 | 6.9 | 86 | 10.5 |
| **மட்டக்களப்பு** | **869** | **100** | **369** | **100** | **500** | **100** |
| <1 | - | - | - | - | - | - |
| 1 | - | - | - | - | - | - |
| 2 | - | - | - | - | - | - |
| 3 | - | - | - | - | - | - |
| 4 | - | - | - | - | - | - |
| 5 | 3 | 0.3 | 2 | 0.5 | 1 | 0.2 |
| 6 | 3 | 0.3 | 2 | 0.5 | 1 | 0.2 |
| 7 | 11 | 1.3 | 4 | 1.1 | 7 | 1.4 |
| 8 | 8 | 0.9 | 3 | 0.8 | 5 | 1 |
| 9 | 24 | 2.8 | 15 | 4.1 | 9 | 1.8 |
| 10-14 | 433 | 49.8 | 218 | 59.1 | 215 | 43 |
| 15-17 | 299 | 34.4 | 95 | 25.7 | 204 | 40.8 |
| 18+ | 88 | 10.1 | 30 | 8.1 | 58 | 11.6 |

| மாவட்டம் மற்றும் வயது | மொத்தம் | | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| **அம்பாறை** | **195** | **100** | **44** | **100** | **151** | **100** |
| <1 | - | - | - | - | - | - |
| 1 | - | - | - | - | - | - |
| 2 | - | - | - | - | - | - |
| 3 | - | - | - | - | - | - |
| 4 | - | - | - | - | - | - |
| 5 | 1 | 0.5 | 1 | 2.3 | - | - |
| 6 | 2 | 1.0 | - | - | 2 | 1.3 |
| 7 | - | - | - | - | - | - |
| 8 | 5 | 2.6 | 1 | 2.3 | 4 | 2.6 |
| 9 | 6 | 3.1 | 2 | 4.5 | 4 | 2.6 |
| 10-14 | 103 | 52.8 | 18 | 40.9 | 85 | 56.3 |
| 15-17 | 59 | 30.3 | 20 | 45.5 | 39 | 25.8 |
| 18+ | 19 | 9.7 | 2 | 4.5 | 17 | 11.3 |
| **திருகோணமலை** | **280** | **100** | **111** | **100** | **169** | **100** |
| <1 | 4 | 1.4 | 3 | 2.7 | 1 | 0.6 |
| 1 | - | - | - | - | - | - |
| 2 | - | - | - | - | - | - |
| 3 | - | - | - | - | - | - |
| 4 | - | - | - | - | - | - |
| 5 | 2 | 0.7 | 2 | 1.8 | - | - |
| 6 | 1 | 0.4 | 1 | 0.9 | - | - |
| 7 | 1 | 0.4 | - | - | 1 | 0.6 |
| 8 | 3 | 1.1 | 2 | 1.8 | 1 | 0.6 |
| 9 | 10 | 3.6 | 2 | 1.8 | 8 | 4.7 |
| 10-14 | 152 | 54.3 | 60 | 54.1 | 92 | 54.4 |
| 15-17 | 92 | 32.9 | 37 | 33.3 | 55 | 32.5 |
| 18+ | 15 | 5.4 | 4 | 3.6 | 11 | 6.5 |

உரு 4.2:
**வயது மற்றும் பாலின அடிப்படையில் நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்கள்**




மூலாதாரம்
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை

கிழக்கு மாகாணத்தில் நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களின் பரம்பலை வயதடிப்படையில் கவனத்தில் கொண்டால் 10-14 வயதுப் பிரிவில் 51% (688) உயர் சதவீதம் பதிவாகியுள்ளதாக தெரிகிறது. அத்துடன் 15-17 வயதிற்குட்பட்டவர்களில் 33% (450), 0-9 வயது பிரிவில் 6% (84) மட்டுமே பதிவாகியுள்ளது. நாட்டில் தற்போது அமுலிலுள்ள சட்ட கட்டமைப்பிற்குள் 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட சிறுவர்கள் நிறுவனமயப்படுத்தப்பட முடியாது எனினும் கிழக்கு மாகாணத்தில் நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களில் 122 அதாவது நிறுவனமயப்படுத்தப்பட்டவர்களில் (14%) சிறுவர்கள் 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் என்ற தகவல் வெளியாகியுள்ளது.
கிழக்கு மாகாணத்தில் நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் உயர் பெறுமதியைக் காட்டியிருந்தாலும் வயதுப் பிரிவுகளுக்கிடையில் சிறுவர்களின் பரம்பலைக் கவனத்தில் கொண்டால் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே மாதிரியானது போக்கினைக் காட்டுகின்றது

**அட்டவணை 4.3 இனம் மற்றும் பாலின அடிப்படையில் நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்கள்**

| இனம் | மொத்தம் | | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| சிங்களவர் | 69 | 5.1 | 8 | 1.5 | 61 | 7.4 |
| இலங்கைத் தமிழர் | 1083 | 80.6 | 385 | 73.4 | 698 | 85.1 |
| இந்திய தமிழர் | 173 | 12.9 | 125 | 23.9 | 48 | 5.9 |
| இலங்கைச் சோனகர் | 12 | 0.9 | 4 | 0.8 | 8 | 1.0 |
| வேறு | 3 | 0.2 | 1 | 0.2 | 2 | 0.2 |
| இனக்குழு தெரியவில்லை | 4 | 0.3 | 1 | 0.2 | 3 | 0.4 |
| **மொத்தம்** | **1344** | **100** | **524** | **100** | **820** | **100** |

கிழக்கு மாகாணத்தில் அதிக சனத்தொகைப் பரம்பலைக் காட்டும் இலங்கைத் தமிழர் இனத் தொகுதியிலேயே நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறுவர்களில் பரம்பலும் அமைந்துள்ளமை தெரிய வருகின்றது. அதற்கமைய நிறுவனமயப்படுத்தப்பட்ட மொத்தச் சிறுவர்களில் 81% இலங்கைத் தமிழர் இனத் தொகுதியை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறுவர்களின் இனம் மற்றும் பால்நிலையினைக் கவனத்தில் கொண்டால் இலங்கைச் சோனகரைத் தவிர ஏனைய அனைத்து இனப் பிரிவிலும் ஆண்கள் பிரதிநிதித்துவத்துடன் ஒப்பிடுமிடத்து பெண் பிரதிநிதித்துவம் உயர் பெறுமதியைக் காட்டுவதுடன் இலங்கைச் சோனகர் பிரிவினுள் ஆண் பிரதிநிதித்துவம் பெண் பிரதிநிதித்துவத்தை விட உயர் பெறுமதியைக் காட்டுகின்றது.

உரு 4.3
**இன அடிப்படையில் நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்கள்**




**மூலாதாரம்**
தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம். இலங்கை

**அட்டவணை 4.4 மதம் மற்றும் பாலினத்தின்படி நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்கள்**

| சமயம் | மொத்தம் | | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| பௌத்தம் | 56 | 4.2 | 5 | 1.0 | 51 | 6.2 |
| இந்து | 851 | 63.3 | 298 | 56.9 | 553 | 67.4 |
| இஸ்லாம் | 175 | 13.0 | 125 | 23.9 | 50 | 6.1 |
| றோமன் கத்தோலிக்கம் | 82 | 6.1 | 42 | 8.0 | 40 | 4.9 |
| ஏனைய கிறிஸ்தவம் | 174 | 12.9 | 53 | 10.1 | 121 | 14.8 |
| ஏனையவை | 3 | 0.2 | 1 | 0.2 | 2 | 0.24 |
| குறிப்பிடப்படாதவை | 3 | 0.2 | - | - | 3 | 0.36 |
| **மொத்தம்** | **1344** | **100** | **524** | **100** | **820** | **100** |

நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறுவர்களின் பரம்பலை மத அடிப்படையில் கவனத்தில் கொண்டால் 63% இந்து, 13% இஸ்லாம் 13% ஏனைய கிறிஸ்தவம் 6% றோமன் கத்தோலிக்கம், 4% பௌத்தம் என்றவாறு பதிவாகியுள்ளது.

**அட்டவணை 4.5 மாவட்டம் மற்றும் பிள்ளை பிறக்கும் போது தாய் பராயமடையாதவரா என்பதற்கமைய நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்கள்**

கிழக்கு மாகாணத்தில் நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களில் 33 பேர் எந்தவொரு கல்வி நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை எனப் பதிவாகியுள்ளதுடன் அவர்களுள் பெரும்பான்மையானவர்கள் (88%) பெண் பிள்ளைகள் ஆவர். இவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருப்பதில் தாக்கம் செலுத்திய காரணிகள் தொடர்பில் வினவியறிந்த போது அதிகமானோர் கற்றல் குறைபாடுகள் மற்றும் சட்ட ரீதியான காரணங்களினால் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட முடியாமல் போனதாகப் பதிவாகியுள்ளது.

கற்றல் குறைபாடுகள் சிறுவர்களுக்கான கல்வி வாய்ப்புகள் இழக்கப்படுவதற்கான காரணமாக அமையக் கூடாது என்பதுடன் அந்தச் சிறுவர்களுக்காக மாற்றுக் கல்வி வாய்ப்புகள் அறிமுகப்படுத்துவதன் மூலம் அவர்களின் கல்வி உரிமையை உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறே 07 பிள்ளைகள் பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருந்த காரணத்தினால் தொகைமதிப்புச் சந்தர்ப்பத்தின் போது கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை எனப் பதிவாகியுள்ளது. மேலும் 4 சிறுவர்கள் பாடசாலை அனுமதி மறக்கப்பட்டிருப்பதாகவும் தொகைமதிப்பில் பதிவாகியுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களை தவிர்த்துக் கொள்வதற்காக பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உடனடியாக அவதானம் செலுத்த வேண்டும்.

### *பெற்றுள்ள உயர் கல்வி மற்றும் எழுத்தறிவு*

இந்த தொகைமதிப்பில் 6 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய சிறுவர்களால் பெறப்பட்டுள்ள உயர் கல்வித் தகைமை மற்றும் அவர்களின் எழுத்தறிவு பற்றி தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தில் நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களில் 186 பேர் க.பொ.த (சா/த) அல்லது அதற்கு மேற்பட்ட கல்வித் தகுதியைப் பெற்றுள்ளதாகப் பதிவாகியுள்ளது. அவர்களில் 07 பேர் க.பொ.த (உ/த) சித்தியடைந்துள்ள மாணவர்களாவர்

### அட்டவணை 4.26 பெற்றுள்ள மிக உயர்ந்த கல்வித் தகுதி மற்றும் பாலின் அடிப்படையில் 6 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறுவர்கள்

| உயர்கல்வித் தகைமை | மொத்தம் | | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| ஒருபோதும் பாடசாலை செல்லாத | 2 | 0.1 | - | - | 2 | 0.2 |
| தற்போது தரம் 1 இல் கல்வி பயிலும் | 8 | 0.6 | 4 | 0.8 | 4 | 0.5 |
| தரம் 1 சித்தி | 19 | 1.4 | 5 | 1.0 | 14 | 1.7 |
| தரம் 2 சித்தி | 27 | 2.0 | 7 | 1.4 | 20 | 2.4 |
| தரம் 3 சித்தி | 29 | 2.2 | 14 | 2.7 | 15 | 1.8 |
| தரம் 4 சித்தி | 66 | 4.9 | 35 | 6.8 | 31 | 3.8 |
| தரம் 5 சித்தி | 110 | 8.2 | 50 | 9.7 | 60 | 7.3 |
| தரம் 6 சித்தி | 135 | 10.1 | 52 | 10.1 | 83 | 10.1 |
| தரம் 7 சித்தி | 203 | 15.2 | 92 | 17.8 | 111 | 13.6 |
| தரம் 8 சித்தி | 213 | 16.0 | 88 | 17.1 | 125 | 15.3 |
| தரம் 9 சித்தி | 138 | 10.3 | 46 | 8.9 | 92 | 11.2 |
| தரம் 10 சித்தி | 195 | 14.6 | 66 | 12.8 | 129 | 15.8 |
| க.பொ.த (சா.த) சித்தி | 179 | 13.4 | 54 | 10.5 | 125 | 15.3 |
| க.பொ.த (உ..த) சித்தி | 7 | 0.5 | 2 | 0.4 | 5 | 0.6 |
| பட்டம் பெற்றுள்ள | - | - | - | - | - | - |
| குறிப்பிடப்படவில்லை | 3 | 0.2 | 1 | 0.2 | 2 | 0.2 |
| மொத்தம் | **1,334** | **100** | **516** | **100** | **818** | **100** |

நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள 6 வயது அல்லது அதற்கு மேற்பட்ட சிறுவர்களின் எழுத்தறிவு பற்றி வினவியறிந்த போது அந்த சிறுவர்களில் 97% தங்கள் பயன்படுத்தும் மொழியில் ஏதாவது எழுதுவதற்கும், வாசித்து விளங்கிக் கொள்வதற்கும் ஆற்றல் இருப்பதாக பதிவாகியுள்ளது. இந்த சதவீதம் சிறுமிகளுக்கு 97% ஆகவும் சிறுவர்களுக்கு 98% பதிவாகியிருக்கிறது. மேலும் வயதுப் பிரிவின் அடிப்படையில் கவனத்தில் கொண்டால் 18 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களில் 99% உயர் எழுத்தறிவு வீதத்தைக் வெளிக்காட்டுகிறது. சகல வயதுப் பிரிவுகளிலும் பெண் பிள்ளைகளுடன் ஒப்பிடுமிடத்து ஆண் பிள்ளைகளின் எழுத்தறிவு உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றமை விசேட தன்மையாகும்.

அட்டவணை 4.27 பாலினம், வயதுப் பிரிவு மற்றும் எழுத்தறிவு என்பவற்றிற்கமைய 6 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்கள்

| பாலினம்/ வயதுப் பிரிவு | மொத்தம் | | வாசிக்கவும் எழுதவும் முடியும் | | வாசிக்கவும் எழுதவும் முடியாது | | குறிப்பிடப்படவில்லை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக் கை | % | எண்ணிக் கை | % | எண்ணிக் கை | % | எண்ணிக் கை | % |
| **ஆண்** | **516** | **100** | **504** | **97.7** | **12** | **2.3** | **-** | **-** |
| 6-7 | 7 | 100 | 7 | 100.0 | - | - | - | - |
| 8-10 | 55 | 100 | 54 | 98.2 | 1 | 1.8 | - | - |
| 11-14 | 266 | 100 | 259 | 97.4 | 7 | 2.6 | - | - |
| 15-17 | 152 | 100 | 148 | 97.4 | 4 | 2.6 | - | - |
| 18 க்கு மேற்பட்ட | 36 | 100 | 36 | 100.0 | - | - | - | - |
| **பெண்** | **818** | **100** | **790** | **96.6** | **25** | **3.1** | **3** | **0.4** |
| 6-7 | 11 | 100 | 7 | 63.6 | 4 | 36.4 | - | - |
| 8-10 | 57 | 100 | 52 | 91.2 | 5 | 8.8 | - | - |
| 11-14 | 366 | 100 | 356 | 97.3 | 9 | 2.5 | 1 | 0.3 |
| 15-17 | 298 | 100 | 290 | 97.3 | 6 | 2.0 | 2 | 0.7 |
| 18 க்கு மேற்பட்ட | 86 | 100 | 85 | 98.8 | 1 | 1.2 | - | - |
| **மொத்தம்** | **1,334** | **100** | **1,294** | **97.0** | **37** | **2.8** | **3** | **0.2** |
| 6-7 | 18 | 100 | 14 | 77.8 | 4 | 22.2 | - | - |
| 8-10 | 112 | 100 | 106 | 94.6 | 6 | 5.4 | - | - |
| 11-14 | 632 | 100 | 615 | 97.3 | 16 | 2.5 | 1 | 0.2 |
| 15-17 | 450 | 100 | 438 | 97.3 | 10 | 2.2 | 2 | 0.4 |
| 18 க்கு மேற்பட்ட | 122 | 100 | 121 | 99.2 | 1 | 0.8 | - | - |

***தொழில் கல்வி***

ஒரு பிள்ளை தொழில் கல்வித் தகைமையைப் பெற்றிருப்பதன் மூலம் பிள்ளையின் எதிர்காலத்தை திட்டமிடுவதற்கு ஏதாவதொரு வகையில் உதவியாக இருக்கும். குறிப்பாக நிறுவனமயமாக்கப்பட்ட பிள்ளையை மீண்டும் சமூகமயப்படுத்தும் போது அவன்/ அவள் தொழில் கல்வித் தகைமையைப் பெற்றிருந்தால் அதற்கேற்ற தொழில் வாய்ப்புகளை அடையாளம் கண்டு அதன் மூலம் பிள்ளையை சமூகமயப்படுத்துவதற்காக சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம். அத்தகைய தொழிற் கல்வியை பெற்றிருப்பதன் மூலம் பிள்ளைக்கு எதிர்காலத்தில் தமது பொருளாதார நடவடிக்கை அல்லது சுயதொழில் ஒன்றைத் தொடங்க வாய்ப்புள்ளது. ஆகையால் இந்தத் தொகைமதிப்பில் 16 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட சிறுவர்கள் தொழில் பயிற்சியைப் பெற்றுள்ளார்களா என்பது பற்றி தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தில் நிறுவனமயமாக்கப்பட்ட பிள்ளைகள் மத்தியில் 16 வயது அல்லது அதற்கு மேற்பட்ட 403 சிறுவர்கள் உள்ளனர் எனப் பதிவாகியுள்ளதுடன் அவர்களுள் தொழில் தகுதியை 5% (20) பேர் மட்டுமே பெற்றுள்ளனர் எனவும் பதிவாகியுள்ளது. இருப்பினும், 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட சிறுவர்களிடையே தொழில் தகுதிகளைப் பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை உயர் பெறுமதியை எடுத்துள்ளது. நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களிடையே தொழில் கல்வித் தகைமையைப் பெற்ற சிறுவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதில் முக்கிய செல்வாக்கு செலுத்தியிருப்பது 16 வயது அல்லது அதற்கு மேற்பட்ட சிறுவர்களில் அதிகமான சதவீதம் (95%) ஏதாவதொரு கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகும். அவர்களில் 92% பாடசாலை அல்லது உயர் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதும், சுமார் 4% அளவானோர் ஏற்கனவே தொழில் கல்வி பாடநெறி அல்லது வேறு கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகும்

அட்டவணை 4.28 நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட தொழில் கல்வித் தகைமையைப் பெற்றுள்ள 16 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட பிள்ளைகள் பாலினம் மற்றும் வயதுப் பிரிவிற்கமைய

| பாலினம் மற்றும் வயது | மொத்த பிள்ளைகளின் எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட தொழில் தகைமையுடைய பிள்ளைகள் % | |
|---|---|---|---|
| | | எண்ணி க்கை | % |
| **ஆண்** | **122** | **6** | **4.9** |
| 16 | 48 | - | - |
| 17 | 38 | 2 | 5.3 |
| 18 க்கு மேல் | 36 | 4 | 11.1 |
| **பெண்** | **281** | **14** | **5.0** |
| 16 | 106 | 1 | 0.9 |
| 17 | 89 | 4 | 4.5 |
| 18 க்கு மேல் | 86 | 9 | 10.5 |
| **மொத்தம்** | **403** | **20** | **5.0** |
| 16 | 154 | 1 | 0.6 |
| 17 | 127 | 6 | 4.7 |
| 18 க்கு மேல் | 122 | 13 | 10.7 |

### 4.4 பிள்ளையின் நடத்தைப் போக்கு, நோய் மற்றும் இயலாமை பற்றிய தகவல்கள்

நிறுவனமயமாக்கப்பட்ட ஒரு பிள்ளை இயல்பான நடத்தைப் போக்குடன் நேரத்தை செலவிடுகின்றதா அல்லது விசேடமான நடத்தைப் போக்கினை வெளிகாட்டுகிறதா என்பதை ஆராய்வதன் மூலம் நிறுவனச் சூழலில் பிள்ளையின் உளவியல் தன்மை தொடர்பில் அடிப்படை விளக்கமொன்றைப் பெறலாம். பிள்ளையின் உடல்/ மன ஆரோக்கியம் பிள்ளையை சமூகமயமாக்கலைத் தீர்மானிப்பதால், இந்தக் கணக்கெடுப்பில் பிள்ளைகளின் நடத்தைப் போக்கு, நோய் மற்றும் இயலாமை பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

### அட்டவணை 4.29 பொதுவான அவதானிப்பின் படி சிறுவர்களின் நடத்தைப் போக்கு மற்றும் பாலினத்திற்கமைய நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்கள்

| சிறுவர்களின் நடத்தைப் போக்கு | மொத்தம் | | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| வழக்கமான நடத்தை போக்கு | 1305 | 97.1 | 514 | 98.1 | 791 | 96.5 |
| தனிமையில் நேரத்தை செலவிடுதல்/ அவ்வாறு செய்வதில் விருப்பம் காட்டுதல் | 15 | 1.1 | 3 | 0.6 | 12 | 1.5 |
| தாமாகவே கடுமையான வெட்டுக் காயங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்/ அவ்வாறு செய்ய முயற்சித்துள்ளார் | 3 | 0.2 | 1 | 0.2 | 2 | 0.2 |
| தனது உயிருக்கு தீங்கு விளைவிக்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் | 1 | 0.1 | - | - | 1 | 0.1 |
| ஊழியர்கள்/ பிற சிறுவர்களை அடிக்கடி மோசமான வார்த்தைகளால் திட்டுதல் | 14 | 1.0 | 3 | 0.6 | 11 | 1.3 |
| மற்றைய சிறுவர்களை அடித்துள்ளார்/ அவ்வாறு செய்ய முயற்சித்துள்ளார் | 21 | 1.6 | 4 | 0.8 | 17 | 2.1 |
| ஊழியர்களை அடித்துள்ளார்/ அவ்வாறு செய்ய முயற்சித்துள்ளார் | 6 | 0.4 | - | - | 6 | 0.7 |
| தப்பித்துச் செல்ல முயற்சித்துள்ளார் | 3 | 0.2 | - | - | 3 | 0.4 |
| அதி பாலியல்/ ஓரினச்சேர்க்கை செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளார் | 1 | 0.1 | 1 | 0.2 | - | - |
| ஏனையவை | 3 | 0.2 | 2 | 0.4 | 1 | 0.1 |
| **மொத்தம்** | **1,344** | **-** | **524** | **-** | **820** | **-** |

குறிப்பு: சில சிறுவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நடத்தை போக்கினைக் காட்டுவதால் கூட்டுத்தொகை சமமாக காணப்படமாட்டாது.

கிழக்கு மாகாணத்தில் நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களின் நடத்தை முறையினை கவனித்தால் அந்த சிறுவர்கள் மத்தியில் 1305 (97%) பேர் இயல்பான நடத்தை முறையை வெளிகாட்டுவதாக பதிவாகியுள்ளது. நடத்தை பிரச்சினைகள் சிறிய எண்ணிக்கையான சிறுவர்களிடம் பதிவாகியுள்ளதுடன் அந்த எண்ணிக்கை 39 மட்டுமாகும். மொத்த சிறுவர்களில் 21 பேர் மட்டுமே நிறுவனத்தில் உள்ள மற்ற சிறுவர்களுடன் மோதல்களில் ஈடுபட்டுள்ளதாகவும் அல்லது அவ்வாறு செய்வதற்கு முயற்சி செய்துள்ளதாகவும் நிறுவன நிர்வாகத்தால் அடையாளம் காணப்பட்டுள்ளது. தனிமையில் நேரத்தை செலவிடுதல்/ அவ்வாறு செய்வதில் விருப்பம் காட்டும் 15 பேரும், 14 பேர் ஊழியர்கள்/ பிற சிறுவர்களை அடிக்கடி மோசமான வார்த்தைகளால் திட்டுவில் ஈடுபட்டுள்ளதாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவ்வாறு சிறுவர்கள் பல்வேறு நடத்தை சிக்கல்களைக் கொண்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ள சிறுவர்கள் தொடர்பில் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### அட்டவணை 4.30 நீண்ட கால நோய்/ இயலாமை நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்கள் வயது மற்றும் பெண்/ ஆண் அடிப்படையில்

| வயதுப் பிரிவு மற்றும் பாலினம் | மொத்தப் பிள்ளைகளின் எண்ணிக்கை | நாள்பட்ட நோய்/ இயலாமையால் அவதியுறும் சிறுவர்கள் | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % |
| **ஆண்** | **524** | **31** | **5.9** |
| 0-4 | 3 | - | - |
| 5-9 | 37 | 1 | 2.7 |
| 10-14 | 296 | 14 | 4.7 |
| 15-17 | 152 | 14 | 9.2 |
| 18 அல்லது அதற்கு கூட | 36 | 2 | 5.6 |
| **பெண்** | **820** | **35** | **4.3** |
| 0-4 | 1 | - | - |
| 5-9 | 43 | 3 | 7.0 |
| 10-14 | 392 | 18 | 4.6 |
| 15-17 | 298 | 12 | 4.0 |
| 18 அல்லது அதற்கு கூட | 86 | 2 | 2.3 |
| **மொத்தம்** | **1,344** | **66** | **4.9** |
| 0-4 | 4 | - | - |
| 5-9 | 80 | 4 | 5.0 |
| 10-14 | 688 | 32 | 4.7 |
| 15-17 | 450 | 26 | 5.8 |
| 18 அல்லது அதற்கு கூட | 122 | 4 | 3.3 |

கிழக்கு மாகாணத்தில் நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களில் 66 பேர், அதாவது மொத்த சிறுவர்களில் சுமார் 5% நாள்பட்ட நோய்/ இயலாமையால் அவதிப்படுகிறார்கள் என்பது தொகைமதிப்பு தகவல் மூலம் தெரியவந்துள்ளது.

### அட்டவணை 4.31 நாட்பட்ட நோய்/ இயலாமையால் அவதியுறும் நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்கள், நாட்பட்ட நோய்/ இயலாமை மற்றும் பாலினத்தின் அடிப்படையில்

| நோய்/ இயலாமை | மொத்தம் | ஆண் | பெண் |
|---|---|---|---|
| இருதய நோய்கள் | 3 | 2 | 1 |
| சுவாசம் தொடர்பான நோய்கள் | 15 | 8 | 7 |
| பார்வைக் குறைபாடு | 10 | 6 | 4 |
| மனநோய் | 4 | 1 | 3 |
| கேட்டல் குறைபாடு | 5 | 4 | 1 |
| பேச்சுக் குறைபாடு | 8 | 5 | 3 |
| ஆட்டிசம் | 2 | 1 | 1 |
| கால்-கை வலிப்பு/ நரம்பியல் கோளாறுகள் | 4 | 1 | 3 |
| கை, கால் அங்கவீனம் | 2 | 1 | 1 |
| ஏனையவை | 6 | 3 | 3 |
| குறிப்பிடப்படவில்லை | 13 | 3 | 10 |
| **மொத்தம்** | **66** | **31** | **35** |

குறிப்பு: சில பிள்ளைகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட நோய்கள்/ இயலாமைகள் காணப்படுவதன் காரணமாக நாள்பட்ட நோய்/ இயலாமையால் அவதியுறும் சிறுவர்களின் மொத்த எண்ணிக்கை கூட்டுத்தொகை சமமாக காணப்படமாட்டாது.

கிழக்கு மாகாணத்தில் நாள்பட்ட நோய் அல்லது இயலாமையால் அவதிப்படும் சிறுவர்களில் பெரும்பாலானோர் சுவாசம் தொடர்பான நோய்களால் அவதிப்படுபவர்கள் எனப் பதிவாகியுள்ளதுடன் பார்வைக் குறைபாடு மற்றும் பேச்சுக் குறைபாட்டால் அவதியுறும் பிள்ளைகளும் அதிகமாகப் பதிவாகியுள்ளனர்

**அட்டவணை 4.32 நாட்பட்ட நோய்/ இயலாமையால் அவதியுறும் நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்கள், நாட்பட்ட நோய்/ இயலாமை மற்றும் வயதுப் பிரிவின் அடிப்படையில்**

| நோய்/ இயலாமை | மொத்தம் | 0-4 | 5-9 | 10-14 | 15-17 | 18 அல்லது அதற்கு மேல் |
|---|---|---|---|---|---|---|
| இருதய நோய்கள் | 3 | - | - | 1 | 2 | - |
| சுவாசம் தொடர்பான நோய்கள் | 15 | - | - | 9 | 6 | - |
| பார்வைக் குறைபாடு | 10 | - | - | 3 | 6 | 1 |
| மனநோய் | 4 | - | - | 2 | 2 | - |
| கேட்டல் குறைபாடு | 5 | - | 1 | - | 4 | - |
| பேச்சுக் குறைபாடு | 8 | - | 1 | 5 | 2 | - |
| ஆட்டிசம் | 2 | - | - | 2 | - | - |
| கால்-கை வலிப்பு/ நரம்பியல் கோளாறுகள் | 4 | - | - | 2 | 2 | - |
| கை, கால் அங்கவீனம் | 2 | - | - | - | 1 | 1 |
| ஏனையவை | 6 | - | - | 5 | 1 | - |
| குறிப்பிடப்படவில்லை | 13 | - | 2 | 6 | 3 | 2 |
| **நாள்பட்ட நோய்/ இயலாமையால் அவதியுறும் மொத்தச் சிறுவர்களின் எண்ணிக்கை** | **66** | **-** | **4** | **32** | **26** | **4** |

குறிப்பு: சில பிள்ளைகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட நோய்கள்/ இயலாமைகள் காணப்படுவதன் காரணமாக நாள்பட்ட நோய்/ இயலாமையால் அவதியுறும் சிறுவர்களின் மொத்த எண்ணிக்கை கூட்டுத்தொகை சமமாக காணப்படமாட்டாது.

**அட்டவணை 4.33 நாட்பட்ட நோய்/ இயலாமையால் அவதியுறும் மற்றும் அதற்காக சிகிச்சை பெறும் நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்கள் பாலினம் மற்றும் வயதுப் பிரிவின் அடிப்படையில்**

| வயதுப் பிரிவு மற்றும் பாலினம் | நோய்/ இயலாமையால் அவதியுறும் சிறுவர்களின் எண்ணிக்கை | சிகிச்சை பெறும் சிறுவர்கள் | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % |
| **ஆண்** | **31** | **22** | **71.0** |
| 0-4 | - | - | - |
| 5-9 | 1 | 1 | 100.0 |
| 10-14 | 14 | 8 | 57.1 |
| 15-17 | 14 | 12 | 85.7 |
| 18 அல்லது அதற்கு மேல் | 2 | 1 | 50.0 |
| **பெண்** | **35** | **19** | **54.3** |
| 0-4 | - | - | - |
| 5-9 | 3 | - | - |
| 10-14 | 18 | 9 | 50.0 |
| 15-17 | 12 | 9 | 75.0 |
| 18 அல்லது அதற்கு மேல் | 2 | 1 | 50.0 |
| **மொத்தம்** | **66** | **41** | **62.1** |
| 0-4 | - | - | - |
| 5-9 | 4 | 1 | 25.0 |
| 10-14 | 32 | 17 | 53.1 |
| 15-17 | 26 | 21 | 80.8 |
| 18 அல்லது அதற்கு மேல் | 4 | 2 | 50.0 |

கிழக்கு மாகாணத்தில் நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள ஏதாவதொரு நோய்/ இயலாமையால் அவதியுறும் சிறுவர்களில் சுமார் 62% சிறுவர்கள் அந்த நோய்/ இயலாமை நிலைமைகளுக்கு தொடர்ச்சியான மருத்துவ சிகிச்சையை எடுத்துக்கொள்வதாக பதிவாகியுள்ளது. பெண் பிள்ளைகளுடன் ஒப்பிடுமிடத்து ஆண் பிள்ளைகள் தொடர்ச்சியாக மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்வதில் அதிக ஈடுபாடு காட்டுவதாகப் பதிவாகியுள்ளது

### 4.5 சிறுவர்களின் பெற்றோர்/ பாதுகாவலர்கள் பற்றிய தகவல்

நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களின் குடும்ப பின்னணி பற்றி தேடியறிந்த போது அவர்களின் பெற்றோர்கள்/ பாதுகாவலர்களை பற்றிய தகவல்களைப் பெறுவது மிகவும் முக்கியமானதாகும். அவ்வாறே இந்த தகவல்கள் சிறுவர்களை சமூகமயமாக்கும் போது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அதாவது, பெற்றோர்/ பாதுகாவலர்கள் பற்றி கிடைத்த தகவலின்படி அந்த சிறுவர்களை தொடர்புடைய பாதுகாவலர்களிடம் மீண்டும் ஒப்படைக்க கூடிய சாத்தியம் உள்ளதா என்பதை தேடியறிய முடியமென்பதுடன் அவ்வாறில்லாத போது வேறு மாற்று பராமரிப்பு வாய்ப்புகளை நோக்கி திசைப்படுத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்த முடியும். இதற்காக இந்த தொகைமதிப்பில் சிறுவர்கள் நிறுவனமயமாக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது மற்றும் தொகைமதிப்பு சந்தர்ப்பத்தின் பிள்ளையின் பெற்றோர்/ பாதுகாவலர்கள் பற்றிய தகவல்கள் வெவ்வேறாக சேகரிக்கப்பட்டன.

### 4.5.1 சிறுவர்களை நிறுவனமயமாக்கும் சந்தர்ப்பத்தில் பெற்றோர்கள்/ பாதுகாவலர்கள் பற்றிய தகவல்கள்

இதன் கீழ், பிள்ளையை நிறுவனமயமாக்கும் போது பிள்ளையின் பாதுகாவலர்களாக இருந்தவர்கள் யார் என்பது பற்றியும் அவர்கள் உயிருடன் இருந்தார்களா, அவர்களின் பெற்றோர்கள்/ பாதுகாவலர்கள் சிறையில்/ வெளிநாட்டில் இருந்தார்களா பெற்றோர்/ பாதுகாவலர்களுக்கு தொழில்/ நிரந்தர வருமான மார்க்கம் இருந்ததா எனவும் மற்றும் அவர்கள் வருமானம் உழைக்க முடியாதவாறு நோய்/ இயலாமை நிலையில் காணப்பட்டனரா என்பது பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

அட்டவணை 4.34 மாவட்டத்தின் படி நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் நிறுவனமயமாக்கலின் போது காவலின் தன்மை

| மாவட்டம் மற்றும் பாதுகாவலர் | எண்ணிக்கை | % |
|---|---|---|
| **கிழக்கு மாகாணம்** | **1344** | **100** |
| பெற்றோர் இருவரும் | 274 | 20.4 |
| தந்தை மட்டும் | 101 | 7.5 |
| தாய் மட்டும் | 618 | 46.0 |
| வேறு நபர்கள் | 268 | 19.9 |
| பாதுகாவலர்கள் இல்லை | 25 | 1.9 |
| பாதுகாவலர்கள் பற்றி தெரியாது | 4 | 0.3 |
| குறிப்பிடப்படாதவை | 54 | 4.0 |
| **மட்டக்களப்பு** | **869** | **100** |
| பெற்றோர் இருவரும் | 192 | 22.1 |
| தந்தை மட்டும் | 58 | 6.7 |
| தாய் மட்டும் | 422 | 48.6 |
| வேறு நபர்கள் | 148 | 17.0 |
| பாதுகாவலர்கள் இல்லை | 10 | 1.2 |
| பாதுகாவலர்கள் பற்றி தெரியாது | 1 | 0.1 |
| குறிப்பிடப்படாதவை | 38 | 4.4 |

| மாவட்டம் மற்றும் பாதுகாவலர் | எண்ணிக்கை | % |
|---|---|---|
| **அம்பாறை** | **195** | **100** |
| பெற்றோர் இருவரும் | 67 | 34.4 |
| தந்தை மட்டும் | 16 | 8.2 |
| தாய் மட்டும் | 76 | 39.0 |
| வேறு நபர்கள் | 29 | 14.9 |
| பாதுகாவலர்கள் இல்லை | 2 | 1.0 |
| பாதுகாவலர்கள் பற்றி தெரியாது | - | - |
| குறிப்பிடப்படாதவை | 5 | 2.6 |
| **திருகோணமலை** | **280** | **100** |
| பெற்றோர் இருவரும் | 15 | 5.4 |
| தந்தை மட்டும் | 27 | 9.6 |
| தாய் மட்டும் | 120 | 42.9 |
| வேறு நபர்கள் | 91 | 32.5 |
| பாதுகாவலர்கள் இல்லை | 13 | 4.6 |
| பாதுகாவலர்கள் பற்றி தெரியாது | 3 | 1.1 |
| குறிப்பிடப்படாதவை | 11 | 3.9 |

உரு 4.9
நிறுவனமயப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தின்போது பாதுகாவலரின் தன்மைக்கமைய நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறுவர்கள்




மூலாதாரம் :
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை

கிழக்கு மாகாணத்தில் நிறுவன மயப்படுத்தப்பட்டுள்ள சிறுவர்கள் நிறுவன மயப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தின் போதான பாதுகாவலரின் தன்மையை வினவியறிந்தபோது மொத்தச் சிறுவர்களில் கிட்டத்தட்ட 3/4 அளவானோர் பெற்றோர் இருவரினதும் அல்லது ஒருவரினது பாதுகாப்பிலே இருந்துள்ளமை கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும். இதன் மூலம் தெளிவாவது யாதெனின் சிறுவர்களை நிறுவன மயப்படுத்துவதற்காக பெற்றோர்களின் பாதுகாப்பு இல்லாமல் போவதைத் தவிர வேறு காரணிகள் தாக்கம் செலுத்தியுள்ளன என்பதாகும். இந்தப் பிள்ளைகளுள் 25 பேர் எந்தவொரு பாதுகாவலரும் இன்றி நிறுவன மயப்படுத்தப்பட்டுள்ளமை மற்றும் 04 பேரின் பாதுகாவலர்கள் பற்றி தகவல்கள் அறிக்கையிடப்படாமை அவதானிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.35 மாவட்டம், நிறுவன மயப்படுத்தப்பட்ட போது பெற்றோர்கள் உயிருடன் இருந்தனரா மற்றும் பால்நிலை அடிப்படையில் நிறுவன மயப்படுத்தப்பட்ட சிறுவர்கள்**

| பெற்றோர்கள் உயிருடன் உள்ளமை | தொகை | | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| **கிழக்கு மாகாணம்** | **1344** | **100** | **524** | **100** | **820** | **100** |
| பெற்றோர் இருவரும் உயிருடன் உள்ளனர் | 823 | 61.2 | 323 | 61.6 | 500 | 61.0 |
| தந்தை மட்டும் உயிருடன் உள்ளார் | 101 | 7.5 | 33 | 6.3 | 68 | 8.3 |
| தாய் மட்டும் உயிருடன் உள்ளார் | 345 | 25.7 | 142 | 27.1 | 203 | 24.8 |
| பெற்றோர் இருவரும் உயிருடன் இல்லை | 37 | 2.8 | 15 | 2.9 | 22 | 2.7 |
| தந்தை இறந்து, தாய் பற்றித் தெரியாது | 8 | 0.6 | 3 | 0.6 | 5 | 0.6 |
| தாய் இறந்து, தந்தை பற்றித் தெரியாது | 20 | 1.5 | 8 | 1.5 | 12 | 1.5 |
| பெற்றோர் இருவரைப் பற்றியும்தெரியாது | 10 | 0.7 | - | - | 10 | 1.2 |
| **மட்டக்களப்பு** | **869** | **100** | **369** | **100** | **500** | **100** |
| பெற்றோர் இருவரும் உயிருடன் உள்ளனர் | 542 | 62.4 | 231 | 62.6 | 311 | 62.2 |
| தந்தை மட்டும் உயிருடன் உள்ளார் | 74 | 8.5 | 23 | 6.2 | 51 | 10.2 |
| தாய் மட்டும் உயிருடன் உள்ளார் | 209 | 24.1 | 101 | 27.4 | 108 | 21.6 |
| பெற்றோர் இருவரும் உயிருடன் இல்லை | 17 | 2.0 | 6 | 1.6 | 11 | 2.2 |
| தந்தை இறந்து, தாய் பற்றித் தெரியாது | 3 | 0.3 | 1 | 0.3 | 2 | 0.4 |
| தாய் இறந்து, தந்தை பற்றித் தெரியாது | 14 | 1.6 | 7 | 1.9 | 7 | 1.4 |
| பெற்றோர் இருவரைப் பற்றியும்தெரியாது | 10 | 1.2 | - | - | 10 | 2.0 |
| **அம்பாறை** | **195** | **100** | **44** | **100** | **151** | **100** |
| பெற்றோர் இருவரும் உயிருடன் உள்ளனர் | 129 | 66.2 | 32 | 72.7 | 97 | 64.2 |
| தந்தை மட்டும் உயிருடன் உள்ளார் | 11 | 5.6 | 2 | 4.5 | 9 | 6.0 |
| தாய் மட்டும் உயிருடன் உள்ளார் | 50 | 25.6 | 9 | 20.5 | 41 | 27.2 |
| பெற்றோர் இருவரும் உயிருடன் இல்லை | 4 | 2.1 | - | - | 4 | 2.6 |
| தாய் இறந்து, தந்தை பற்றித் தெரியாது | 1 | 0.5 | 1 | 2.3 | - | - |
| **திருகோணமலை** | **280** | **100** | **111** | **100** | **169** | **100** |
| பெற்றோர் இருவரும் உயிருடன் உள்ளனர் | 152 | 54.3 | 60 | 54.1 | 92 | 54.4 |
| தந்தை மட்டும் உயிருடன் உள்ளார் | 16 | 5.7 | 8 | 7.2 | 8 | 4.7 |
| தாய் மட்டும் உயிருடன் உள்ளார் | 86 | 30.7 | 32 | 28.8 | 54 | 32.0 |
| பெற்றோர் இருவரும் உயிருடன் இல்லை | 16 | 5.7 | 9 | 8.1 | 7 | 4.1 |
| தாய் இறந்து, தந்தை பற்றித் தெரியாது | 4 | 1.4 | 1 | 0.9 | 3 | 1.8 |
| பெற்றோர் இருவரைப் பற்றியும்தெரியாது | 6 | 2.1 | 1 | 0.9 | 5 | 3.0 |

கிழக்கு மாகாணத்தில் நிறுவனமயமாக்கப்பட்ட 1,344 சிறுவர்களுள் சுமார் 94% (1,269) நிறுவனமயமாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பெற்றோர் இருவரும் அல்லது இரண்டு பேரில் ஒருவர் உயிருடன் இருந்ததாகப் பதிவாகியுள்ளது. இதில் இந்தச் சிறுவர்களில் 61% மானவர்களின் பெற்றோர் இருவரும் உயிருடன் இருந்ததாகவும், மேலும் 1/4 அளவான சிறுவர்களின் தாய்மார் மட்டும் உயிருடன் இருந்ததாகவும் பதிவாகியுள்ளது. இவ்வாறு பெற்றோர்கள் இருவரும் உயிருடன் இருக்கும் போதும் சிறுவர்கள் நிறுவனமயமாக்கப்பட்டிருப்பது கவனம் செலுத்த வேண்டிய விடயமாகும். இந்தப் பிள்ளைகளில் 37 சிறுவர்களின் பெற்றோர் இருவரும் இறந்துவிட்டதாகப் பதிவாகியுள்ளதுடன் சுமார் 10 சிறுவர்களின் பெற்றோர் இருவரையும் பற்றிய தகவல்கள் எதுவும் தெரியாது எனவும் பதிவாகியுள்ளது

உரு 4.10

நிறுவன மயப்படுத்தப்பட்ட போது பெற்றோர்கள் உயிருடன் இருந்தனரா என்ற அடிப்படையில் நிறுவன மயப்படுத்தப்பட்ட சிறுவர்கள்




மூலாதாரம் :
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை

DCS

### அட்டவணை 4.36 நிறுவன மயப்படுத்தப்பட்ட போது தந்தையின் தகவல்களின் அடிப்படையில் நிறுவன மயப்படுத்தப்பட்ட சிறுவர்கள்

| தந்தை பற்றிய தகவல்கள் | எண்ணிக்கை | % |
|---|---|---|
| **தந்தையின் விவாக அந்தஸ்து** | | |
| திருமணமாகாதவர் | 25 | 2.7 |
| பிள்ளையின் தாயுடன் திருமணமானவர் | 397 | 43.0 |
| பிள்ளையின் தாயல்லாத வேறொருவருடன் திருமணமானவர் | 194 | 21.0 |
| விதவை/ விவாகரத்து/ பிரிந்து வாழும் | 273 | 29.5 |
| தெரியாது | 35 | 3.8 |
| **தந்தை சிறையில் வெளிநாட்டில் உள்ளாரா என்பது** | | |
| சிறைவாசம் அனுபவிப்பவர் | 39 | 4.2 |
| வெளிநாடு சென்றிருப்பவர் | 18 | 1.9 |
| சிறையில்/ வெளிநாட்டில் இருப்பவர் அல்ல | 645 | 69.8 |
| அது பற்றித் தெரியாது | 201 | 21.8 |
| குறிப்பிடப்படவில்லை | 21 | 2.3 |
| **தந்தைக்கு தொழில் /நிரந்தர வருமான மார்க்கம் ஒன்று உள்ளதா** | | |
| தொழில்/ நிரந்தர வருமான மார்க்கம் ஒன்று உள்ளது | 224 | 24.2 |
| தொழில்/ நிரந்தர வருமான மார்க்கம் ஒன்று இல்லை | 361 | 39.1 |
| தெரியாது | 338 | 36.6 |
| குறிப்பிடப்படவில்லை | 1 | 0.1 |
| **தந்தையின் ஆரோக்கிய நிலை** | | |
| வருமானம் உழைக்க முடியாதவாறு நோய்/ அங்கவீன நிலமையைக் கொண்டுள்ளார் | 96 | 10.4 |
| வருமானம் உழைக்க முடியாதவாறு நோய்/ அங்கவீன நிலமையைக் கொண்டிருக்கவில்லை | 529 | 57.3 |
| தெரியாது | 292 | 31.6 |
| குறிப்பிடப்படவில்லை | 7 | 0.8 |
| மொத்தம் | **924** | **100** |

### அட்டவணை 4.37 நிறுவன மயப்படுத்தப்பட்ட போது தந்தையின் தகவல்களின் அடிப்படையில் நிறுவன மயப்படுத்தப்பட்ட சிறுவர்கள்

| தாய் பற்றிய தகவல்கள் | எண்ணிக்கை | % |
|---|---|---|
| **தாயின் விவாக அந்தஸ்து** | | |
| திருமணமாகாதவர் | 35 | 3.0 |
| பிள்ளையின் தந்தையுடன் திருமணமானவர் | 397 | 34.0 |
| பிள்ளையின் தத்தையல்லாத வேறொருவருடன் திருமணமானவர் | 157 | 13.4 |
| விதவை/ விவாகரத்து/ பிரிந்து வாழும் | 545 | 46.7 |
| தெரியாது | 33 | 2.8 |
| குறிப்பிடப்படவில்லை | 1 | 0.1 |
| **தாய் சிறையில் வெளிநாட்டில் உள்ளாரா என்பது** | | |
| சிறைவாசம் அனுபவிப்பவர் | 5 | 0.4 |
| வெளிநாடு சென்றிருப்பவர் | 125 | 10.7 |
| சிறையில்/ வெளிநாட்டில் இருப்பவர் அல்ல | 902 | 77.2 |
| அது பற்றித் தெரியாது | 102 | 8.7 |
| குறிப்பிடப்படவில்லை | 34 | 2.9 |
| **தாய்க்கு தொழில் /நிரந்தர வருமான மார்க்கம் ஒன்று உள்ளதா** | | |
| தொழில்/ நிரந்தர வருமான மார்க்கம் ஒன்று உள்ளது | 172 | 14.7 |
| தொழில்/ நிரந்தர வருமான மார்க்கம் ஒன்று இல்லை | 854 | 73.1 |
| தெரியாது | 137 | 11.7 |
| குறிப்பிடப்படவில்லை | 5 | 0.4 |
| **தாயின் ஆரோக்கிய நிலை** | | |
| வருமானம் உழைக்க முடியாதவாறு நோய்/ அங்கவீன நிலமையைக் கொண்டுள்ளார் | 82 | 7.0 |
| வருமானம் உழைக்க முடியாதவாறு நோய்/ அங்கவீன நிலமையைக் கொண்டிருக்கவில்லை | 904 | 77.4 |
| தெரியாது | 173 | 14.8 |
| குறிப்பிடப்படவில்லை | 9 | 0.8 |
| மொத்தம் | **1168** | **100** |

நிறுவன மயப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் தந்தை பாதுகாவலராக 375 பிள்ளைகளுக்கு மட்டுமே ஆஜராகி இருந்தாலும் அந்தச் சந்தர்ப்பதில் 924 பிள்ளைகளின் தந்தை உயிருடன் இருந்ததாகப் பதிவாகியுள்ளமையால் அந்தப் பிள்ளைகள் தொடர்பில் அவர்களது தந்தை தொடர்பான அடிப்படைத் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. அதற்கமைய பிள்ளை நிறுவன மயப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் தந்தையின் விவாக அந்தஸ்தினைக் கருத்தில் கொண்டால் 397 பிள்ளைகளின் தந்தைமார் அந்தச் சந்தர்ப்பத்தில் பிள்ளையின் தாயாருடன் வசித்து வந்ததாகப் பதிவாகியுள்ளதுடன் தந்தையருள் 201 பேர் பிள்ளையின் தாயல்லாத வேறு பெண்ணுடன் திருமணமாகியிருப்பது பதிவாகியுள்ளது.

பிள்ளை நிறுவன மயப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்தப் பிள்ளைகளுள் 39 பேரின் தந்தையர் சிறையில் காணப்பட்டதுடன் 18 பிள்ளைகளின் தந்தையர் வெளிநாட்டில் வசித்ததாகப் பதிவாகியுள்ளது. அவ்வாறே பிள்ளை நிறுவன மயப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் தந்தைக்குத் தொழில் அல்லது வருமான மார்க்கம் ஒன்று இருந்ததா என்பதை வினவியறிந்தபோது 224 பிள்ளைகளின் தந்தையர்க்குத் தொழில் அல்லது நிரந்தர வருமான மார்க்கம் இருந்ததாகப் பதிவாகியுள்ளது. 361 பிள்ளைகளின் தந்தையர்க்குத் தொழில் அல்லது நிரந்தர வருமான மார்க்கம் காணப்படவில்லை எனப் பதிவாகியுள்ளது. இவ்வாறு காணப்பட்டாலும் வருமானம் உழைக்க முடியாத வகையில் நோய்/ அங்கவீன நிலைமையைக் கொண்டிருந்த தந்தையர் 96 பிள்ளைகளுக்கு மட்டுமே பதிவாகியுள்ளனர். பிள்ளைகளுள் 57% மானோரின் தந்தையர்கள் வருமானம் உழைக்க முடியாத வகையில் நோய்/ அங்கவீன நிலைமையைக் கொண்டிருக்கவில்லை எனப் பதிவாகியுள்ளது

நிறுவனமயப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் தாய் பாதுகாவலராக 892 பிள்ளைகளுக்கு மட்டுமே ஆஜராகி இருந்தாலும் அந்தச் சந்தர்ப்பதில் 1,368 பிள்ளைகளின் தாய்மார் உயிருடன் இருந்ததாக பதிவாகியுள்ளமையால் அந்தப் பிள்ளைகள் தொடர்பில் அவர்களது தாய் தொடர்பான அடிப்படைத் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. அதற்கமைய பிள்ளை நிறுவன மயப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் தாயின் விவாக அந்தஸ்தினைக் கருத்தில் கொண்டால் 397 பிள்ளைகளின் தாய்மார் அந்தச் சந்தர்ப்பத்தில் பிள்ளையின் தந்தையை திருமணம் செய்துள்ளதாகப் பதிவாகியுள்ளதுடன் தாய்மாரில் 157 பேர் பிள்ளையின் தந்தையல்லாத வேறு ஆணுடன் திருமணமாகியிருப்பது பதிவாகியுள்ளது. பிள்ளைகளில் 47% மானோரின் தாய்மார் விதவை/ விவாகரத்துப்பெற்ற/ பிரிந்து வாழும் வகுதிக்குள் அடங்குவதாகப் பதிவாகியுள்ளமை அவதானம் செலுத்த வேண்டிய விடயமாகும்.

பிள்ளை நிறுவன மயப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்தப் பிள்ளைகளுள் 05 பேரின் தாய்மார் சிறையில் காணப்பட்டதுடன் 125 பிள்ளைகளின் தாய்மார் வெளிநாட்டில் வசித்ததாகப் பதிவாகியுள்ளது. அவ்வாறே பிள்ளை நிறுவன மயப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் தாய்க்குத் தொழில் அல்லது வருமான மார்க்கம் ஒன்று இருந்ததா என்பதை வினவியறிந்தபோது 172 பிள்ளைகளின் தந்தையர்க்குத் தொழில் அல்லது நிரந்தர வருமான மார்க்கம் இருந்ததாகப் பதிவாகியுள்ளது. 854 பிள்ளைகளின் தாய்க்கு தொழில் அல்லது நிரந்தர வருமான மார்க்கம் காணப்படவில்லை எனப் பதிவாகியுள்ளது. இவ்வாறு காணப்பட்டாலும் வருமானம் உழைக்க முடியாத வகையில் நோய்/ அங்கவீன நிலைமையைக் கொண்டிருந்த தாய்மார் 82 பிள்ளைகளுக்கு மட்டுமே பதிவாகியுள்ளனர். பிள்ளைகளில் 67% மானோரின் தாய்மார் வருமானம் உழைக்க முடியாத வகையில் நோய்/ அங்கவீன நிலைமையைக் கொண்டிருக்கவில்லை எனப் பதிவாகியுள்ளது.

அட்டவணை 4.38 நிறுவன மயப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் பாதுகாவலரின் கீழுள்ள பிள்ளைகள், பாதுகாவலருடனான உறவு முறை மற்றும் பாதுகாவலர் அந்தச் சந்தர்ப்பத்தில் வசிப்பதற்குப் பொருத்தமான வசிப்பிடத்தில் வசித்து வந்தாரா என்பதன் அடிப்படையில்

| உறவு முறை | மொத்தம் | | வசிப்பதற்குப் பொருத்தமான வசிப்பிடத்தில் வசிக்காமை | | வசிப்பதற்குப் பொருத்தமான வசிப்பிடத்தில் வசித்தல் | | தெரியாது | | குறிப்பிடப்படவில்லை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | மொத்தம் % | எண்ணிக்கை | மொத்தம்% | எண்ணிக்கை | மொத்தம் % | எண்ணிக்கை | மொத்தம் % |
| தாத்தா | 11 | 100 | 7 | 63.6 | 4 | 36.4 | - | - | - | - |
| பாட்டி | 136 | 100 | 114 | 83.8 | 18 | 13.2 | 3 | 2.2 | 1 | 0.7 |
| மாமா | 11 | 100 | 10 | 90.9 | 1 | 9.1 | - | - | - | - |
| மாமி | 59 | 100 | 56 | 94.9 | 1 | 1.7 | 2 | 3.4 | - | - |
| சகோதரன்/ சகோதரி | 19 | 100 | 17 | 89.5 | 2 | 10.5 | - | - | - | - |
| வேறு உறவினர் | 12 | 100 | 11 | 91.7 | - | 0.0 | 1 | 8.3 | - | - |
| உறவு முறை குறிப்பிடப்படவில்லை | 6 | 100 | 3 | 50.0 | 1 | 16.7 | - | - | 2 | 33.3 |
| உறவினரல்லாத | 14 | 100 | 13 | 92.9 | 1 | 7.1 | - | - | - | - |
| மொத்தம் | 268 | 100 | 231 | 86.2 | 28 | 10.4 | 6 | 2.2 | 3 | 1.1 |

உரு 4.11
நிறுவன மயப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் பாதுகாவலரின் கீழுள்ள பிள்ளைகள், பாதுகாவலருடனான உறவு முறைக்கமைய




மூலாதாரம்
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை

கிழக்கு மாகாணத்தில் நிறுவன மயப்படுத்தப்பட்ட பிள்ளைகளுள் 268 பேர் அந்தச் சந்தர்ப்பத்தில் தாய்/ தந்தை அல்லாத வேறு பாதுகாவலரின் கீழ் வசித்து வந்ததாகப் பதிவாகியுள்ளது. அது நிறுவனமயமாக்கப்பட்ட மொத்த சிறுவர்களில் சுமார் 20% ஆகும். அவ்வாறே இந்தப் பிள்ளைகளை பாதுகாவலருடனான உறவுமுறைக்கமையக் கவனத்தில் கொண்டால் அதிகமான பாதுகாவலர்கள் பிள்ளைகளின் பாட்டிகள் என்பதுடன் அது பாதுகாவலரின் கீழுள்ள பிள்ளைகளில் அண்ணளவாக அரைவாசியிலும் அதிகமாகும். இதற்கு மேலதிகமாக 59 பேர் தாயின்/ தந்தையின் சகோதரி (மாமி) யின் பாதுகாப்பின் கீழ் வசித்துள்ளதாகப் பதிவாகியுள்ளனர்.

நிறுவனமயப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் தாய்/ தந்தை அல்லாத வேறு பாதுகாவலர்களின் கீழ் வசித்த பிள்ளைகள் வசித்த இடம் வசிப்பதற்குப் பொருத்தமான நிலையில் காணப்பட்டதா என்பதை வினவியறிந்த போது இந்தப் பிள்ளைகளில் 86% அளவிலானோர் ஏதாவதொரு வகையில் வசிப்பதற்குப் பொருத்தமான வகையில் நிர்மாணிக்கப்பட்ட இடத்தில் என்பது தொகைமதிப்புக் கணக்கெடுப்பு தகவல்களில் இருந்து தெளிவாகியுள்ளது. அவ்வாறே அந்தப் பிள்ளைகளுள் 28 பேர் வசிப்பதற்குப் பொருத்தமற்ற வகையில் நிர்மாணிக்கப்பட்ட இடத்தில் வசித்துள்ளதாகப் பதிவாகியுள்ளது.

அட்டவணை 4.39 நிறுவன மயப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் பாதுகாவலர்களின் கீழ் வசித்த பிள்ளைகள் பாதுகாவலர்களின் தகவல்களுக்கமைய

| பாதுகாவலர்களின் தகவல்கள் | எண்ணிக்கை | % |
|---|---|---|
| **பாதுகாவலருக்கு தொழில்/ நிரந்தர வருமான மார்க்கம் ஒன்று உள்ளதா** | | |
| தொழில்/ நிரந்தர வருமான மார்க்கம் உண்டு | 58 | 21.6 |
| தொழில்/ நிரந்தர வருமான மார்க்கம் இல்லை | 168 | 62.7 |
| தெரியாது | 38 | 14.2 |
| குறிப்பிடப்படவில்லை | 4 | 1.5 |
| **பாதுகாவலரின் ஆரோக்கிய நிலைமை** | | |
| வருமானம் உழைக்க முடியாதவாறு நோய்/ அங்கவீன நிலைமையைக் கொண்டுள்ளார் | 23 | 8.6 |
| வருமானம் உழைக்க முடியாதவாறு நோய்/ அங்கவீன நிலைமையைக் கொண்டிருக்கவில்லை | 208 | 77.6 |
| தெரியாது | 31 | 11.6 |
| குறிப்பிடப்படவில்லை | 6 | 2.2 |
| **பாதுகாவலரின் வயது** | | |
| 18 இலும் குறைவு | 7 | 2.6 |
| 18-64 | 170 | 63.4 |
| 65 அல்லது அதற்கு கூட | 59 | 22.0 |
| தெரியாது | 27 | 10.1 |
| குறிப்பிடப்படவில்லை | 5 | 1.9 |
| மொத்தம் | **268** | **100** |

நிறுவன மயப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் தாய்/ தந்தை தொழில் அல்லாத வேறு பாதுகாவலரின் பராமரிப்பின் கீழுள்ள பிள்ளைகளுள் 63% மானோரின் பாதுகாவலர்களுக்கு தொழில் அல்லது நிரந்தர வருமான மார்க்கம் இல்லையெனப் பதிவாகியுள்ளது. 58 பிள்ளைகளின் பாதுகாவலர்களுக்கு மட்டுமே ஏதேனும் தொழில் அல்லது நிரந்தர வருமான மார்க்கம் இருந்ததாகப் பதிவாகியுள்ளது. பாதுகாவலரின் ஆரோக்கிய நிலமையை வினவியறிந்தபோது 23 பேரின் பாதுகாவலர்கள் அந்தச் சந்தர்ப்பத்தில் வருமானம் உழைக்க முடியாத வகையில் நோய்/ அங்கவீன நிலமையைக் கொண்டிருந்ததாகப் பதிவாகியுள்ளதுடன் 208 பிள்ளைகளின் பாதுகாவலர்கள் அந்தச் சந்தர்ப்பத்தில் பாதுகாவலர்கள் வருமானம் உழைக்க முடியாத வகையில் நோய்/ அங்கவீன நிலமையைக் கொண்டிருக்கவில்லை எனப் பதிவாகியுள்ளது. பாதுகாவலரின் வயது தொடர்பில் அவதானத்தைச் செலுத்தவோமாயின் பிள்ளைகளில் அதிகமானோரின் (243) பாதுகாவலர்கள் 18-64 இடைப்பட்ட வயதுப் பிரிவில் அடங்குவதாகப் பதிவாகியுள்ளது. 7 பிள்ளைகளின் பாதுகாவலர்கள் 18 வயது அல்லது அதிலும் குறைந்தவர்கள் என்பதுடன் 59 பிள்ளைகளின் பாதுகாவலர்கள் 65 அல்லது அதிலும் கூடிய வயதுடையவர்களாகப் பதிவாகியுள்ளது.

### 4.5.2 பெற்றோர்/ பாதுகாவலர் பற்றிய நிகழ்காலத் தகவல்கள்

இதன் கீழ் தற்போது பிள்ளையின் பாதுகாவலராக நிறுவனத்தில் பதிவாகியுள்ளவர் யார் என்பது பற்றியும் பெற்றோர் பிள்ளைகளின் பாதுகாவலர்கள் எனின் அவர்களின் விவாக அந்தஸ்து, பெற்றோர்/ பாதுகாவலர் சிறையில் வெளிநாட்டில் உள்ளனரா என்பது பற்றியும் பெற்றோர்/ பாதுகாவலருக்கு தொழில்/ நிரந்தர வருமான மார்க்கம் உள்ளதா என்பது பற்றியும் தொழில்/ நிரந்தர வருமான மார்க்கம் இருப்பின் அது என்ன என்பது பற்றியும் பெற்றோர்/ பாதுகாவலர் வருமானம் உழைக்க முடியாதவாறு நோய்/ அங்கவீன நிலையில் உள்ளனரா என்பது பற்றியும் அவர்கள் பிள்ளையை பார்ப்பதற்காக நிறுவனத்திற்கு வருகைதரும் கால இடைவெளி தொடர்பான தகவல்கள் இதன் கீழ் சேகரிக்கப்படும்.

உரு 4.12
தற்போதைய பாதுகாவலரின் தன்மைக்கமைய நிறுவன மயப்படுத்தப்பட்ட பிள்ளைகள்




மூலாதாரம்
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை

கிழக்கு மாகாணத்தில் நிறுவன மயப்படுத்தப்பட்டுள்ள பிள்ளைகளுள் 77% மானோருக்கு (1,029) பெற்றோர்கள் இருவரும் அல்லது ஒருவர் தற்போதைய பாதுகாவலராக பதியப்பட்டுள்ளதாக பதிவாகியுள்ளது. இந்தப் பிள்ளைகளுள் 19%, அதாவது 251 பேருக்கு தற்போது எந்தவொரு பாதுகாவலரும் பதிவாகாமல் இருப்பது தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய பிரிவினர் அவதானம் செலுத்த வேண்டிய விடயமாகும்.

அட்டவணை 4.40 தற்போதைய பாதுகாவலரின் தன்மைக்கமைய நிறுவன மயப்படுத்தப்பட்ட பிள்ளைகள்

| பாதுகாவலர் | எண்ணிக்கை | % |
|---|---|---|
| **கிழக்கு மாகாணம்** | **1,344** | **100** |
| பெற்றோர் இருவரும் | 284 | 21.1 |
| தந்தை மட்டும் | 110 | 8.2 |
| தாய் மட்டும் | 635 | 47.2 |
| வேறு நபர்கள் | 251 | 18.7 |
| பாதுகாவலர் இல்லை | 64 | 4.8 |
| **மட்டக்களப்பு** | **869** | **100** |
| பெற்றோர் இருவரும் | 200 | 23.0 |
| தந்தை மட்டும் | 58 | 6.7 |
| தாய் மட்டும் | 424 | 48.8 |
| வேறு நபர்கள் | 143 | 16.5 |
| பாதுகாவலர் இல்லை | 44 | 5.1 |
| **அம்பாறை** | **195** | **100** |
| பெற்றோர் இருவரும் | 59 | 30.3 |
| தந்தை மட்டும் | 20 | 10.3 |
| தாய் மட்டும் | 89 | 45.6 |
| வேறு நபர்கள் | 22 | 11.3 |
| பாதுகாவலர் இல்லை | 5 | 2.6 |
| **திருகோணமலை** | **280** | **100** |
| பெற்றோர் இருவரும் | 25 | 8.9 |
| தந்தை மட்டும் | 32 | 11.4 |
| தாய் மட்டும் | 122 | 43.6 |
| வேறு நபர்கள் | 86 | 30.7 |
| பாதுகாவலர் இல்லை | 15 | 5.4 |

அட்டவணை 4.41 தந்தையின் தற்போதைய தகவல்களுக்கமைய நிறுவன மயப்படுத்தப்பட்டுள்ள பிள்ளைகள்

| தந்தையின் தற்போதைய தகவல்கள் | எண்ணிக்கை | % |
|---|---|---|
| **தந்தையின் விவாக அந்தஸ்து** | | |
| திருமணமாகாத | 24 | 2.6 |
| பிள்ளையின் தாயுடன் திருமணமானவர் | 369 | 39.8 |
| பிள்ளையின் தாயல்லாத வேறொருவருடன் திருமணமானவர் | 235 | 25.4 |
| தாரமிழந்த/ விவாகரத்து/ பிரிந்து வாழும் | 205 | 22.1 |
| தெரியாது | 85 | 9.2 |
| குறிப்பிடப்படவில்லை | 8 | 0.9 |
| **தந்தை சிறையில் வெளிநாட்டில் உள்ளாரா என்பது** | | |
| சிறைவாசம் அனுபவிப்பவர் | 22 | 2.4 |
| வெளிநாடு சென்றிருப்பவர் | 20 | 2.2 |
| சிறையில்/ வெளிநாட்டில் இருப்பவர் அல்ல | 625 | 67.5 |
| அது பற்றித் தெரியாது | 251 | 27.1 |
| குறிப்பிடப்படவில்லை | 8 | 0.9 |
| **தந்தைக்கு தொழில்/ நிரந்தர வருமான மார்க்கம் ஒன்று உள்ளதா** | | |
| தொழில்/ நிரந்தர வருமான மார்க்கம் ஒன்று உள்ளது | 223 | 24.1 |
| தொழில்/ நிரந்தர வருமான மார்க்கம் ஒன்று இல்லை | 326 | 35.2 |
| தெரியாது | 374 | 40.4 |
| குறிப்பிடப்படவில்லை | 3 | 0.3 |
| **தந்தையின் ஆரோக்கிய நிலை** | | |
| வருமானம் உழைக்க முடியாதவாறு நோய்/ அங்கவீன நிலைமையைக் கொண்டுள்ளார் | 94 | 10.2 |
| வருமானம் உழைக்க முடியாதவாறு நோய்/ அங்கவீன நிலைமையைக் கொண்டிருக்கவில்லை | 469 | 50.6 |
| தெரியாது | 340 | 36.7 |
| குறிப்பிடப்படவில்லை | 23 | 2.5 |
| **தந்தை பிள்ளையைப் பார்ப்பதற்காக நிறுவனத்திற்கு வருகைதரும் கால இடை வெளி** | | |
| மாதத்தில் பல தடவை | 140 | 15.1 |
| மாதத்தில் ஒரு தடவை | 191 | 20.6 |
| வருடத்தில் பல தடவை | 68 | 7.3 |
| பல வருடங்களுக்கு ஒரு தடவை | 18 | 1.9 |
| ஒருதடவை மட்டும் | 15 | 1.6 |
| இதுவரை வருகைதரவில்லை | 491 | 53.0 |
| குறிப்பிடப்படவில்லை | 3 | 0.3 |
| மொத்தம் | **926** | **100** |

தொகைமதிப்பினை நடாத்தும் சந்தர்ப்பத்தின்போது தந்தை பாதுகாவலராக பதிவாகியுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை 375 ஆக மட்டும் பதிவாகியிருந்தாலும் அந்தச் சந்தர்ப்பத்தில் 926 பிள்ளைகளின் தந்தையர் உயிருடன் இருந்தாகப் பதிவாகியுள்ளமையால் அந்தப் பிள்ளைகள் தொடர்பில் அவர்களின் தந்தை தொடர்பான அடிப்படைத் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. அதற்கமைய தந்தையின் தற்போதைய விவாக அந்தஸ்தினைக் கவனத்தில் கொண்டால் 368 பிள்ளைகளின் தந்தையர் மட்டுமே பிள்ளையின் தாயுடன் திருமணமாகி இருப்பதாக பதிவாகியுள்ளதுடன் பிள்ளையின் தாயல்லாத வேறு பெண்ணுடன் 241 பிள்ளைகளின் தந்தையர் திருமணமாகியுள்ளனர்

தொகைமதிப்பு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்தப் பிள்ளைகளின் 22 பேரின் தந்தையர் சிறையில் இருந்ததாகவும் 20 பேரின் தந்தையர் வெளிநாட்டில் இருந்ததாகவும் பதிவாகியுள்ளது. அவ்வாறே தொகைமதிப்பு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் தந்தைக்குத் தொழில் அல்லது வருமான மார்க்கம் ஒன்று உள்ளதா என்பதை வினவியறிந்தபோது தந்தைக்குத் தொழில் அல்லது நிரந்தர வருமான மார்க்கம் ஒன்று உள்ளதாக 223 பிள்ளைகளின் தந்தையர் மட்டுமே பதிவாகியிருப்பதுடன் இன்னும் 326 பேரின் தந்தையருக்கு தொழில் அல்லது நிரந்தர வருமான மார்க்கம் ஒன்று இல்லையென பதிவாகியுள்ளது. இவ்வாறு காணப்பட்டாலும் வருமானம் ஈட்ட முடியாதவாறு நோய்/ அங்கவீன நிலமையைக் கொண்ட தந்தையர் 94 பிள்ளைகளுக்கு மட்டுமே பதிவாகியுள்ளனர். 469 பிள்ளைகளின் தந்தையர் வருமானம் ஈட்ட முடியாதவாறு நோய்/ அங்கவீன நிலமையைக் கொண்டிருக்கவில்லை எனப் பதிவாகியுள்ளது. தொகைமதிப்பு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்தப் பிள்ளைகளில் 926 பேரின் தந்தையர் உயிருடன் இருந்ததாகப் பதிவாகியுள்ளதுடன் அவற்றுள் 491 பிள்ளைகளின் தந்தையர் ஒருபோதும் தமது பிள்ளையைப் பார்ப்பதற்காக நிறுவனத்திற்கு வருகை தரவில்லையென்பது கவலைக்குரிய விடயமாகும். பெரும்பாலான பிள்ளைகளின் தந்தையர் குறைந்தபட்சம் ஒரு தடவையாவது தமது பிள்ளையைப் பார்ப்பதற்காக நிறுவனத்திற்கு வருகை தந்துள்ளதாகப் பதிவாகியுள்ளது. இவற்றுள் குறைந்தபட்சம் மாதத்திற்கு ஒரு தடவையாவது தமது பிள்ளையினைப் பார்ப்பதற்காக 331 பிள்ளைகளின் தந்தையர் மட்டுமே வருகை தந்துள்ளனர்.

**அட்டவணை 4.42 தாயின் தற்போதைய தகவல்களுக்கமைய நிறுவன மயப்படுத்தப்பட்டுள்ள பிள்ளைகள்**

| தாயின் தற்போதைய தகவல்கள் | எண்ணிக்கை | % |
|---|---|---|
| **தாயின் விவாக அந்தஸ்து** | | |
| திருமணமாகாத | 27 | 2.3 |
| பிள்ளையின் தந்தையுடன் திருமணமானவர் | 369 | 31.5 |
| பிள்ளையின் தந்தைல்லாத வேறொருவருடன் திருமணமானவர் | 218 | 18.6 |
| விதவை/ விவாகரத்து/ பிரிந்து வாழும் | 491 | 41.9 |
| தெரியாது | 52 | 4.4 |
| **குறிப்பிடப்படவில்லை** | 14 | 1.2 |
| **தாய் சிறையில் வெளிநாட்டில் உள்ளாரா என்பது** | | |
| சிறைவாசம் அனுபவிப்பவர் | 2 | 0.2 |
| வெளிநாடு சென்றிருப்பவர் | 159 | 13.6 |
| சிறையில்/ வெளிநாட்டில் இருப்பவர் அல்ல | 887 | 75.7 |
| அது பற்றித் தெரியாது | 113 | 9.6 |
| குறிப்பிடப்படவில்லை | 10 | 0.9 |
| **தாய்க்கு தொழில்/ நிரந்தர வருமான மார்க்கம் ஒன்று உள்ளதா** | | |
| தொழில்/ நிரந்தர வருமான மார்க்கம் ஒன்று உள்ளது | 248 | 21.2 |
| தொழில்/ நிரந்தர வருமான மார்க்கம் ஒன்று இல்லை | 729 | 62.3 |
| தெரியாது | 188 | 16.1 |
| குறிப்பிடப்படவில்லை | 6 | 0.5 |
| **தாயின் ஆரோக்கிய நிலை** | | |
| வருமானம் உழைக்க முடியாதவாறு நோய்/ அங்கவீன நிலமையைக் கொண்டுள்ளார் | 81 | 6.9 |
| வருமானம் உழைக்க முடியாதவாறு நோய்/ அங்கவீன நிலமையைக் கொண்டிருக்கவில்லை | 888 | 75.8 |
| தெரியாது | 183 | 15.6 |
| **குறிப்பிடப்படவில்லை** | 19 | 1.6 |
| **தாய் பிள்ளையைப் பார்ப்பதற்காக நிறுவனத்திற்கு வருகைதரும் கால இடை வெளி** | | |
| மாதத்தில் பல தடவை | 443 | 37.8 |
| மாதத்தில் ஒரு தடவை | 356 | 30.4 |
| வருடத்தில் பல தடவை | 83 | 7.1 |
| வருடத்தில் ஒரு தடவை | 44 | 3.8 |
| பல வருடங்களுக்கு ஒரு தடவை | 33 | 2.8 |
| இதுவரை வருகைதரவில்லை | 208 | 17.8 |
| குறிப்பிடப்படவில்லை | 4 | 0.3 |
| மொத்தம் | **1,171** | **100** |

தொகைமதிப்பினை நடாத்தும் சந்தர்ப்பத்தின்போது தாய் பாதுகாவலராக பதிவாகியுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை 919 ஆக மட்டும் பதிவாகியிருந்தாலும் அந்தச் சந்தர்ப்பத்தில் 1,171 பிள்ளைகளின் தாய்மார் உயிருடன் இருந்தாகப் பதிவாகியுள்ளமையால் அந்தப் பிள்ளைகள் தொடர்பில் அவர்களின் தாய் தொடர்பான அடிப்படைத் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. அதற்கமைய தாயின் தற்போதைய விவாக அந்தஸ்தினைக் கவனத்தில் கொண்டால் 368 பிள்ளைகளின் தாய்மார் மட்டுமே பிள்ளையின் தந்தையுடன் திருமணமாகி இருப்பதாக பதிவாகியுள்ளதுடன் பிள்ளையின் தந்தையல்லாத வேறு ஆணுடன் 221 பிள்ளைகளின் தாய்மார் திருமணமாகியுள்ளனர்

தொகைமதிப்பு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்தப் பிள்ளைகளுள் இரண்டு பிள்ளைகளின் தாய் சிறையில் இருந்ததாகவும் 159 பேரின் தாய் வெளிநாட்டில் இருந்ததாகவும் பதிவாகியுள்ளது. அவ்வாறே தொகைமதிப்பு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் தாய்க்குத் தொழில் அல்லது வருமான மார்க்கம் ஒன்று உள்ளதா என்பதை வினவியறிந்த போது தாய்க்குத் தொழில் அல்லது நிரந்தர வருமான மார்க்கம் ஒன்று உள்ளதாக 248 பிள்ளைகளின் தாய் மட்டுமே பதிவாகியிருப்பதுடன் இன்னும் 729 பேரின் தாய்மாருக்கு தொழில் அல்லது நிரந்தர வருமான மார்க்கம் ஒன்று இல்லையென பதிவாகியுள்ளது. இவ்வாறு காணப்பட்டாலும் வருமானம் ஈட்ட முடியாதவாறு நோய்/ அங்கவீன நிலமையைக் கொண்ட தாய் 81 பிள்ளைகளுக்கு மட்டுமே பதிவாகியுள்ளனர். 799 பிள்ளைகளின் தாய் வருமானம் ஈட்ட முடியாதவாறு நோய்/ அங்கவீன நிலமையைக் கொண்டிருக்கவில்லை எனப் பதிவாகியுள்ளது. தொகைமதிப்பு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்தப் பிள்ளைகளில் 1,171 பேரின் தாய் உயிருடன் இருந்ததாகப் பதிவாகியுள்ளதுடன் அவற்றுள் 208 பிள்ளைகளின் தாய் ஒருபோதும் தமது பிள்ளையைப் பார்ப்பதற்காக நிறுவனத்திற்கு வருகைதரவில்லையென்பது கவலைக்குரிய விடயமாகும். ஏனைய பிள்ளைகளின் தாய்மார் குறைந்தபட்சம் ஒரு தடவையாவது தமது பிள்ளையைப் பார்ப்பதற்காக நிறுவனத்திற்கு வருகை தந்துள்ளதாகப் பதிவாகியுள்ளது. இவற்றுள் குறைந்தபட்சம் மாதத்திற்கு ஒரு தடவையாவது தமது பிள்ளையினைப் பார்ப்பதற்காக 799 பிள்ளைகளின் தந்தையர் மட்டுமே வருகை தந்துள்ளனர்.

### அட்டவணை 4.43 தற்போது தாய்/ தந்தை அல்லாத வேறு பாதுகாவலர்களின் கீழுள்ள நிறுவன மயப்படுத்தப்பட்டுள்ள பிள்ளைகள், பாதுகாவலர்களின் தகவல்களுக்கமைய

| பாதுகாவலரின் தற்போதைய தகவல்கள் | எண்ணிக்கை | % |
|---|---|---|
| **பாதுகாவலரின் வயது** | | |
| 18-64 | 82 | 32.7 |
| 65 மற்றும் அதற்குமேல் | 30 | 12.0 |
| தெரியாது | 139 | 55.4 |
| **பாதுகாவலருக்கு பிள்ளையுடனான உறவு முறை** | | |
| தாத்தா | 9 | 3.6 |
| பாட்டி | 122 | 48.6 |
| மாமா | 12 | 4.8 |
| மாமி | 56 | 22.3 |
| சகோதரன்/ சகோதரி | 27 | 10.8 |
| வேறு உறவினர் | 16 | 6.4 |
| உறவினர் அல்லாத | 7 | 2.8 |
| உறவு முறை குறிப்பிடப்படவில்லை | 2 | 0.8 |
| **பாதுகாவலரின் விவாக அந்தஸ்து** | | |
| திருமணமாகாத | 22 | 8.8 |
| திருமணமானவர் | 127 | 50.6 |
| விதவை/விவாகரத்து/பிரிந்து வாழும் | 80 | 31.9 |
| தெரியாது | 21 | 8.4 |
| குறிப்பிடப்படவில்லை | 1 | 0.4 |
| **பாதுகாவலரில் தங்கிவாழும் பிள்ளைகளின் எண்ணிக்கை** | | |
| தங்கி வாழும் பிள்ளைகள் இல்லை | 92 | 36.7 |
| ஒரு பிள்ளை மட்டும் | 26 | 10.4 |
| பிள்ளைகள் 2 | 43 | 17.1 |
| பிள்ளைகள் 3 | 23 | 9.2 |
| பிள்ளைகள் 4 | 10 | 4.0 |
| பிள்ளைகள் 5 அல்லது அதற்கு கூட | 6 | 2.4 |
| குறிப்பிடப்படவில்லை | 51 | 20.3 |
| **பாதுகாவலருக்கு தொழில்/ நிரந்தர வருமான மார்க்கம் ஒன்று உள்ளதா** | | |
| தொழில்/ நிரந்தர வருமான மார்க்கம் ஒன்று உள்ளது | 57 | 22.7 |
| தொழில்/ நிரந்தர வருமான மார்க்கம் ஒன்று இல்லை | 155 | 61.8 |
| தெரியாது | 38 | 15.1 |
| குறிப்பிடப்படவில்லை | 1 | 0.4 |
| **பாதுகாவலரின் ஆரோக்கிய நிலை** | | |
| வருமானம் உழைக்க முடியாதவாறு நோய்/ அங்கவீன நிலைமையைக் கொண்டுள்ளார் | 24 | 9.56 |
| வருமானம் உழைக்க முடியாதவாறு நோய்/ அங்கவீன நிலைமையைக் கொண்டிருக்கவில்லை | 195 | 77.69 |
| தெரியாது | 30 | 11.95 |
| **குறிப்பிடப்படவில்லை** | 2 | 0.80 |
| **தாய் பிள்ளையைப் பார்ப்பதற்காக நிறுவனத்திற்கு வருகைதரும் கால இடை வெளி** | | |
| மாதத்தில் பல தடவை | 108 | 43.0 |
| மாதத்தில் ஒரு தடவை | 98 | 39.0 |
| வருடத்தில் பல தடவை | 34 | 13.5 |
| வருடத்தில் ஒரு தடவை | 2 | 0.8 |
| பல வருடங்களுக்கு ஒரு தடவை | 4 | 1.6 |
| இதுவரை வருகைதரவில்லை | 4 | 1.6 |
| குறிப்பிடப்படவில்லை | 1 | 0.4 |
| மொத்தம் | **251** | **100** |

கிழக்கு மாகாணத்தில் நிறுவன மயப்படுத்தப்பட்ட பிள்ளைகளுள் 251 பேர் அதாவது 19% அளவிலானோர் தொகைமதிப்பு கணக்கெடுப்புச் சந்தர்ப்பத்தில் தாய்/ தந்தை அல்லாத வேறு பாதுகாவலரின் கீழ் வசித்து வந்ததாகப் பதிவாகியுள்ளது. அவ்வாறே இந்தப் பிள்ளைகளைப் பாதுகாவலருடனான உறவுமுறைக்கமையக் கவனத்தில் கொண்டால் 122 பிள்ளைகளின் பாதுகாவலர்கள் பிள்ளைகளின் பாட்டிகள் எனப் பதிவாகியுள்ளனர். இதற்கு மேலதிகமாக 56 பேர் தாயின்/ தந்தையின் சகோதரி (மாமி) யின் பாதுகாப்பின் கீழ் வசித்துள்ளதாகவும் பதிவாகியுள்ளது.

பாதுகாவலரின் வயது தொடர்பில் அவதானம் செலுத்துமிடத்து பிள்ளைகளில் அதிகமானோரின் (82 பேர்) பாதுகாவலர்கள் 18-64 வயதிற்கிடைப்பட்டவர்கள் எனப் பதிவாகியுள்ளதுடன் 30 பிள்ளைகளின் பாதுகாவலர்கள் 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் எனப் பதிவாகியுள்ளது. பாதுகாவலர்களின் விவாக அந்தஸ்தினைக் கவனத்தில் கொண்டால் நிறுவனமயப்படுத்தப்பட்ட இந்தப் பிள்ளைகளில் அரைவாசியிலும் சற்று அதிகமான பிள்ளைகளின் பாதுகாவலர்கள் திருமணமானவர்கள் எனப் பதிவாகியுள்ளதுடன் 22 பிள்ளைகளின் பாதுகாவலர்கள் திருமணமாகாதவர்கள் எனப் பதிவாகியுள்ளது.

அவ்வாறே தொகைமதிப்பு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் பாதுகாவலர்களின் கீழுள்ள பிள்ளைகளுள் 62% மானோரின் பாதுகாவலர்களுக்கு தொழில் அல்லது வருமான மார்க்கம் ஒன்று இல்லையென பதிவாகியுள்ளதுடன் ஏதாவதொரு வருமான மார்க்கம் இருப்பதாக 57 பேரின் பாதுகாவலர்கள் மட்டுமே பதிவாகியுள்ளனர். பாதுகாவலர்களின் ஆரோக்கிய நிலமையை வினவியறிந்தபோது 24 பிள்ளைகளின் பாதுகாவலர்கள் அப்போது வருமானம் உழைக்க முடியாத நோய்/ அங்கவீன நிலையைக் கொண்டிருந்தனர் எனப் பதிவாகியுள்ளது. எவ்வாறாயினும் பிள்ளைகளுள் 195 பேரின் பாதுகாவலர்கள் வருமானம் உழைக்கும் செயற்பாட்டிற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான நோய்/ அங்கவீன நிலையைக் கொண்டிருக்கவில்லை எனப் பதிவாகியுள்ளது.

இந்தப் பிள்ளைகளுக்கு மேலதிகமாக இந்தப் பாதுகாவலரில் தங்கியிருக்கும் வேறு பிள்ளைகள் உள்ளனரா என்பதை வினவியறிந்த போது இந்தப் பிள்ளைகளில் 92 பேரின் பாதுகாவலர்களுக்கு அவர்களில் தங்கி வாழும் வேறு பிள்ளைகள் இல்லையெனவும் 26 பேரின் பாதுகாலர்களுக்கு ஒரு பிள்ளை மட்டும் இருப்பதாகவும் பதிவாகியுள்ளது. பாதுகாவலர்களில் தங்கி வாழும் 4 அல்லது அதற்கு மேற்பட்ட பிள்ளைகள், 16 பேரின் பாதுகாவலர்களுக்கு மட்டுமே பதிவாகியுள்ளது. 206 பிள்ளைகளின் பாதுகாவலர்கள் குறைந்த பட்சம் மாதத்திற்கொரு முறை பிள்ளையைப் பார்ப்பதற்கு நிறுவனத்திற்கு வருகை தருவதாகவும் பதிவாகியுள்ளது.

## 4.6 குழந்தைகளின் உடன்பிறப்புகள் பற்றிய தகவல்கள்

நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள பிள்ளைகளின் குடும்பப் பின்னணியைப் பற்றித் தேடியறிந்தபோது அந்தப் பிள்ளைகளுக்கு வேறு சகோதர/ சகோதரிகள் உண்டா மற்றும் அவ்வாறு இருப்பின் அவர்கள் எந்த இடங்களில் வசிக்கின்றனர் என்பது பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் முக்கியமானதாகும். ஆகையால் இந்தத் தொகைமதிப்பின் போது பிள்ளைகளின் உடன் பிறப்புக்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

**அட்டவணை 4.44 பிள்ளைக்குக் காணப்படும் சகோதர/ சகோதரிகளின் எண்ணிக்கைக்கமைய நிறுவன மயப்படுத்தப்பட்ட பிள்ளைகள்**

| சகோதர/ சகோதரிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | % |
|---|---|---|
| சகோதர/ சகோதரிகள்1 | 329 | 24.5 |
| சகோதர/ சகோதரிகள் 2 | 371 | 27.6 |
| சகோதர/ சகோதரிகள் 3 | 234 | 17.4 |
| சகோதர/ சகோதரிகள் 4 | 97 | 7.2 |
| சகோதர/ சகோதரிகள் 5 | 32 | 2.4 |
| சகோதர/ சகோதரிகள் 6 மற்றும் அதற்கு கூட | 33 | 2.5 |
| சகோதர/ சகோதரிகள் இல்லை | 215 | 16.0 |
| சகோதர/ சகோதரிகள் உள்ளனரா எனத் தெரியாது | 32 | 2.4 |
| சகோதர/ சகோதரிகளின் எண்ணிக்கை குறிப்பிடப்படவில்லை | 1 | 0.1 |
| **தொகை** | **1,344** | **100** |

உரு 4.13
பிள்ளைக்குக் காணப்படும் சகோதர/ சகோதரிகளின் எண்ணிக்கைக்கமைய நிறுவன மயப்படுத்தப்பட்ட பிள்ளைகள்




மூலாதாரம்
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை

பிள்ளைக்கு இருக்கும் சகோதர/ சகோதரிகளின் எண்ணிக்கை பற்றித் தேடியறிந்த போது கிழக்கு மாகாணத்தில் நிறுவன மயப்படுத்தப்பட்டுள்ள 1,344 பிள்ளைகளில் 215 பிள்ளைகளுக்கு சகோதர/ சகோதரிகள் இல்லையெனப் பதிவாகியுள்ளதுடன் 1,096 பிள்ளைகளுக்கு குறைந்தபட்சம் 1 சகோதரன்/ சகோதரி இருக்கின்றார் எனப் பதிவாகியுள்ளது. கிழக்கு மாகாணத்தில் நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள பிள்ளைகளில் அரைவாசியிலும் சற்று அதிகமான பிள்ளைகளுக்கு ஒன்று அல்லது இரண்டு சகோதர/ சகோதரிகள் மட்டுமே உள்ளனர்.

**அட்டவணை 4.45 சகோதர/ சகோதரிகள் உள்ள நிறுவன மயப்படுத்தப்பட்ட பிள்ளைகள் அந்தச் சகோதர/ சகோதரிகளின் தற்போதைய வசிப்பிடத்திற்கமைய**

| சகோதர/ சகோதரிகளின் தற்போதைய வசிப்பிடம் | எண்ணிக்கை | % |
|---|---|---|
| சகோதர/ சகோதரிகள் அனைவரும் இந்த நிறுவனத்திலேயே வசிக்கின்றனர் | 76 | 6.9 |
| சகோதர/ சகோதரிகள் அனைவரும் வேறு நிறுவனத்தில் வசிக்கின்றனர் | 33 | 3.0 |
| சகோதர/ சகோதரிகள் அனைவரும் தாய்/தந்தை/பாதுகாவலருடன் வசிக்கின்றனர் | 700 | 63.9 |
| சகோதர/ சகோதரிகள் அனைவரும் இந்த நிறுவனத்திலும் வேறு நிறுவனத்திலும் வசிக்கின்றனர் | 23 | 2.1 |
| சகோதர/ சகோதரிகள் அனைவரும் இந்த நிறுவனத்திலும் தாய்/ தந்தை/ பாதுகாவலருடனும் வசிக்கின்றனர் | 153 | 14.0 |
| சகோதர/ சகோதரிகள் ஒருவரேனும் நிறுவன மயப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஏனையோர் தாய்/ தந்தை/ பாதுகாவலருடன் அல்லது வேறு இடத்தில் வசிக்கின்றனர் | 68 | 6.2 |
| சகோதர/ சகோதரிகள் ஒருவரேனும் தாய்/ தந்தை/ பாதுகாவலருடன் வசிப்பதுடன் ஏனையோர் வேறு (நிறுவன மயப்படுத்தப்படாத) இடத்தில் வசிக்கின்றார் அல்லது வசிக்கும் இடம் தெரியாது. | 9 | 0.8 |
| சகோதர/ சகோதரிகள் வசிக்கும் இடம் தெரியாது | 34 | 3.1 |
| **தொகை** | **1,096** | **100** |

குறைந்தபட்சம் 1 சகோதரன்/ சகோதரி இருக்கின்றார் எனப் பதிவாகியுள்ள 1,096 பிள்ளைகளின் சகோதர/ சகோதரிகளின் வசிப்பிடம் பற்றிய தகவல்களை வினவியபோது இந்தப் பிள்ளைகளுள் 132 பேரின் சகோதர/ சகோதரிகள் அனைவரும் நிறுவன மயப்படுத்தப்பட்டுள்ளதாகப் பதிவாகியுள்ளமை அவதானம் செலுத்த வேண்டிய முக்கிய விடயமாகக் குறிப்பிடலாம். அவ்வாறே நிறுவன மயப்படுத்தப்பட்டுள்ள பிள்ளைகளுள் 52%மான பிள்ளைகளின் சகோதர/ சகோதரிகள் பெற்றோரின் பாதுகாப்பின் கீழ் வசிப்பதாகத் தொகைமதிப்பு கணக்கெடுப்பு தகவல்களில் இருந்து வெளியாகியுள்ளது.

### 4.7 பிள்ளைகளை சமூகத்துடன் இணைத்தல் தொடர்பான தகவல்கள்

ஐக்கிய நாடுகளின் மாற்றுப் பராமரிப்பு அறிவுறுத்தல் வழிகாட்டிக்கமைய பிள்ளையொன்றை நிறுவனமயப்படுத்தித் தடுத்து வைத்தல் பரிந்துரைக்கப்பட்ட முறை அல்ல என்பதுடன் பிள்ளைக்கு குடும்பத்தை அடிப்படையாகக் கொண்ட பராமரிப்பு (Family base care) அல்லது குடும்பம் போன்ற (Family like care) பராமரிப்பு வழங்கப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இலங்கையில் செயற்படுத்தப்படும் நிறுவனமயப்படுத்தல் பரிந்துரைக்கப்பட்ட முறைமை அல்ல என்பதால் பிள்ளைகளை நிறுவனச் சூழலில் இருந்து விடுவித்து ஏதாவதொரு முறையில் வெளிச் சூழலுடன் இணைப்பதற்காக பொருத்தமான வேலைத் திட்டமொன்றை அடையாளம் காண வேண்டியுள்ளது.

அதற்கமைய நிறுவனமயப்படுத்தப்பட்ட பிள்ளைகளைச் சமூகமயப் படுத்துவதற்காக இதுவரை நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் முறைமையின் பலம் மற்றும் பலவீனங்களை கண்டறிதல், சமூகமயப்படுத்தப்பட முடியாமைக்காக காரணங்களைக் கண்டறிவதற்காக இந்தத் தொகைமதிப்பில் சமூகமயப்படுத்தல் தொடர்பில் விரிவான தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. பிள்ளையைச் சமூகமயப்படுத்துவதற்காக எப்போதாவது ஏதாவது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதா என்பது பற்றிய தகவல்கள் அட்டவணை 4.46 மூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.46 பால்நிலை, வயதுப் பிரிவு மற்றும் பிள்ளையை சமூகமயப்படுத்துவதற்கு எப்போதாவது ஏதாவது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதா என்பதற்கமைய நிறுவனமயப்படுத்தப்பட்ட பிள்ளைகள்**

| வயதுப் பிரிவு பால்நிலை | மொத்தம் | | முயற்சி மேற்கொள்ளப்பட்டது | | முயற்சி மேற்கொள்ளப்பட வில்லை | | பொருத்தமற்றது | | குறிப்பிடப்படவில் லை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக் கை | % | எண்ணிக் கை | % | எண்ணிக் கை | % | எண்ணிக் கை | % | எண்ணிக் கை | % |
| **ஆண்** | **524** | **100** | **70** | **13.4** | **273** | **52.1** | **179** | **34.2** | **2** | **0.4** |
| 0-4 | 3 | 100 | 3 | 100.0 | - | - | - | - | - | - |
| 5-9 | 37 | 100 | 3 | 8.1 | 28 | 75.7 | 6 | 16.2 | - | - |
| 10-14 | 296 | 100 | 24 | 8.1 | 159 | 53.7 | 111 | 37.5 | 2 | 0.7 |
| 15+ | 188 | 100 | 40 | 21.3 | 86 | 45.7 | 62 | 33.0 | - | - |
| **பெண்** | **820** | **100** | **113** | **13.8** | **431** | **52.6** | **270** | **32.9** | **6** | **0.7** |
| 0-4 | 1 | 100 | 1 | 100.0 | - | - | - | - | - | - |
| 5-9 | 43 | 100 | 3 | 7.0 | 26 | 60.5 | 14 | 32.6 | - | - |
| 10-14 | 392 | 100 | 44 | 11.2 | 199 | 50.8 | 146 | 37.2 | 3 | 0.8 |
| 15+ | 384 | 100 | 65 | 16.9 | 206 | 53.6 | 110 | 28.6 | 3 | 0.8 |
| **மொத்தம்** | **1,344** | **100** | **183** | **13.6** | **704** | **52.4** | **449** | **33.4** | **8** | **0.6** |
| 0-4 | 4 | 100 | 4 | 100.0 | - | - | - | - | - | - |
| 5-9 | 80 | 100 | 6 | 7.5 | 54 | 67.5 | 20 | 25.0 | - | - |
| 10-14 | 688 | 100 | 68 | 9.9 | 358 | 52.0 | 257 | 37.4 | 5 | 0.7 |
| 15+ | 572 | 100 | 105 | 18.4 | 292 | 51.0 | 172 | 30.1 | 3 | 0.5 |

கிழக்கு மாகாணத்தில் நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள 1,344 பிள்ளைகளை சமூகமயப்படுத்துவதற்காக எப்போதாவது ஏதாவதொரு முயற்சி மேற்கொள்ளப்பட்டதா என்பதை வினவியறிந்த போது 704 பிள்ளைகளை சமூகமயப்படுத்துவதற்காக எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை எனப் பதிவாகியுள்ளது. இதனை வீதாசாரமாகப் பார்க்குமிடத்து மொத்த பிள்ளைகளில் 52% ஆகும்.

183 பிள்ளைகளுக்காக மட்டுமே சமூகமயப்படுத்துவதற்காக ஏதாவதொரு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது மொத்த பிள்ளைகளில் 14.4 வீதமாகும். சமூகமயப்படுத்தப்படுத்துவதற்கான முயற்சிகளை மெற்கொண்ட போது ஆண்கள் மற்றும் பெண்களில் வெட்டிக்காட்டும் மாற்றங்களைக் காணமுடியவில்லை.

**அட்டவணை 4.47 சமூகமயப்படுத்துவற்காக முயற்சி மேற்கொள்ளப்பட்ட நிறுவனமயப்படுத்தப்பட்ட பிள்ளைகளை சமூகமயப்படுத்துவதற்காக இதுவரை மேற்கொள்ளப்பட்ட/ இப்போது மேற்கொள்ளப்படும் முயற்சிகள் பால்நிலைக்கமைய**

| மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் | மொத்தம் | | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக் கை | % | எண்ணிக் கை | % | எண்ணி க்கை | % |
| தாய்/ தந்தைக்கு மீள ஒப்படைப்பதற்கு முயற்சி | 94 | 51.4 | 46 | 65.7 | 48 | 42.5 |
| உறவினர்/ உறவினர் அல்லாத பகுதியினருக்கு ஒப்படைப்பதற்கு முயற்சி | 35 | 19.1 | 18 | 25.7 | 17 | 15.0 |
| வளர்ப்புக்காக உள்நாட்டிலுள்ளவருக்கு ஒப்படைப்பதற்கு முயற்சி | 6 | 3.3 | 4 | 5.7 | 2 | 1.8 |
| வளர்ப்புக்காக வெளிநாட்டிலுள்ளவர்க்கு ஒப்படைப்பதற்கு முயற்சி | 53 | 29.0 | 3 | 4.3 | 50 | 44.2 |
| **சமூகமயப்படுத்துவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை** | **183** | **-** | **70** | **-** | **113** | **-** |

குறிப்பு சில பிள்ளைகளை சமூகமயப்படுத்துவதற்காக ஒன்றிற்கு மேற்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் சமூகமயப்படுத்துவற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை மொத்தத்திற்கு சமப்பட மாட்டாது

சமூகமயப்படுத்த எப்போதாவது ஏதாவதொரு முயற்சி மேற்கொள்ளப்பட்ட பிள்ளைகளை சமூகமயப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை கவனத்தில் கொண்டால் அதிக எண்ணிக்கையான பிள்ளைகளை (94) தாய்/தந்தையிடம் மீண்டும் ஒப்படைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகப் பதிவாகியுள்ளது. அதனை விதாசாரமாகக் கவனத்தில் கொண்டால் சமூகமயப்படுத்துவதற்காக ஏதாவது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கையில் 51% ஆகும்.

அவ்வாறே 35 பிள்ளைகளை உறவினர் அல்லது உறவினரல்லாத பகுதியினரிடம் ஒப்படைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், 06 பிள்ளைகளை வளர்ப்புக்காக உள்நாட்டிலுள்ளவர்க்கு ஒப்படைப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டதாவும் 53 பிள்ளைகளை சேவைக்காலப் பயிற்சிக்கு/ தொழிலுக்கு/ சுயதொழிலில் ஈடுபடுத்த முயற்சி முயற்சி மேற்கொள்ளப்பட்டதாவும் பதிவாகியுள்ளது

**அட்டவணை 4.48 சமூகமயப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படாத நிறுவனமயப்படுத்தப்பட்ட பிள்ளைகள், அவ்வாறு செய்யாமைக்கான காரணம்/ காரணங்கள்/ மற்றும் பால்நிலைக்கமைவாக**

| முயற்சி மேற்கொள்ளப்படாமைக்கான காரணம் | மொத்தம் | | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| நிறுவனமயப்படுத்த அனுமதிக்கப்பட்ட/ கட்டளையிடப்பட்ட காலப்பகுதி காலவதியாகாமை | 126 | 14.7 | 63 | 18.2 | 63 | 12.3 |
| நிறுவனமயப்படுத்தப்பட்ட பின்னர் உடனடியாக சமூகமயப்படுத்துவதற்கான செயன்முறையை ஆரம்பிப்பதற்கு போதுமானளவு காலம் கழிந்திராமை | 38 | 5.4 | 24 | 8.8 | 14 | 3.2 |
| தாய்/ தந்தையின் தகவல்களை தேடிக்கொண்டிருந்தமை | 4 | 0.6 | 2 | 0.7 | 2 | 0.5 |
| தாய்/ தந்தை/ பாதுகாவலர் விருப்பம் தெரிவிக்காமை | 103 | 14.6 | 44 | 16.1 | 59 | 13.7 |
| பிள்ளையின் சுகாதாரப் பிரச்சினைகள் | 5 | 0.7 | 1 | 0.4 | 4 | 0.9 |
| தாய்/ தந்தை/ பாதுகாவலரின் சுகாதாரப் பிரச்சினைகள் | 5 | 0.7 | 3 | 1.1 | 2 | 0.5 |
| சட்ட ரீதியான தடைகள் | 52 | 7.4 | 7 | 2.6 | 45 | 10.4 |
| நிறுவனம் பாதுகாப்பான இடமாக இருந்தமை | 3 | 0.4 | - | - | 3 | 0.7 |
| நிறுவனம் பாதுகாப்பான இடமாக இருந்தமை | 355 | 50.4 | 125 | 45.8 | 230 | 53.4 |
| பிள்ளை கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தல் | 35 | 5.0 | 5 | 1.8 | 30 | 7.0 |
| வேறு | 6 | 0.9 | 1 | 0.4 | 5 | 1.2 |
| குறிப்பிடப்படவில்லை | 2 | 0.3 | 1 | 0.4 | 1 | 0.2 |
| **சமூகமயப்படுத்துவற்கு முயற்சி மேற்கொள்ளபடாத பிள்ளைகளின் எண்ணிக்கை** | **704** | **-** | **273** | **-** | **431** | **-** |

குறிப்பு - சில பிள்ளைகளை சமூகமயப்படுத்துவதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்படாமைக்கு ஒன்றிற்கு மேற்பட்ட காரணங்கள் தாக்கம் செலுத்தியுள்ளமையால் சமூகமயப்படுத்துவற்கு முயற்சி மேற்கொள்ளப்படாத பிள்ளைகளின் எண்ணிக்கை மொத்தத்திற்கு சமப்பட மாட்டாது

மேலே குறிப்பிட்டவாறு கிழக்கு மாகாணத்தில் நிறுவனமயப்படுத்தப்பட்ட பிள்ளைகளுள் சமூகமயப்படுத்துவதற்காக எப்போதாவது ஏதாவதொரு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை எனப் பதிவாகியுள்ள 704 பிள்ளைகளை சமூகமயப்படுத்துவதற்கு எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளப்படாமைக்கு பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்தியுள்ளதாக தொகைமதிப்புக் கணக்கெடுப்பு தரவுகளிலிருந்து தெளிவாகின்றது. அவற்றுள் அரைவாசியிலும் அதிக எண்ணிக்கையான பிள்ளைகளை சமுகமயப்படுத்த முயற்சிகள் எடுக்கப்படாமைக்காக காரணமாக பிள்ளை வசிப்பதற்குப் மிகவும் பாதுகாப்பான இடமாக நிறுவனம் காணப்பட்டமை பதியப்பட்டுள்ளது

அவ்வாறே இதற்கு அடுத்ததாக நிறுவனமயப்படுத்த அனுமதிக்கப்பட்ட/ கட்டளையிடப்பட்ட காலப்பகுதி காலவதியாகாமை, மற்றும் பிள்ளையை சமூகமயப்படுத்துவதற்கு தாய்/ தந்தை/ பாதுகாவலர் விருப்பம் தெரிவிக்காமை போன்றவற்றை முக்கிய காரணங்களாக் குறிப்பிடலாம். இதற்கு மேலதிகமாக நிறுவனமயப்படுத்தப்பட்டதன் பின்னர் சமூகமயப்படுத்தும் செயன் முறையை ஆரம்பிப்பதற்கு போதுமானளவு காலம் கழிந்திராமை, சட்ட ரீதியான தடைகள் பிள்ளை கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தல் போன்ற காரணங்கள் சிறிதளவில் பதிவாகியுள்ளன.

***தத்துக் கொடுத்தல்***

நிறுவனமயப்படுத்தப்பட்ட பிள்ளையொன்றை சமூகமயப்படுத்துவதற்காக பிள்ளையின் குடும்பத்திடம் அல்லது உறவினரிடம் ஒப்படைக்க முடியாத சந்தர்ப்பத்தில் வேறு வெளியாட்களிடம் (உள்நாடு/ வெளிநாடு) வளர்ப்பதற்காக ஒப்படைத்தல் தத்துக் கொடுத்தல் என கருதப்படும். தத்துக் கொடுப்பதற்காக பிள்ளையினை உள்நாட்டிலுள்ளவர்களுக்கு வழங்குதல் மாகாண நன்னடத்தை ஆணையாளர் மூலம் நடைபெறுவதுடன் வெளிநாட்டினருக்கு ஒப்படைத்தல் மத்திய அரசின் கீழுள்ள நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் தத்துக் கொடுப்பதற்காகப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளில் மாகாணத்திற்கமைய வெவ்வேறு மாற்றங்களைக் காணலாம். அவ்வாறே பிள்ளையின் பின்னணிக்கமையவும் தத்துக்கொடுப்பதற்காக பின்பற்றும் நடைமுறைகளில் மாற்றங்களை காணலாம்.

கிழக்கு மாகாணத்தில் நிறுவனமயப்படுத்தப்பட்ட பிள்ளைகளுள் தொகைமதிப்புச் சந்தர்ப்பத்தின் போது தத்துக் கொடுத்தல் செயன்முறையினுள் உள்ளடக்கப்பட்டுள்ள ஒரே ஒரு பிள்ளை மட்டுமே உள்ளடக்கப்பட்டிருந்தார். இந்தப் பிள்ளைக்காக தத்துக் கொடுத்தல் செயன்முறையின் இறுதிக் கட்டமான தத்துக் கொடுத்தல் வழக்கு நீதிமன்றத்தில் கோவைப்படுத்தப்பட்டுள்ளமை பதிவாகியுள்ளது.

### அட்டவணை 4.49 சமூகமயப்படுத்தப்படுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்ட ஆனால் தத்துக்கொடுத்தல் செயன்முறைக்குள் உள்ளடக்கப்படாத நிறுவனமயப்படுத்தப்பட்ட பிள்ளைகள் அதற்கான காரணங்களின் அடிப்படையில்

| காரணங்கள் | எண்ணிக்கை | % |
|---|---|---|
| உரிய வயதெல்லையைத் தாண்டியிருத்தல் | 45 | 24.9 |
| தாய்/ தந்தை/ பாதுகாவலரின் விருப்பமின்மை | 48 | 26.5 |
| தாய்/தந்தை/பாதுகாவலரின் சம்மதம் இதுவரை கிடைக்கப்பெறாமை | 53 | 29.3 |
| பிள்ளையின் சுகாதாரப் பிரச்சனை | - | - |
| குழந்தையைத் தத்தெடுக்க நீதிமன்ற உத்தரவு கிடைக்கப் பெறாமை | 9 | 5.0 |
| இதற்கு முன்னர் தத்துக்கொடுக்கும் செயன்முறைக்குள் உள்ளடக்கப்பட்டு அது வெற்றியளிக்காமை | 2 | 1.1 |
| தத்துக்கொடுப்பதற்கு பொருத்தமான பிள்ளையாகக் காணப்படாமை | 46 | 25.4 |
| தாய்/ தந்தை/ உறவினர்/ உறவினர் அல்லாத பகுதியினரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருத்தல் | 3 | 1.7 |
| **சமூகமயப்படுத்தப்படுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்ட ஆனால் தத்துக்கொடுத்தல் செயன்முறைக்குள் உள்ளடக்கப்படாத பிள்ளைகளின் எண்ணிக்கை** | **181** | **-** |

குறிப்பு - சில பிள்ளைகளை தத்துக்கொடுத்தல் செயன்முறையினுள் உள்ளடக்கப்படாமைக்கு ஒன்றிற்கு மேற்பட்ட காரணங்கள் காணப்படலாம் என்பதால் சமூகமயப்படுத்தப்படுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்ட ஆனால் தத்துக்கொடுத்தல் செயன்முறைக்குள் உள்ளடக்கப்படாத பிள்ளைகளின் எண்ணிக்கை கூட்டுத்தொகைக்குச் சமப்படமாட்டாது

கிழக்கு மாகாணத்தில் நிறுவனமயப்படுத்தப்பட்ட பிள்ளைகளில் குறித்தவொரு பகுதியினரை சமூகமயப்படுத்துவதற்கு எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளப்படாமல் இருந்தாலும் தொகைமதிப்பு கணக்கெடுப்புச் சந்தர்ப்பத்தின் போது தத்துக் கொடுப்பதற்கான செயன்முறைக்குள் உள்ளடக்கப்படாத பிள்ளைகளின் எண்ணிக்கை 181 ஆகும். இதுவரை இந்தப் பிள்ளைகள் தத்துக் கொடுத்தல் செயன்முறைக்குள் உள்ளடக்கப்படாமைக்கான காரணங்கள் பற்றி வினவியறிந்தபோது 8 பிரதான காரணங்களை அடையாளம் காணக் கூடியதாகவிருந்தது. அவற்றுள் அதிகமான பிள்ளைகளைத் தத்துக் கொடுத்தல் செயன்முறைக்குள் உள்ளடக்கப்படாமைக்கு தாய்/ தந்தை/ பாதுகாவலரின் சம்மதம் இதுவரை கிடைக்கப்பெறாமை பிரதான காரணமாக பதிவாகியுள்ளது. தாய்/ தந்தை/ பாதுகாவலரின் விருப்பமின்மை தத்துக் கொடுப்பதற்கான வயதெல்லையை (14 வயதிலும் குறைந்த) தாண்டியிருத்தல் மற்றும் தத்துக்கொடுப்பதற்குப் பொருத்தமான பிள்ளையாகக் காணப்படாமை போன்ற காரணங்களும் தத்துக் கொடுக்க முடியாமல் போனதில் அதிக தாக்கத்தைச் செலுத்தியுள்ளன.

# அத்தியாயம் 5

# பணியாளர்கள் பற்றிய தகவல்கள்

பிள்ளைகளுக்குப் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பினை வழங்கிவதைப் போன்று பிள்ளையில் மனப்பாங்கு விருத்தியை ஏற்படுத்தி சிறந்த பண்புகளைக் கொண்ட பிள்ளைகளை உருவாக்குதல் சிறுவர் பராமரிப்பு மையங்களில் பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் பிரதான பொறுப்பாகும். குடும்பச் சூழலில் பிள்ளை வளரும் முறைக்குச் சமமான அனுபவங்களைப் பெற்றுக் கொடுப்பதற்குச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி கல்வி மற்றும் சுகாதார வசதிகளைப் போன்று பிள்ளைக்கு வழங்க வேண்டிய ஏனைய வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலம் உடல் மற்றும் உளவியல் ரீதியாக ஆரோக்கியமான பிள்ளையொன்றை சமூகத்திற்கு வழங்குவதற்கு தேவையான வழிகாட்டல்களை செய்வதும் சிறுவர் பராமரிப்பு மையப் பணியாளர்களிடம் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய உரிய சேவையினை வழங்குவதற்குப் போதுமானளவு சிறுவர் பராமரிப்பு மையப் பணியாளர்கள் உள்ளனரா மற்றும் அவர்கள் உரிய பணியை மேற்கொள்வதற்குரிய தரத்தினைக் கொண்டுள்ளார்களா போன்ற தகவல்கள் இந்தத் தொகைமதிப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

## 5.1 அடிப்படைத் தகவல்கள்

இதன் கீழ் கிழக்கு மாகாணத்தினுள் காணப்படும் மொத்தப் பணியாளர்கள் பற்றியும் வயது மற்றும் பால்நிலைக்கமைய பரம்பல் பற்றிய தகவல்கள் முன்வைக்கப்படும்.

கிழக்கு மாகாணத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமையப் பெற்றுள்ள சகல சிறுவர் பராமரிப்பு மையங்களில் பணிபுரியும் மொத்தப் பணியாளர்கள் நிறுவன வகைக்கமைய கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.1 நிறுவன வகை மற்றும் மாவட்டத்திற்கமைய சிறுவர் பராமரிப்பு மையப் பணியாளர்கள்**

| நிறுவன வகை | மொத்தம் | மட்டக் களப்பு | அம்பா றை | திருகோண மலை |
|---|---|---|---|---|
| பாதுகாப்பான சிறுவர் இல்லங்கள் | 15 | 5 | 6 | 4 |
| சான்றளிக்கப்பட்ட பாடசாலை | 8 | - | 8 | - |
| அரச பொறுப்பிலுள்ள சிறுவர் இல்லங்கள் | 6 | - | - | 6 |
| பயிற்சி மற்றும் ஆலோசனை மையங்கள் | 4 | - | - | 4 |
| தன்னார்வ தொண்டு சிறுவர் இல்லங்கள் | 349 | 218 | 60 | 71 |
| **மொத்தம்** | **382** | **223** | **74** | **85** |

கிழக்கு மாகாணத்தில் சிறுவர் பராமரிப்பு மையங்களில் பணியாற்றும் மொத்தப் பணியாளர்கள் 382 ஆகும். அது நாட்டினுள் காணப்படும் சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் கடமையாற்றும் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கையில் 13% ஆகும்.
நிறுவன வகைக்கமைய பணியாளர்கள் பரம்பியுள்ள முறையினை கவனத்தில் கொண்டால் மாகாணத்தில் காணப்படும் மொத்த நிறுவனங்களில் 88.5% பிரதிநிதித்துவப்படுத்துவது தன்னார்வத்தொண்டு சிறுவர் பராமரிப்பு மையங்களின் பணியாளர்கள் எனப் பதிவாகியுள்ளதுடன் அது மொத்த பணியாளர்களின் எண்ணிக்கையில் 91% ஆகும்.
இந்தப் பணியாளர்கள் கிழக்கு மாகாணத்தின் மாவட்டங்களில் பரம்பியுள்ள முறையினைக் கவனத்தில் கொண்டால் அதிக எண்ணிக்கையான பிள்ளைகள் பதிவாகியுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையான பணியாளர்களும் பதிவாகியுள்ளமையை குறித்துக் காட்டக் கூடியதாக இருப்பதுடன் விகிதாசார அடிப்படையில் நோக்குமிடத்து மூன்று பிள்ளைகளுக்கு ஒரு பணியாளர் காணப்படுகின்றனர்.

**அட்டவணை 5.2 வயதுப் பிரிவு மற்றும் பால்நிலைக்கமைய சிறுவர் பராமரிப்பு மைய பணியாளர்கள்**

| வயதுப் பிரிவு | மொத்தம் | | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 18 - 19 | 5 | 1.3 | 2 | 1.3 | 3 | 1.3 |
| 20 - 24 | 31 | 8.1 | 12 | 7.6 | 19 | 8.4 |
| 25 - 29 | 50 | 13.1 | 15 | 9.6 | 35 | 15.6 |
| 30 - 34 | 27 | 7.1 | 10 | 6.4 | 17 | 7.6 |
| 35 - 39 | 33 | 8.6 | 6 | 3.8 | 27 | 12.0 |
| 40 - 44 | 43 | 11.3 | 19 | 12.1 | 24 | 10.7 |
| 45 - 49 | 32 | 8.4 | 13 | 8.3 | 19 | 8.4 |
| 50 - 54 | 27 | 7.1 | 7 | 4.5 | 20 | 8.9 |
| 55 - 59 | 51 | 13.4 | 19 | 12.1 | 32 | 14.2 |
| 60 - 64 | 37 | 9.7 | 24 | 15.3 | 13 | 5.8 |
| 65 - 69 | 23 | 6.0 | 13 | 8.3 | 10 | 4.4 |
| 70 - 74 | 12 | 3.1 | 9 | 5.7 | 3 | 1.3 |
| 75 அல்லது அதற்கு மேல் | 7 | 1.8 | 5 | 3.2 | 2 | 0.9 |
| குறிப்பிடப்படவில்லை | 4 | 1.0 | 3 | 1.9 | 1 | 0.4 |
| **மொத்தம்** | **382** | **100** | **157** | **100** | **225** | **100** |

உரு 5.1
**வயதுப் பிரிவு மற்றும் பால்நிலைக்கமைய சிறுவர் பராமரிப்பு மைய பணியாளர்கள்**




மூலாதாரம் :
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை

கிழக்கு மாகாணத்தில் சேவையாற்றும் பணியாளர்களைப் பால்நிலைக்கமையக் கவனத்தில் கொண்டால் 59% மானோர் பெண்கள் என்பதும் 41% மானோர் ஆண்கள் என்பதும் அட்டவணை 5.2 இற்கமையத் தெளிவாகின்றது. இவ்வாறு அதிக எண்ணிக்கையான பெண் பணியாளர்கள் பதிவாகியிருப்பதில் தாக்கம் செலுத்தியுள்ள பிரதான காரணி அதிக எண்ணிக்கையான நிறுவனங்கள் பெண் பிள்ளைகளுக்காக மட்டும் காணப்படுவதும் ஆண் பிள்ளைகளுக்கா ஒதுக்கப்பட்டுள்ள நிறுவனங்களுடன் ஒப்பிடுமிடத்து பெண்களுக்கான நிறுவனத்தினுள் அதிக எண்ணிக்கையான பெண் பிள்ளைகள் தங்கியிருப்பதன் காரணமாகவும் நிறுவனத்தில் அதிகமான பெண் பணியாளர்ளைப் பணியில் ஈடுபடுத்தியிருக்கலாம்.

வயதுப் பிரிவு மற்றும் பால்நிலைக்கமைய பணியாளர்களின் பரம்பலை கவனத்தில் கொண்டால் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட சகல வயதுப் பிரிவுகளிலும் மற்றும் வயது குறிப்பிடப்படாத பிரிவினைத் தவிர எனைய அனைத்து வயதுப் பிரிவுகளிலும் பெண் பிரதிநிதித்துவம் ஆண் பிரதிநிதித்துவத்துடன் ஒப்பிடுமிடத்து உயர்ந்த பெறுமதியைப் எடுத்துள்ளதுடன் ஆண் பிரதிநிதித்துவம் பெண் பிரதிநிதித்துவத்தைவிட உயர் பெறுமதியை எடுத்துள்ளமை உரு 5.1 இற்கமையத் தெளிவாகின்றது.

சிறுவர் பராமரிப்பு மைய பணியாளர்களிடம் தெளிவான முதிர்ச்சித் தன்மை எதிர்பார்க்கப்படுவதுடன் அவர்களிடம் மிகவும் செயற்திறன் கொண்ட சேவை வழங்கும் ஆற்றலும் காணப்படல் வேண்டும். அதற்கமைய மிகவும் இளமையான மற்றும் வயது முதிர்ந்த நபர்களை சிறுவர் பராமரிப்பு மைய சேவைக்கு பரிந்துரைக்க முடியாது என்றாலும் கிழக்கு மாகாணத்தில் அமையப் பெற்றுள்ள பணியாளர்களுள் 60 அல்லது அதற்கு மேற்பட்ட வயதையுடையவர்கள் 20.6% அளவில் காணப்படுவதுடன், பணியாளர்களில் 22.5% அளவானோர் 30 வயதிலும் குறைந்தவர்கள் எனப் பதிவாகியுள்ளது. பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பாகக் கவனத்தில் கொண்டால் இது எவ்வகையிலும் பொருத்தமற்ற நிலமை என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியதுடன் இது தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய பிரிவுகளின் அவதானம் செலுத்தப்பட வேண்டும்

## 5.2 தொழில் பற்றிய தகவல்கள்

கிழக்கு மாகாணத்தில் அமையப்பெற்றுள்ள சிறுவர் பராமரிப்பு மையப் பணியாளர்களின் பரம்பல், பதவி, சேவைக்காலம், தொழிலின் தன்மை, மற்றும் தொழிலில் ஈடுபடும் தன்மைக்கமைய புள்ளிவிபர ரீதியான முன்வைப்புக்கள் இங்கு இடம்பெறுகின்றன.

**அட்டவணை 5.3 தொழில் மற்றும் பால்நிலைக்கமைய சிறுவர் பராமரிப்பு மையப் பணியாளர்கள்**

| தொழில் | தொகை | | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| சமையலாளர்/ உதவிச் சமையலாளர் | 75 | 19.6 | 4 | 2.5 | 71 | 31.6 |
| விடுதி மேற்பார்வையாளர்/ மேட்ரன்/ இல்ல நிரிவாகி | 54 | 14.1 | 18 | 11.5 | 36 | 16.0 |
| முகாமையாளர் | 45 | 11.8 | 23 | 14.6 | 22 | 9.8 |
| காவலாளி/ பாதுகாப்பு உத்தியோகத்தர் | 32 | 8.4 | 30 | 19.1 | 2 | 0.9 |
| ஆசிரியர் (முன்பாடசாலை/ பயிற்றப்பட்ட/ பயிற்றப்படாத) | 26 | 6.8 | 8 | 5.1 | 18 | 8.0 |
| உதவி விடுதி மேற்பார்வையாளர்/ உதவி மேட்ரன்/ உப விடுதி மேற்பாரவையாளர் | 25 | 6.5 | 11 | 7.0 | 14 | 6.2 |
| தொழிலாளர்/ சுத்திகரிப்புத் தொழிலாளர்/ அலுவலகத் தொழிலாளர்/ தோட்டத் தொழிலாளர் | 24 | 6.3 | 13 | 8.3 | 11 | 4.9 |
| நிலையத்திற்கான மேட்ரன்/ பிரதான நிருவாகி/ அதிபர்/ அத்தியட்சகர் | 22 | 5.8 | 11 | 7.0 | 11 | 4.9 |
| மேற்பார்வையாளர் | 13 | 3.4 | 4 | 2.5 | 9 | 4.0 |
| சாரதி | 10 | 2.6 | 10 | 6.4 | - | - |
| இல்ல ஆசிரியர்/ உதவி இல்ல ஆசிரியர் | 9 | 2.4 | 4 | 2.5 | 5 | 2.2 |
| இல்லத் தாய் | 8 | 2.1 | - | - | 8 | 3.6 |
| பராமரிப்பாளர்/ சாத்து சேவையாளர் | 4 | 1.0 | 2 | 1.3 | 2 | 0.9 |

| தொழில் | தொகை | | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக் கை | % | எண்ணி க்கை | % | எண்ணி க்கை | % |
| செயலாளர் | 4 | 1.0 | 3 | 1.9 | 1 | 0.4 |
| கணக்காளர் | 4 | 1.0 | 1 | 0.6 | 3 | 1.3 |
| அவலுவலச் சேவை உதவியாளர்/ அலுவலக உதவியாளர் | 3 | 0.8 | 1 | 0.6 | 2 | 0.9 |
| முன்பள்ளி ஆசிரியர்/ முன்பள்ளி உதவியாளர் | 3 | 0.8 | 2 | 1.3 | 1 | 0.4 |
| தொழிற்பயிற்சி அலோசகர் | 2 | 0.5 | 1 | 0.6 | 1 | 0.4 |
| ஓவசியர் | 2 | 0.5 | 2 | 1.3 | - | - |
| களஞ்சியப் பொறுப்பாளர் | 2 | 0.5 | 1 | 0.6 | 1 | 0.4 |
| கல்வி ஆலோசகர் | 2 | 0.5 | 2 | 1.3 | - | - |
| உதவி ஆலோசகர் | 2 | 0.5 | 1 | 0.6 | 1 | 0.4 |
| வேறு | 11 | 2.9 | 5 | 3.2 | 6 | 2.7 |
| **மொத்தம்** | **382** | **100** | **157** | **100** | **225** | **100** |

மேலுள்ள அட்டவணை 5.3 இன் மூலம் கிழக்கு மாகாணத்தின் சிறுவர் பராமரிப்பு மையங்களில் சேவையாற்றும் பணியாளர்கள் பதவிக்கமைய பரம்பியுள்ள முறை காட்டப்பட்டுள்ளது

**அட்டவணை 5.4 சேவைக்காலம் மற்றும் பால்நிலைக்கமைய சிறுவர் பராமரிப்பு மையப் பணியாளர்கள்.**

| சேவைக் காலம் | தொகை | | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக் கை | % | எண்ணிக் கை | % | எண்ணிக் கை | % |
| **தற்போதைய நிறுவனத்தில் சேவைக்காலம்** | | | | | | |
| 1 வருடத்திலும் குறைவு | 101 | 26.4 | 50 | 31.8 | 51 | 22.7 |
| 1-4 வருடங்கள் | 158 | 41.4 | 57 | 36.3 | 101 | 44.9 |
| 5-9 வருடங்கள் | 50 | 13.1 | 15 | 9.6 | 35 | 15.6 |
| 10 வருடங்கள் அல்லது அதற்கு மேல் | 60 | 15.7 | 29 | 18.5 | 31 | 13.8 |
| குறிக்கப்படவில்லை | 13 | 3.4 | 6 | 3.8 | 7 | 3.1 |
| **தற்போதைய பதவியில் சேவைக்காலம்** | | | | | | |
| 1 வருடத்திலும் குறைவு | 108 | 28.3 | 51 | 32.5 | 57 | 25.3 |
| 1-4 வருடங்கள் | 153 | 40.1 | 55 | 35.0 | 98 | 43.6 |
| 5-9 வருடங்கள் | 48 | 12.6 | 15 | 9.6 | 33 | 14.7 |
| 10 வருடங்கள் அல்லது அதற்கு மேல் | 58 | 15.2 | 25 | 15.9 | 33 | 14.7 |
| குறிக்கப்படவில்லை | 15 | 3.9 | 11 | 7.0 | 4 | 1.8 |
| தொகை | **382** | **100** | | **100** | | **100** |

கிழக்கு மாகாண சிறுவர் பராமரிப்பு மையங்களில் சேவையாற்றும் பணியாளர்கள் தற்போது சேவையாற்றும் நிறுவனத்தில் பணியாற்றும் காலப்பகுதியை கவனத்தில் கொண்டால் மொத்தப் பணியாளர்களில் 16% மானோர் 10 வருடங்களுக்கும் மேற்பட்ட சேவைக் காலத்தை பதிவுசெய்துள்ளதுடன் பணியாளர்களில் 26% பங்கினர் இந்த நிறுவத்தில் 1 வருடத்திலும் குறைவான சேவைக்காலத்தைப் பதிவு செய்துள்ளனர்.

தற்போதைய பதவியில் சேவைக்காலத்தைக் கவனத்தில் கொண்டால் 10 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக்காலத்தைக் குறித்த பதவியில் கொண்டிருக்கும் அனுபவமிக்க பணியாளர்கள் மொத்தப் பணியாளர்களில் 15% என்பது தெரியவந்துள்ளது. அவ்வாறே தமது பதவியில் 1 வருடத்திலும் குறைவான அனுபவத்தைக் கொண்ட பணியாளர்கள் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கையில் 28% ஆகும்.

## அட்டவணை 5.5 தொழிலின் தன்மை மற்றும் பால்நிலைக்கமைய சிறுவர் பராமரிப்பு மையப் பணியாளர்கள்

| தொழிலின் தன்மை | தொகை | | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| நிரந்தர | 128 | 33.5 | 56 | 35.7 | 72 | 32.0 |
| தற்காலிக/ அமைய | 197 | 51.6 | 71 | 45.2 | 126 | 56.0 |
| ஒப்பந்த | 35 | 9.2 | 20 | 12.7 | 15 | 6.7 |
| வேறு | 21 | 5.5 | 10 | 6.4 | 11 | 4.9 |
| குறிப்பிடப்படவில்லை | 1 | 0.3 | | 0.0 | 1 | 0.4 |
| **தொகை** | **382** | **100** | **157** | **100** | **225** | **100** |

உரு 5.2
**தொழிலின் தன்மைக்கமைய சிறுவர் பராமரிப்பு மையப் பணியாளர்கள்**
**நிரந்தர தற்காலிக/ அமைய ஒப்பந்த வேறு குறிப்பிடப்படாத**




மூலாதாரம் :
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை

கிழக்கு மாகாண சிறுவர் பராமரிப்பு மைய பணியாளர்களுள் 33% தொழில் பாதுகாப்பினைக் கொண்ட தொழிலில் ஈடுபட்டுள்ளமை அட்டவணை 5.5 இன் மூலம் தெளிவாகின்றது. மொத்தப் பணியாளர்களில் 51.6% மானோர் தற்காலிக/ அமைய அடிப்படையில் சேவையாற்றுகின்றனர்

## அட்டவணை 5.6 தொழிலில் ஈடுபடும் தன்மை மற்றும் பால் நிலைக்கமைய சிறுவர் பராமரிப்பு மைய பணியாளர்கள்

| சேவையில் ஈடுபட்டுள்ள தன்மை | தொகை | | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| **தங்கியிருந்து/ தங்கியிராமல்** | | | | | | |
| தங்கியிருந்து | 174 | 45.5 | 65 | 41.4 | 109 | 48.4 |
| தங்கியிராமல் | 185 | 48.4 | 82 | 52.2 | 103 | 45.8 |
| குறிப்பிடப்படவில்லை | 23 | 6.0 | 10 | 6.4 | 13 | 5.8 |
| **சேவை நேரம்/ நாளாந்தக் கடமை** | | | | | | |
| சேவை நேரம் முறை | 50 | 13.1 | 14 | 8.9 | 36 | 16.0 |
| பொதுவான நாளாந்தக் கடமை முறை | 207 | 54.2 | 93 | 59.2 | 114 | 50.7 |
| குறிப்பிடப்படவில்லை | 125 | 32.7 | 50 | 31.8 | 75 | 33.3 |
| தொகை | **382** | **100** | | **100** | | **100** |

தொழிலில் ஈடுபடும் தன்மைக்கமைய பணியாளர்களின் தகவல்களைத் தேடியறிந்த போது மொத்தப் பணியாளர்களில் 46% நிறுவனத்தினுள் தங்கியிருந்து தமது கடமையை மேற்கொள்வதுடன் வேறு இடங்களிலிருந்து தமது கடமைக்குச் சமுகமளிப்போர் 48% மட்டுமேயாகும். அவ்வாறே தங்கியிருந்து வேலை செய்வோரில் பெரும்பாண்மையானோர் பெண்கள் ஆவர்

அவ்வாறே கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள சிறுவர் பராமரிப்பு மையப் பணியாளர்களில் 54% ஆனோர் பொதுவான நாளாந்தக் கடமை அடிப்படையில் தமது சேவையை வழங்குவதுடன் 13% மானோர் சேவை நேர முறையின் அடிப்படையில் சேவை வழங்குவதாகவும் இந்தத் தொகைமதிப்புக் கணக்கெடுப்புத் தகவல்களில் இருந்து தெரியவந்துள்ளது.

### 5.3 கல்வி/ தொழில் தகமை தொடர்பான தகவல்கள்

சிறுவர் பராமரிப்பு மையங்களில் சேவையாற்றும் பணியாளர்களுக்கு அந்த நிறுவனத்தில் தங்கியிருக்கும் பிள்ளைகள் தொடர்பில் பாரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருப்பதால் குறிப்பாக பிள்ளைகளைப் பராமரிப்போர் தெளிவான கல்வியைப் பெற்றிருப்பதும்

பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்காக உரிய தொழில் பயிற்சியைப் பெற்றிருப்பதும் மிகவும் முக்கியமாகும். அதற்கமைய இந்தத் தொகைமதிப்பின் மூலம் பணியாளர்களின் கல்வி மற்றும் தொழில் தகமை தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டன

**அட்டவணை 5.7 உயர் கல்வித் தகமை மற்றும் பால்நிலைக்கமைய சிறுவர் மைய பணியாளர்கள்**

| உயர் கல்வித் தகமை | தொகை | | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| **பாடசாலை செல்லாத** | 8 | 2.1 | 1 | 0.6 | 7 | 3.1 |
| தரம் 1-5 சித்தி | 33 | 8.6 | 11 | 7.0 | 22 | 9.8 |
| தரம் 6-10 சித்தி | 70 | 18.3 | 31 | 19.7 | 39 | 17.3 |
| க.பொ.த(சா.த) சித்தி | 77 | 20.2 | 31 | 19.7 | 46 | 20.4 |
| க.பொ.த(உ.த) சித்தி | 135 | 35.3 | 45 | 28.7 | 90 | 40.0 |
| பட்டம்/ பட்டப் பின் படிப்பு | 52 | 13.6 | 34 | 21.7 | 18 | 8.0 |
| குறிப்பிடப்படவில்லை | 7 | 1.8 | 4 | 2.5 | 3 | 1.3 |
| **மொத்தம்** | **382** | **100** | **157** | **100** | **225** | **100** |

உரு 5.3
**உயர் கல்வித் தகமைக்கமைய சிறுவர் மைய பணியாளர்கள்**




மூலாதாரம் :
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை

சிறுவர் பராமரிப்பு மையங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள பணியாளர்கள் பூர்த்தி செய்திருக்க வேண்டிய குறைந்தபட்ச கல்வித் தகமை தொடர்பில் சிறுவர் பராமரிப்பு மையங்களுக்கான தரம் தொடர்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அதற்கமைய சிறுவர் பராமரிப்பு மையங்களின் நிருவாகி குறைந்தபட்சம் க.பொ.த (உ.த.) பரீட்சைக்குத் தோற்றிய ஒருவராக இருத்தல் வேண்டுமென்பதுடன் உதவி நிருவாகி குறைந்தபட்சம் க.பொ.த (சா.த) பரீட்சைக்குத் தோற்றி 5 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

எவ்வாறாயினும் கிழக்கு மாகாணத்தில் அமையப் பெற்றுள்ள சிறுவர் பராமரிப்பு மையங்களிலுள்ள பணியாளர்களுள் க.பொ.த (சா.த) அல்லது அதிலும் கூடிய தல்வித் தகமையைக் கொண்டுள்ள 69% பதிவாகியிருப்பதும் அவற்றினுள் பட்டம் அல்லது அதிலும் கூடிய கல்வித் தகமையுடைய 13.6% பதிவாகியிருப்பதும் மகிழ்ச்சியான விடயமாகும்.

**அட்டவணை 5.8 தற்போதைய தொழிலுக்கமைவான தொழில் பயிற்சிப் பாடநெறியை கற்றிருப்பதற்கு அமைவாக சிறுவர் பராமரிப்பு மையப் பணியாளர்கள்**

| தொழில் பயிற்சிப் பாடநெறியை கற்றிருத்தல் | தொகை | ஆண் | பெண் |
|---|---|---|---|
| தொழில் பயிற்சிப் பாடநெறியை கற்றுள்ள | **57** | **16** | **41** |
| தகவல் தொழில்நுட்பப் பாடநெறி | 14 | 6 | 8 |
| முன் பிள்ளை விருத்திப் பாடநெறி/ முன் கல்விப் பாடநெறி | 7 | - | 7 |
| ஆலோசனை/ உளவியல் ஆலோசனை பாடநெறி/ டிப்ளோமா | 7 | 2 | 5 |
| தையல் பாடநெறி | 6 | - | 6 |
| பிள்ளைப் பராமரிப்பு டிப்ளோமா/ பாடநெறி | 5 | 1 | 4 |
| ஆசிரியர் பயிற்சிப் பாநெறி | 4 | 1 | 3 |
| பிள்ளை உளவியல்/ பிள்ளை உளவியல் பாடநெறி/ டிப்ளோமா | 2 | - | 2 |
| இல்ல நிருவாகி/ இல்ல செவிலித் தாய் பாடநெறி | 1 | - | 1 |
| முதலுதவிச் சான்றிதழ்/ டிப்ளோமா | 1 | - | 1 |
| ஆங்கிலப் பாடநெறி | 1 | - | 1 |
| தேவதர்ம டிப்ளோமா/ இறையியில் பாடநெறி | 1 | - | 1 |
| வேறு பாடநெறி | 13 | 5 | 8 |
| தொழில் பயிற்சிப் பாடநெறியை கற்காத | **323** | **139** | **184** |
| குறிப்பிடப்படாத | 2 | 2 | - |
| மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை | **382** | **157** | **225** |

**குறிப்பு** - சில நபர்கள் ஒன்றிற்கு மேற்பட்ட தகைமைகளைப் பெற்றுள்ளமையால் கூட்டுத்தொகை மொத்த பணியாளர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக மாட்டாது.

இவ்வாறான உணர்ச்சி பூர்வமான தொழில் துறையில் சேவைகளை வழங்கும் போது அது தொடர்பில் தொடர்ச்சியாக பயிற்சி மற்றும் தொழில் தகைமைகளைப் பெற்றுக்கொள்வது மிகவும் முக்கியமானது என்பதைக் குறிப்பிட வேண்டும். எவ்வாறாயினும் பணியாளர்களில் தற்போதைய தொழிலுக்குப் பொருத்தமான தொழில் தகைமையைப் பெற்றுள்ளவர்கள் வீதாசாரம் 15% ஆகும். அதற்கமைய பணியாளர்களுள் 85% என்ற அதிக வீதாசாரமானவர்கள் தமது தொழிலுக்கமைவான தொழில் பயிற்சிகளைப் பெற்றிராமை தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பதுடன் அது நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள பிள்ளைகள் மேற்கொள்ளப்படும் முற்போக்கான படிமுறையாகவும் அமையும்.

## அத்தியாயம் 6

### கொள்கை மதிப்பாய்வு

பெற்றோரின் பாதுகாப்பினை இழந்த பிள்ளையொன்றை நிறுவன மயப்படுத்தப்பட்ட பராமரிப்பிற்கு உட்படுத்த வேண்டியது, வேறு எந்தவொரு மாற்றுப் பராமரிப்பு வழிமுறையும் இல்லாத சந்தர்ப்பத்தில் இறுதிக் கட்ட நடவடிக்கையாக மட்டுமே என்றாலும் இலங்கையில் நன்னடத்தை பொறிமுறை தொடர்பில் அவதானம் செலுத்தும் போது பிள்ளைகளை நிறுவனமயப்படுத்தல் அல்லது புனர் வாழ்வளிப்பதற்காக காணப்படும் வேறு மாற்று முறைமைகளைப் பயன்படுத்தல் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படுவதால் பிள்ளைகளை நிறுவனப் பராமரிப்பை நோக்கி ஈடுபடுத்துவதை இலகுவான முறையாக கருதி நடவடிக்கை மேற்கொள்வது அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலமையில் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைத் திணைக்களத்தின் மூலம் நிறுவன மயப்படுத்தும் பிள்ளைகளுக்காக தயாரிக்கப்பட்ட மாற்று பராமரிப்புக் கொள்கையை தேசிய அமுலாக்கல் திட்டத்தின் மூலம் அமுல்படுத்துவதற்கு திட்டமிடுவது நியாயமான தன்மை என சுட்டிக் காட்டலாம்.

மாற்றுப் பராமரிப்புக் கொள்கையினை செயற்படுத்துவதற்காக தேசிய அமுலாக்கல் திட்டத்தினைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தொகைமதிப்பின் மூலம் நிறுவனமயப்படுத்தப்பட்ட பிள்ளைகளைப் போன்று நிறுவனம் தொடர்பாகவும் நிறுவனப் பணியாளர்கள் தொடர்பாகவும் விரிவான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இங்கு பிள்ளைகளை நிறுவனப் பராமரிப்பினை நோக்கி ஈடுபடுத்துவதில் தாக்கம் செலுத்தும் காரணிகள் தொடர்பாகவும், அந்தப் பிள்ளைகளின் பெற்றோர் /பாதுகாவலர் தொடர்பாகவும், அந்தக் குடும்பங்களின் சமூகப் பொருளாதார நிலமை பற்றியும் அவதானம் செலுத்தி இந்தப் பிள்ளைகளை நிறுவனச் சூழலில் இருந்து விடுவித்து மீண்டும் சமூகமயப்படுத்துவதற்கான இயலுமை தொடர்பில் கற்றாய்வதற்கு உதவியாக இருக்கும் தரவுகள், நிறுவனத்திடமுள்ள வசதிகள் மற்றும் நிறுவனம் மூலம் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் வசதிகள் தொடர்பாகவும், நிறுவனத்தின் பணியாளர்களின் போதுமான தன்மை மற்றும் தரம் தொடர்பாகவும் கற்றாய்வதற்கு பயன்படும் என எதிர்பார்க்கப்படும் தரவுகள் இந்தத் தொகைமதிப்பின் மூலம் சேகரிக்கப்பட்டது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் மூலம் பிள்ளைகளின் நல்வாழ்வினை சிறந்த மட்டத்தில் பேணிச் செல்வதற்காக மாகாணத்தின் நன்னடத்தைப் பொறிமுறை மூலம் மேற்கொள்ளக் கூடிய கொள்கை ரீதியான தலையீடு தொடர்பாகவும் சிறுவர் பராமரிப்பு மையங்கள் மூலம் மேற்கொள்ள வேண்டிய கடமைப் பொறுப்புக்கள் தொடர்பாகவும் முக்கியமான பல தகவல்கள் வெளியாகி உள்ளன.

#### சட்ட ரீதியான ஏற்பாடுகளை தற்காலப்படுத்தல்

இங்கு பிரதானமாக கொள்கை திட்டமிடல் மத்திய அரசாங்கத்தின் கீழுள்ள நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அந்தக் கொள்கைத் தீர்மானங்களை மாகாணத்தினுள் அமுல்படுத்துதல் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாராமரிப்புச் சேவை திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. குறிப்பாக நன்னடத்தை விடயம் தொடர்பில் தற்போது செயற்படுத்தப்படும் சில சட்டங்கள் காலவதியாகியுள்ளதால் அந்த சட்டதிட்டங்கள் தற்காலத்திற்குப் பொருத்தமான முறையில் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

அவ்வாறு செய்வதன் மூலம் பிள்ளைகள் தொடர்பில் ஏற்படும் நடைமுறைப் பிரச்சினைகளை இலகுவில் தீர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகளை உருவாக்கிக் கொள்ளலாம் என்பது தெரியவந்துள்ளது

#### அரச பொறிமுறையின் மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல்களை உரிய முறையில் நடாத்திச் செல்லல்

சகல சிறுவர் பராமரிப்பு மையங்களும் உகந்த முறையில் நடாத்திச் செல்லப்படுகின்றதா என்பதை ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் சிறுவர் பராமரிப்பு மையங்கள் தொடர்பில் பொறுப்பு வகிக்கும் அரச பொறிமுறையின் கடமைப் பொறுப்பாகும். சிறுவர் பராமரிப்பு மையங்கள் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய இந்த நிறுவனம் செயற்படுகின்றதா என்பதைத் தொடர்ச்சியாக பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். அதற்கமைய தொடர்ச்சியான மேற்பார்வையின் மூலம் நிறுவனத்தின் நிருவாகத்திற்குத் தான் இந்த நிறுவனம் தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கு கட்டுப்பட்டுள்ளார் என்பதை உறுதியாக நம்பச் செய்வதன் மூலம் நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்களின் முன்னேற்றத்த உறுதிப்படுத்த முடியும். அதன்படி, 1998 ஆம் ஆண்டின் 50 இலக்க சட்டப்படி சிறுவர் பராமரிப்பை மேற்பார்வை செய்வதற்கு கட்டாய அதிகாரங்களைக் கொண்டுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அனைத்து சிறுவர் பராமரிப்பு மையங்ளையும் முறையாக கண்காணிக்கவும் அவற்றின் வசதிகள் மற்றும் சேவைகளையும் ஒழுங்குபடுத்தவும் வேண்டியுள்ளது

நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்கள் பற்றிய ஆய்வில் சில சிறுவர்கள் நிறுவனங்களில் நீண்ட காலம் தங்கியிருக்கிறார்கள் என்பது தெரியவந்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் நிறுவனமயப்படுத்தப்பட்ட பிள்ளைகளில் 3% அளவானோர் 10 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் நிறுவன மயப்படுத்தப்பட்டுள்ளதாகப் பதிவாகியுள்ளது அவ்வாறு காணப்பட்டாலும் இலங்கையில் காணப்படும் நன்னடத்தை சட்டத்திற்கமைய பிள்ளையொன்றை ஆக்ககூடியது 3 வருடங்களுக்கு மட்டுமே நிறுவனமயப்படுத்த முடியும் என்பதுடன் நிறுவனமயப்படுத்தப்பட்ட நாள் தொடக்கம் பிள்ளை தொடர்பில் நெருங்கிய மேற்பார்வையை மேற்கொள்வதன் மூலம் பிள்ளையை சமூகமயப்படுத்துவதற்குத் தேவையான திட்டங்களை தயாரிக்க வேண்டும். அவ்வாறாயினும் நிறுவனத்தில் நீண்டகாலம் தங்கியிருப்பதன் மூலம் நடைமுறையிலுள்ள நன்னடத்தை பொறிமுறையை அமுலாக்குவதில் சிக்கல்கள் அல்லது அதன் மூலம் தீர்க்க முடியாத வகையில் பிரச்சினைகள் காணப்படுகின்றமை தெளிவாகின்றது. இது தொடர்பில் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களம் அவதானம் செலுத்த வேண்டும்.

பிள்ளையொன்றை நிறுவனமயப்படுத்தும் போது நிறுவனச் சூழலை பிள்ளைக்கு மிகவும் விருப்பத்தை ஏற்படுத்தும் வகையில் அமைத்திருக்க வேண்டும். பிள்ளையின் கல்வி, பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளைப் போன்று உடல் மற்றும் உளவியல் ஆரோக்கியத்தையும் சிறந்த முறையில் நடாத்திச் செல்வதற்குத் தேவையான வசதிகள் மற்றும் சேவைகள் நிறுவனத்தின் மூலம் போதுமானளவு மற்றும் உயர் தரத்தில் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். கிழக்கு மாகாணத்தில் அமையப் பெற்றுள்ள நிறுவனங்கள் தொடர்பில் அவதானம் செலுத்துகையில் பெரும்பாலான நிறுவனங்களில் இந்த வசதிகள் மற்றும் சேவைகள் சிறந்த மட்டத்தில் பேணப்பட்டாலும் சில நிறுவனங்களில் அவ்வாறான தன்மையை அவதானிக்க முடியவில்லை. குறிப்பாக பிள்ளைகளுக்குப் போதுமானளவு கட்டில்கள், மலசலகூட வசதிகள் போன்றவற்றை பிள்ளைகளுக்கு வழங்குவதன் மூலம் பிள்ளைகளின் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை உறுதிப்படுத்துவதும், பிள்ளைகளின் வயதிற்கமைய

வயதிற்குரியதாக முன்பாடசாலை/ பாடசாலை/ தொழில் கல்விக்காக பிள்ளைகளை ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களில் கல்வி உரிமையை பாதுகாப்பதும் நிறுவனத்தின் மூலம் உரிய வகையில் மேற்கொள்ளப் படுகின்றதா என்பதைத் தொடர்ச்சியாக அவதானிப்பதன் மூலம் அவ்வாறு நடைபெறாத சந்தர்ப்பங்களில் நடவடிக்கை மேற்கொள்ளல் நிறுவனத்திற்குப் பொறுப்பான சிரேஸ்ட நன்னடத்தை அதிகாரிகள்/ நன்னடத்தை அதிகாரிகள் மூலம் தொடர்ச்சியாக மற்றும் கவனத்துடன் மேறகொள்ளப்பட வேண்டும். மேலும் பிள்ளைகளின் உடல் மற்றும் உளவியல் சுகாதாரத்தை உரிய வகையில் பேணிச் செல்வதற்குத் தேவையான சுகாதார வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் ஆலோசணைச் சேவைகளை வழங்குதல் தொடர்பில் உள்ள நியமங்களை அறிமுகப்படுத்தல் அல்லது இதுவரை அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நியமங்களை உரிய வகையில் பேணிச் செல்வதற்குத் தேவையான பின்னணியை உருவாக்கிக் கொடுப்பதும் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்களத்தின் பொறுப்பாகும்.

தமது குடும்பத்தின் மூலம்/ சமூகத்தின் மூலம் கிடைக்க வேண்டிய பாதுகாப்பு இழக்கப்படுவதன் காரணத்தினால் பாதுகாப்பினைப் பெற்றுப் கொடுப்பதற்காக நிறுவனமயப்படுத்தப்படும் பிள்ளைக்கு நிறுவனத்தின் உள்ளே எதிர்பார்த்த பாதுகாப்பு கிடைக்காத சில சந்தர்ப்பங்கள் தற்போதைய நிறுவனக் கட்டமைப்பில் பதிவாகியுள்ளது. அவ்வாறான சந்தர்ப்பங்கள் ஏற்படுவதைத் தடுத்து நிறுவனமயப்படுத்தப்பட்ட பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பில் பொறுப்பு வகித்தல் நிறுவனத்தின் நிர்வாகத்தைப் போன்று மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்களத்தின் மூலமும் மேற்கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். பிள்ளைகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக நிறுவனத்தினால் பூரணப்படுத்த வேண்டிய தேவைப்பாடுகள் பல்வேறு சட்ட திட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் மூலம் அறிமுகப்படுத்தியிருந்தாலும் அந்த தேவைப்பாடுகளை பூரணப்படுத்துவது தொடர்சியாக நடைபெறுகின்றதா என்பது தொடர்பில் மிக நெருக்கமான மேற்பார்வை செய்தல் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்தின் மூலம் எப்போதும் மேற்கொள்ளப்பட்டு பிள்ளைகளின் பாதுகாப்பினை உறுதிசெய்தல் வேண்டும்

நிறுவனப் பணியாளர்கள் தொடர்பில் கலந்துரையாடும் போது அவர்களின் கடமைகளை உயர்ந்த மட்டத்தில் முன்னெடுத்துச் செல்வதற்காக அவர்களின் பதவி மற்றும் கடமைப் பொறுப்புக்களுக்கு அமைவாக அதிக தொழிற்பயிற்சி சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதன் மூலம் செயற்றிறன் மற்றும் உயர்தரமான சேவையினை அந்தப் பணியாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறே சிறுவர் பராமரிப்பு மையங்களுக்காக ஆட்சேர்ப்புச் செய்யும் போது அவர்களின் வயது தொடர்பில் கவனம் செலுத்தல் மிகவும் முக்கியமானதாகும். குறிப்பாக பிள்ளைகள் தொடர்பில் பொறுப்பு வகிப்பதற்குக் கடினமான வயது மூப்பினைக் கொண்ட நபர்களைப் போன்று பொறுப்புத் தொடர்பில் விளக்கம் குறைந்த இளம் வயதுடைய நபர்களையும் இந்த பணியாளர்களில் உள்ளடக்கப்படாத வகையில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு உரிய சட்ட திட்டங்களை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்தல் மாகாண அரச பொறிமுறையின் பொறுப்பாகும்

**நிறுவனப் பராமரிப்பு திட்டங்களை தயாரித்தல் மற்றும் மாற்று பராமரிப்பு முறைமைகளை அறிமுகப்படுத்தல் குறித்து அவதானம் செலுத்தல்**

சட்டப் பிரச்சினைகள், குடும்பத்தால் மீண்டும் பிள்ளையைப் பொறுப்பேற்பதை நிராகரித்தல், பிள்ளையை வளர்ப்பதற்காக வேறு சாராருக்கு வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்காமை போன்ற காரணங்களினால் சில பிள்ளைகளிக்கு 18 வயதின் பின்னரும் நிறுவனத்தில் தங்கியிருக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டதை அவதானிக்க முடியும். மேலும் சில சந்தர்ப்பங்களில் நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் பலவீனமான நிர்வாகம் காரணமாக பிள்ளைகளுக்கு மாற்றுக் குடும்ப பாதுகாப்பு கிடைப்பதற்கான சந்தர்ப்பங்கள் இழக்கப் பட்டுள்ளன. நிறுவனத்திலுள்ள அனாதை/ கைவிடப்பட்ட பகுதியினராகக் கருதப்படும் பிள்ளையை ஆரம்ப கட்டத்திலேயே பிள்ளையாக வளர்ப்பதற்கு வேறு சாரார்க்கு வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகள் காணப்பட்ட போதும் அது உரிய முறையில் செயற்படாமை தெரிய வந்துள்ளது. இதற்கான சட்டச் சட்டகத்தினுள் காணப்படும் சிக்கல் நிறைந்த தன்மை பிள்ளைகளைத் தத்துக்கொடுத்தல் மந்தகதியில் இடம்பெறுவதற்கு காரணமாக இருக்கலாம். எவ்வாறாயினும் காணப்படும் பொறிமுறையினுள் பிள்ளைகளைத் தத்துக்கொடுக்கும் செயன் முறையினை செயற்றினுடன் மேற்கொண்டு இந்த பிள்ளைகளை குடும்பத்தை அடிப்படையாகக் கொண்ட பராமரிப்பினை நோக்கி திசைப்படுத்துவதற்கு உரிய சாரார் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

சில சந்தர்ப்பங்களில் நிறுவன நிருவாகத்தினால் பிள்ளைக்கு வாழ்வதற்கான மிகப் பொருத்தமான இடம் சிறுவர் பராமரிப்பு மையம் என அடையாளம் காணப்பட்டதாகப் பதிவாகியுள்ளதுடன் இது பிள்ளையை சமூகமயப்படுத்துவதில் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளமை தெரிய வந்துள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைத் திணைக்களம் முழுமையாகத் தலையிட்டு பிள்ளைகளை சமூகமயப்படுத்துவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு பிள்ளையினதும் குடும்பச் சூழல், பெற்றோர்/ பாதுகாவலர் தொடர்பான தகவல்களைப் போன்று பிள்ளையின் உடல் மற்றும் உள ரீதியான தன்மைகளையும் கவனத்தில் கொண்டு ஒவ்வொரு பிள்ளைக்கும் தனிப்பட்ட ரீதியான பாதுகாப்புத் திட்டங்களை தயாரித்து மிகவும் குறுகிய காலத்தில் பிள்ளையை மீண்டும் சமூகமயப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை தயாரித்தல் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைத் திணைக்களத்தின் பிரதான பொறுப்பாகும்

**குடும்ப அலகினைப் பலப்படுத்தல்**

நிறுவனமயப்படுத்தப்பட்ட பிள்ளைகளின் குடும்பப் பின்னணியைத் தேடியறிந்தபோது கிழக்கு மாகாணத்தில் நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள 1,344 பிள்ளைகளில் 972 பேர் நிறுவனமயப்படுத்தும் சந்தர்ப்பத்தில் தாய்/தந்தை/பெற்றோருடன் வசித்து வந்துள்ளதாகவும், அச் சந்தர்ப்பத்தில் 1,269 பேரின் தாய்/தந்தை/பெற்றோர் உயிருடன் இருந்ததாகவும் பதிவாகியுள்ளது. அவ்வாறே தொகைமதிப்பினை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் தாய்/ தந்தை/ பெற்றோர் இருவரும் பாதுகாவலராக பதியப்பட்டுள்ள 1,029 பிள்ளைகள் பதிவாகியிருப்பதன் மூலம் இந்த பிள்ளைகளை மீண்டும் தமது குடும்பத்துடன் இணைப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருந்தன என்பது தெளிவாகின்றது

அவ்வாறு காணப்பட்டாலும் இந்தக் குடும்பங்களின் பொருளாதார நிலமை தொடர்பில் தேடியறிந்த போது இந்தப் பிள்ளைகளின் பெற்றோர்களில் பெரும்பான்மையானோர் பிள்ளைகளை மீண்டும் தமது குடும்பத்துடன் இணைத்துக் கொள்வதற்கு ஏற்ற பொருளாதார ஸ்திரத் தன்மையைக் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகின்றது. அவ்வாறே அதிக குடும்பச் சூழலில் சமூகம் சார்ந்த சிக்கலான தன்மை அவதானிக்கப்பட்டது. ஆகையால் இவ்வாறான பிள்ளைகள் காணப்படும் குடும்பங்களை அடையாளம் கண்டு அந்தக் குடும்ப அலகுகளை பலப்படுத்துவதற்கு தேவையான பொருளாதார மற்றும் உளச் சமூக ஒத்துழைப்பினை வழங்குவதற்காக பலம் வாய்ந்த பொறிமுறையொன்றை ஸ்தாபிக்க வேண்டியுள்ளது. இதற்காகப் பிரதேச மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள அரச பொறிமுறையின் தலையீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவது மிக முக்கியமானதாகும். இவ்வாறான செயன்முறைகள் மூலம் ஆதரவற்ற பிள்ளைகளின் எண்ணிக்கையைக் கவனத்தில் கொண்டு நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள 85% அளவான பிள்ளைகளை இலகுவாக அவர்களின் குடும்பங்களுடன் இணைப்பதற்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

போதுமானளவு நிதி ஒதுக்கீடு செய்தல்

அவ்வாறே நிறுவனமயப்படுத்தப்பட்ட பிள்ளைகளின் நல்வாழ்வினை உறுதிப்படுத்தும் போது அதற்காக மாகாணசபை மூலம் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை விடயத்திற்காக வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதியின் அளவும் முக்கியமானதாகும்.

அரச துறையால் நடாத்தப்படும் சிறுவர் பாராமரிப்பு மையங்களில் வசதிகளை பூரணப்படுத்துவதற்காகவும் சேவைகளை வழங்குவதற்காகவும் தேவையான ஒதுக்கீடுகளைப் போதுமானளவு பெற்றுக் கொடுத்தல் அரச திணைக்களத்தின் பொறுப்பாகும். அவ்வாறே தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடாத்தப்படும் சிறுவர் பாராமரிப்பு மையங்களில் வசதிகளை பூரணப்படுத்துவதற்காகவும் சேவைகளை வழங்குவதற்காகவும் உரிய தொண்டு நிறுவனம்/ தனியார் துறை தவறுமாயின் அரச பொறிமுறையின் தலையீட்டினால் அந்தப் வசதிகளை முழுமைப்படுத்தல் பிள்ளைகளுக்காக செய்ய வேண்டிய சேவையாகும். இந்த சகல தேவைகளுக்காகவும் போதுமானளவு மாகாண சபை மூலம் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவை விடயத்திற்காக வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதியின் அளவினை அதிகரித்துக் கொள்வதும் கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டியதொன்றாகும்.

இந்தத் தொகைமதிப்புக் கணக்கெடுப்புத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இதுவரைக்கும் நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள பிள்ளைகளை சமூகமயப்படுத்துவதற்காகவும், எதிர்காலத்தில் பிள்ளைகளை நிறுவனமயப்படுத்துவதைக் குறைத்துக் கொள்ளவும் ஏற்றவாறு நடவடிக்கை மேற்கொள்வதற்காக அதிகாரமுள்ளவர்கள் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

DCS

# 2019 சிறுவர் இல்லக் குழந்தைகள் பற்றிய தொகைமதிப்பு

## கிழக்கு மாகாணம்

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு
www.statistics.gov.lk

### தூரநோக்கு

"நாட்டின் அபிவிருத்திக் குறிக்கோளை அடைவதற்கு இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதன் மூலம் பிராந்தியத்தின் முன்னோடியாகத் திகழ்தல்."

### சேயல்நோக்கு

"உலகமயமாக்கலின் பின்னணியில் ஒரு வளமான நாடொன்றை உருவாக்கும் பொருட்டு புதிய தொழில்நுட்பம், பணியாளர்களின் அர்ப்பணிப்பு மற்றும் மூலோபாய தலைமை மூலம் சரியான நேரத்தில் துல்லியமான தரவுகளை வழங்குவதன் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் திறம்பட பங்களிப்பினை வழங்குதலே இதன் செயல் நோக்காகும்."

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
சங்கியான மந்திரய
இல.306/71, பொல்துவ வீதி,
பத்தரமுல்லை

info@statistics.gov.lk
+94112147000
+94112147400
+94112147011
www.statistics.gov.lk

இந்த வெளியீடு ஆராய்ச்சி மற்றும் விஷேட கற்கைகள் பிரிவால் தயாரிக்கப்பட்டது.
research@statistics.gov.lk
+94112147473
+94112147474

மூலம் அச்சிடப்பட்டது:
அச்சிடும் பிரிவு, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்